# பொன்னாடை போர்த்திய
# விழா மலர்



பேராசிரியர்

திரு. ஆ. கார்மேகக் கோனார் அவர்கள்

பேராசிரியர்

திரு. ஆ. கார்மேகக் கோனார் அவர்கட்கு

பொன்னாடை போர்த்திய

# விழா மலர்

17-1-55

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMILSANGAM
அறுமுக முதலியார் M.A.B.T. அன்பளிப்பு சென்னை-20.

வெளியிடுபவர் :

மதுரை, திருவள்ளுவர் கழகத்தார்

மதுரை

மதராஸ் ரிப்பன் பிரஸ்,
புதுக்கோட்டை.



பேராசிரியர், ஆ. கார்மேகக் கோனார்.

# முகவுரை

ஒரு நாட்டின் உரிமையை நிறுவுபவர் அந்நாட்டின் மறவரும் அறிஞரும் ஆவர். மறவர் உடல் பொருள் உயிரை மதியார். அறிஞர் பசி பிணி உறக்கம் பாரார். மாற்றூர் படை தாயகத்து மண்ணின் வரின், அதனை மறவர் மாய்ப்பர், வேற்றுமொழி தந்தாய் மொழி மேற் பாயின் அதனை அறிஞர் தேய்ப்பர். வேலும் வாளும் மறவர் கரத்து விளங்கும். ஏடும் எழுத்தாணியும் அறிஞர் கரத்து இலங்கும். ஆனால் மறவர் கைவேல் பகை வெல்வது, புலவர்கை யெழுதுகோலால் எனின் அப்புலவர் சிறப்புப் புகழ்ச்சிக் குட் பட்டதோ ? இதனாலேயே வென்ற மன்னர், மறவர்க்கும் புலவர்க் கும் தண்ணடையும் பரிசும் வழங்கி நன்றி காட்டினர் அன்று. இன்று அந்நிலை யெங்கும் இல்லையாயிற்று.

இதனை யுணர்ந்த கழகத்தார், தம் வாணாளெல்லாம் நம் நாடு மொழி யினங்கட்கு அயராதுழைத்த அறிஞர்க்கு நன்றி காட்டுவ தென முடிவு செய்தனர். காலமெல்லாம் நூலாராய்ந்தும் நூலெழு தியும் கண்ணொளி மழுங்கியும் கருத்துத் தளர்ந்தும் இளமையிலும் முதுமை யெய்தியுள்ள அவ் வேந்தல்களை மீளவும் இளைஞர் ஆக்க வல்லது எதுவெனக் கழகத்தார் காணலாயினர், வாடிய உள்ளத் துக்கொரு வாழ்த்துரை, பாடுபட்ட மனத்துக்கு ஒரு பாராட்டு, பன்னாளாக உழைத்த உழைப்புக் கொரு பொன்னாடை அது வென அறிந்தனர். ஆண்டுதோறும் ஒவ்வொரறிஞர்க்கு இம் முறையில் நன்றி காட்டுவதென முடிவுசெய்து இளசை கிழார் - பசுமலை நாவலர் திரு, ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்., அவர்கட்குச் சென்ற ஆண்டு பொன்னாடை போர்த்தினர். ***'கணக் காயர்'*** என்னும் சிறப்புப் பெயர் நல்கினர்.

இவ்வாண்டும் வழக்கம்போலத் தமிழர் திருநாளாம் பொங்கற் புதுநாளில் அறிஞர் ஒருவரைப் போற்ற ஆவல் கொண்டனர். கழகத்தார் எண்ணம்போலக் கிடைத்தார்கள் ***பேராசிரியர் திரு, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்.*** இவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களில் ஒருவர் ; புலத்துறை முற்றியவர். இக்கால நக்கீரர்; அமெரிக்கன் கல்லூரியில் கடந்த முப்பத்தேழு ஆண்டுகள்

பேராசிரியராக அமர்ந்து தொண்டாற்றிய அறிஞர். ஈடும் எடுப்பு மில்லாத உரைநடை யெழுதுவதினும் பண்டைச் சங்கப் புலவர் போலச் செய்யுள் யாத்தலினும் இவர்கட்கு இவர்களே ஒப்பு. கேட்டாரைப் பிணித்துக் கேளாரையும் வேட்பச் செய்யும் பழுதறு சொல்லாற்றல் படைத்தவர். இவை யெல்லாவற்றினு மேற்படப் புலமையோடு தொடர்புடைய வறுமையைக் குழி தோண்டிப் புதைத்தவர், அரிய பல தமிழ் நூல்களின் ஆசிரியர், ஏனையோர்க்குதவும் இயல்பினர். பாண்டி நாட்டின் பழம் புலமையைப் பாதுகாப்பவர். நாடெல்லாம் அறிந்த நாவலர், இவர்கட்குச் சிறப்புச் செய்வது இன்பத் தமிழுக்குச் செய்யும் சிறப்பெனக் கழகத்தார் எண்ணினர். அவர்கள்பாலுஞ் சென்று அறிவித்தனர், அவர்களும் கழகத்தாரின் இந்நன்றிக் கருத்துக் குடன்பட்டு வருகை புரிந்து ஏற்றுக் களிப்பூட்டினர். பேராசிரியர் அவர்கட்குப் பொன்னுடை போர்த்தியும் ‘***செந்நாப்புலவர்***’ என்னுஞ் சிறப்புப் பெயர் வழங்கியும் கழகத்தார் மகிழ்ந்தனர்.

இப்பெரு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கும் பண்பு, தகுதி பாண்டிய மன்னர்கட்கு உண்டு. ஆனால் இந்நாளில் பாண்டியர் ஆட்சியில்லை. என்றாலும் பாண்டிய ராசர்போல விளங்குபவர்கள் பாளைய ராசரான திரு, பி. டி. இராசனவர்கள், அவர்கள் முன் னின்று பேராசிரியர்க்குப் பொன்னுடை போர்த்தினர். புலமை யுலகில் ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழும் பசுமலை, நாவலர் - கணக்காயர் - திரு, ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமை தாங்கினர். வழக்குரைஞர் திரு, சீனிவாசன் பி. ஏ., பி. எல்., மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர்கள் திரு, மா. இராசமாணிக்கனார் எம். ஏ., எம். ஓ, எல்., எல். டி., பி. எச். டி., அமெரிக்கன் கல்லூரி முதல்வர் திரு, J. சவரி ராயன் எம். ஏ., திருமங்கலம் நாடார் உயர்பள்ளித் தலைமை யாசிரி யர். திரு, அருணசலம் எம். ஏ., எல். டி., தமிழ் விரிவுரையாளர் திரு, நா. பாலுசாமி எம். ஏ., ஆகிய இப்பேரறிஞர்கள் ஆர்வத்தோடு பேராசிரியரைப் பாராட்டிப் பேசினர். தமிழக மெங்குமுள்ள செல்வர்களும், வள்ளல்களும், அறிஞர்களும் பாராட்டுரைகளும் பாக்களும் எழுதி வழங்கியுள்ளனர்.

இவற்றையெல்லாந் திரட்டி என்றென்றும் நிலைக்குமாறு நூலாக்க வேண்டுமென்பது கழகத்தாரின் பேராவ. அவ்வண்ணம் நிறைவேருவண்ணம் குறுக்கே நிற்பது பொருட் குறைபாடு. இதனுல் நூலாக்க இயலாமை குறித்து ஏக்கமுற்ருேம். அந்த ஏக்க மொழிகவென முன்வந்தனர், புதுமண்டபத்துப் புகழ்பெற்ற புத்தகவெளியீட்டாளர் திரு, ***ஏ. டி. என் நாகலிங்கக் கோனுர்*** அவர்கள். இவர்கள் கழக விழாக்களுக்கெல்லாம் சலியாது பொருளுதவி புரியும் தண்ணளிமிக்கார்; இனிமையும் இரக்கமும் மிக்க இவர்கள் தம் இயல்புக்கேற்ப இப்பொன்னுடை போர்த்து விழா நிகழ்ச்சியின் பாராட்டுரைகளைத் தொகுத்துக் கழக வெளி யீடாக வெளியிடற்கு வேண்டும் பொருள் முழுவதையும் வழங்கியுள் ளார். இம்மாநகராம் மதுரையிலுள்ள பெருமக்கள் தம் மனம்மகிழப் பொருள் உதவி, இவ்விழாச் சிறப்புற நிகழ உதவியுள்ளனர். முன் ஞள் ஆவணப் பதிவரும் கழகத்து உறுதுணையாளருமாகிய திரு வாளர் பொன்னையாக் கோனுரவர்கள் இந்நிகழ்சிக்கு எல்லையற்ற உதவிகள் புரிந்துள்ளனர். இங்ஙனம் பல்லாற்ருனும் உதவிக் கழகப்பணியை வெற்றிபெறச்செய்த இங்குக்கண்ட எல்லார்க்கும் வாழ்வு தழைக்கவேண்டும். வளம் பெருகவேணும், மரபு தழைக்க வேண்டும், என்று வாழ்த்திக் கழகத்தார் கனிவுமிக்க தம் நன்றி யைக் களிப்புடன் வழங்குகின்றனர்.

இங்ஙனம் தங்களன்புள்ள,

**பண்டித, மீ. கந்தசாமிப் புலவர்,**
செயலாளர்,
மதுரைத் திருவள்ளுவர் கழகம்.

வடக்காடி வீதி,
**மதுரை,**

பொன்னுடை போர்த்திச் சிறப்புறச் செய்த அவையில்

## பாராட்டுரை பகர்ந்தோர்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | திரு, | ***எஸ். கே. சவரிராயன்*** M. A., அவர்கள், அமெரிக்கன் கல்லூரித் தலைவர், மதுரை. | 3 |
| 2 | ,, | டாக்டர், ***மா. இராசமாணிக்கனர்***, பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை. | 4 |
| 3 | ,, | ***பி. சீனிவாசன்***, B. A., B. L., வழக்கறிஞர், மதுரை. | 7 |
| 4 | ,, | ***பி. அருணசலம்***, M. A., L. T., தலைமையாசிரியர், திருமங்கலம். | 13 |
| 5 | ,, | ***ந. பாலுசாமி*** M. A., தியாகராசர் கல்லூரி, மதுரை. | 16 |


## பாராட்டுக் கடிதங்கள் அனுப்பியோர்


| | | | |
|---|---|---|---|
| 1 | திரு, | ***ராஜா ஸ்ரீ ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி அவர்கள்.*** | 23 |
| 2 | ,, | "செட்டிநாடு" ***ராஜா, சர். மு. அ. முத்தையா செட்டியாரவர்கள்.*** | ,, |
| 3 | ,, | ***வி. வி. இராமசாமி நாடார் அவர்கள்***, M. L. C. | 24 |
| 4 | ,, | ***எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள்***, B. A , B. L. | 25 |
| 5 | ,, | டாக்டர் ***ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்***, B A.,B.L. | ,, |
| 6 | ,, | டாக்டர், ***மா. இராசமாணிக்கனர்***, M. A., L. T., M. O. L., Ph. D. | 26 |
| 7 | ,, | ***S. ஆறுமுக முதலியார் அவர்கள்***, M. A., L. T. | 27 |
| 8 | ,, | ***பெரி. சுந்தரம்*** Bar-at-law. | 28 |
| 9 | ,, | டாக்டர் ***மொ. அ. துரை அரங்கசாமி அவர்கள்***, M. A., M. O. L. | 29 |
| 10 | ,, | ***பூ. ஆலாலசுந்தரம் செட்டியாரவர்கள்***, M A. | 30 |
| 11 | ,, | ***எல். எஸ். கரையாளர் அவர்கள்***, B. A., B. L. | 32 |
| 12 | ,, | ***கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்.*** | 33 |
| 13 | ,, | ***கி. வா. ஜெகநாதன் அவர்கள்***, M. A. | 34 |
| 14 | ,, | சிவக்கவிமணி, ***சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்***, B. A. | ,, |

15 ,, *எஸ். ஏ. ஐயாச்சாமி செட்டியாரவர்கள்,*
M. A., B. L, 35
16 ,, *ஆ. அருளப்பன் அவர்கள்,* B. A. 36
17 ,, S. *ருத்திரபதி அவர்கள்,* M. A. 37
18 ,, *ஆ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்,*
M. A., B L., B. O. L (Hons). 38
19 ,, *ப. துரைக்கண்ணு முதலியாரவர்கள்,*
M. A., M. A., L. T. Dip. E. C. 39
20 ,, *ந. சுப்பு ரெட்டியார் அவர்கள்,* M. A., B. Sc., L. T. 40
21 ,, N. P. *பழனியப்பன் அவர்கள்,*
M. Sc. Tech (Mors). 42
22 ,, K. G. *கிருஷ்ணன் அவர்கள்,*
M. Sc. (Hons) A. M. C. T. F. E. S. 43
23 ,, வித்துவான், *மு. கோவிந்தசாமித்தேவர் அவர்கள்.* 44
24 ,, T. V. *சதாசிவ பண்டாரத்தார் அவர்கள்.* 45
25 ,, *அர. ச. நாராயணசாமி நாயுடு அவர்கள்,* M. A. ,,
26 ,, *சுப. அண்ணுமலை அவர்கள்,* B. O. L. (Hons). 46
27 ,, *லக்ஷ்மி நரசிம்மன் அவர்கள்.* 47
28 ,, G. *கோவிந்தன் அவர்கள்,* M. L. A. 49
29 ,, *ராஜ்குமார் காசிநாதத்துரை அவர்கள்.* ,,
30 ,, *சொ. முருகப்பா அவர்கள்.* 50
31 ,, *ம. துரைச்சாமி முதலியார் அண்டு கோ,* சென்னை. ,,
32 ,, *ம. ரா. அப்பாத்துரை அவர்கள்,* B. A., சென்னை. 51
33 ,, பேராசிரியர், *புன்னைவனநாத முதலியாரவர்கள்.* 52
34 ,, *தி. இராமானுஜன் அவர்கள்,* ,,
35 ,, A. T. N. *நாகலிங்கம் அண்டு கோ.,* மதுரை. 53


## வாழ்த்துப் பாக்கள் பாடியவர்கள்.


36 ,, *மதுரைத் திருவள்ளுவ கழகத்தார்.* 54
37 ,, இளவரசு, திருப்பெருந்திரு, *சோமசுந்தர தேசிக*
*பரமாசாரிய அடிகளாரவர்கள்.* 56
38 ,, கவியரசர், *பாரதிதாசன் அவர்கள்.* 57
39 ,, *அ. வரத நஞ்சைய பிள்ளையவர்கள்,* 59
40 ,, *கே. பாலசுந்தர நாயக்கரவர்கள்.* M. A. ,,
41 ,, ஔவை, *சு. துரைச்சாமி பிள்ளையவர்கள்.* 60

| | | | |
|---|---|---|---|
| 42 | ,, | வித்துவான், மே. வீ. வேணுகோபால பிள்ளையவர்கள். | 62 |
| 43 | ,, | தி. சங்குப் புலவர் அவர்கள். | ,, |
| 44 | ,, | வைநாகரம், வே. இராமநாதன் செட்டியார் அவர்கள். | 63 |
| 45 | ,, | எஸ். ஆழ்வாரையங்கார் அவர்கள். | 64 |
| 46 | ,, | பி. பாஸ்கரய்யர் அவர்கள். | 65 |
| 47 | ,, | ந. அப்பனையங்கார் அவர்கள். | 66 |
| 48 | ,, | அ. சிவசுப்பிரமணி ஐயரவர்கள். | ,, |
| 49 | ,, | அ. இராஜகோட்டியப்பன் அவர்கள். | 67 |
| 50 | ,, | ந. சேது ரகுநாதன் அவர்கள், | 68 |
| 51 | ,, | சோதிமுத்து அவர்கள் M. A. BD. | 69 |
| 52 | ,, | சி. துரைச்சாமி அவர்கள். | ,, |
| 53 | ,, | அ. கி. பரந்தாமனாரவர்கள், M. A. | 70 |
| 54 | ,, | அ. முத்துச்சாமிப புலவரவர்கள், | 71 |
| 55 | ,, | வி. அ. அரங்கசாமி அவர்கள். | 72 |
| 56 | ,, | எஸ். குருஸ் அந்தோணி அவர்கள், M. A. | ,, |
| 57 | ,, | வி. ப. நடராசன் அவர்கள். | 73 |
| 58 | ,, | வீ. உலகவூழியனார் அவர்கள். | 76 |
| 59 | ,, | சி. இலக்குவனாரவர்கள், M. A., M. O. L. | ,, |
| 60 | ,, | வி. சூ. சுவாமிநாதன் அவர்கள். | 77 |
| 61 | ,, | சி. நயினார் முமமது அவர்கள், M. A. | ,, |
| 62 | ,, | பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள். | 78 |
| 63 | ,, | வெ. முத்துராக்குக் கோனாரவர்கள். | 79 |
| 64 | ,, | நா. இராமையா பிள்ளையவர்கள். | 80 |
| 65 | ,, | சி. இராமசாமி அவர்கள். | 81 |
| 66 | ,, | ச. கூர்மாவதாரக் கோனாரவர்கள். | 82 |
| 67 | ,, | ர. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். | 83 |
| 68 | ,, | க. வே. நடராஜன், B. O. L. | 84 |
| 69 | ,, | நா. கூத்தப்பன் அவர்கள். | ,, |
| 70 | ,, | கதி. சுந்தரம் அவர்கள். | 85 |
| 71 | ,, | இரா. வே. நாராயணன் அவர்கள், B. O. L (Hons). | 86 |
| 72 | ,, | அ. கி. செல்வக்கணபதி அவர்கள். | ,, |
| 73 | ,, | நா. தேசிகன் அவர்கள். | 87 |

பேராசிரியர், திரு, ஆ. கார்மேகனார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு. 88



பேராசிரியர் தந்தையார் - ஆயர்பாடிக் கோனர்.

## பேராசிரியர்

# திரு. ஆ. கார்மேகக் கோனார்

## அவர்கட்கு

# பொன்னாடை போர்த்தும் விழா

மதுரை, திருவள்ளுவர்கழகச் சார்பில் **17-1-55** திங்கட் கிழமை தமிழ்த் திருநாளன்று தமிழவேள் திரு. பி. டி. இராஜன் அவர்கள் மதுரைத் தமிழ்ப் பேராசிரியர் **திரு. ஆ. கார்மேகக் கோனார்** அவர்கட்கு பசுமலை, நாவலர், கணக்காயர், திரு. ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னாடை போர்த்தி ''செந்நாப்புலவர்'' என்ற சிறப்புப் பட்டமும் வழங்கிய நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு முன்னதாக மாலை 4 மணி அளவில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து திரு. கோனாரவர்கள் இரட்டைக் குதிரைகள் பூட்டிய பெரு வண்டியில் அமர கழகத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பெற்றார்கள். ஊர்வலத்தில், பல படிப்பகத்தார்களும், தனிப்பட்டோரும் பேராசிரியருக்கு மாலை சூட்டினர். மீனாட்சி சுந்தரர் திருக்கோவிலின் திருமுன்பு கோயிலின் அறப்பணி மன்றச் சார்பில் ''பேஷ்கார்'' திரு. தங்கவேலு தேசிகரவர்கள் பேராசிரியர் அவர்கட்கு மாலை சூட்டிக் கோயில் பட்டரவர்களைக் கொண்டு திருநீறு அளிக்கச்செய்தார். பின்னர் திருவள்ளுவர் கழகப் புரவலர் தமிழவேள் திரு. பி. டி. இராஜன் அவர்கள் கோயிலின் முன் மண்டபத்திலிருந்து கோனாரவர்களை வடக்காடி வீதி திருவள்ளுவர் கழகப் பந்தல் மேடைக்கு மேளதாளத்துடன் அழைத்து வந்து பொன்னாடை போர்த்தி மகிழ்ச்சியுரை பகர்ந்தார்கள்.

பொன்னாடை போர்த்திய **திரு. பி. டி. இராஜன்** Bar-at-law M. L. A., அவர்கள், ''பண்டைத் தமிழகத்தில் மன்னர்கள், சிறந்த தமிழ்ப் புலவர்களைப் பொன்னாடை

போர்த்தி, அவர்களின் தொண்டைப் பாராட்டுவது அவர்களுடைய மரபு; இப்பணியைத் தற்காலத்தில் இம்மதுரைத் திருவள்ளுவர் கழகம் ஏற்று நடத்துகிறது; தமிழாசிரியர்களுக்கு மதிப்பற்று இருந்த முப்பது ஆண்டுகளுக்கு முந்தின அந்தக் காலத்திலுங்கூட திரு. கோனுர் அவர்கள் தம்முடைய சிறந்த புலமையினுலும் செல்வாக்கினுலும் நன்மதிப்பை மாணவர்களிடையேயும், பொது மக்களிடையேயும் அடைந்தார்; இச்சிறப்பு இவர்கட்குச் செய்வதுபற்றி மிகவும் மகிழ்ச்சியுறுகிறேன்'' என்று கூறினுர்.

## தலைவர் முன்னுரை :

கணக்காயர், நாவலர் **திரு. ச. சோமசுந்தர பாரதியார் M. A., B. L.** அவர்கள் உரை :

மதுரை, புலவர் பெருமக்களைக் கொண்டது என்பது வரலாற்று உண்மையாகும். பொது உடைமைக்காரர்கள் கூடப் புலமையை வெறுத்துவிட முடியாது. இந்த விழாவிலே சிறப்பாகப் பண்டை மதுரை இயல்பை மறவாமல் பெரும் புலவரைப் பாராட்டுகின்ருேம். அந்தக் காலத்தில் கல்லூரிகளில் தமிழாசிரியர்கள் மதிக்கப்படாமலிருந்தார்கள். சென்ற சில ஆண்டுகளாகப் புலவர்களுக்கு நன்மதிப்புக் காட்டப்பட்டு வருகிறது. அந்த முறையில் இன்றைய நிகழ்ச்சி நடைபெறுகிறது. கோனுரவர்கள் தொண்டும், ஆசிரியப் புலமையும் அவர்கள் எழுதிய ''நல்லிசைப் புலவர்கள்'' என்ற நூலிலிருந்து அறியலாம். அந்நூலில் தமிழர்கள் அறிந்துகொள்ள வேண்டிய பல கருத்துக்கள் அடங்கியுள்ளன. இன்று இவர்கட்குக் கழகம் செய்யும் பாராட்டு மிகவும் பொருத்தமானதாகும். இவர் இன்னும் தமிழ்த் தொண்டு புரிந்து நலத்துடன் வாழத் திருவருளைச் சிந்திக்கின்றேன்.



பொன்னுடை போர்த்தியபின் மேடையில் அமர்ந்திருக்கும் தோற்றம்.
1. பேராசிரியர், ஆ. கார்மேகக் கோனர். 2. நாவலர், S. S. பாரதியார். 3. தமிழவேள், பி. டி. இராசன்.

## பாராட்டிப் பேசியவர்கள் :

*அமெரிக்கன் கல்லூரித் தலைவர்*

**திரு. S. J. சவரிராயன் M. A.,** *அவர்கள் பேச்சு :*

*30, 40* ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் பேசுவது இழிவு என்றிருந்தது. இப்போது தமிழிலே ஒருவன் பேச இயலவில்லையானால் அது இழிவாகும். எனக்குத் தமிழில் பேசுவதற்கு ஊக்கம் அளித்ததே திரு. கோனுரவர்கள்தான். கோனுரவர்களால் அமெரிக்கன் கல்லூரி மிகவும் புகழ் பெற்றிருக்கிறது. மாணவர்கள் இவரிடம் சிறப்பான மதிப்பு வைத்து ஒழுகி வந்தார்கள். கோனுரவர்கள் தமிழ்த் துறையில் மட்டுமன்றிப் பொது அறிவுத் துறைகளிலும் நல்ல திறமையுள்ளவர். அமெரிக்கன் கல்லூரியில் தமிழ் மொழிக்கு மட்டுமன்றி இந்திய மொழிகளுக்கும் தலைவராக இருந்தார். முதல்தரக் கல்லூரிகளில் ஒரு பாடத்துறைக்குத் தலைவராக விளங்குதற்குப் பல்கலைக்கழக பட்டங்களுள் தமிழ் M A., அல்லது B. O. L. பட்டங்கள் வேண்டும். கோனுரவர்கள் யுனிவர்சிட்டிப் பட்டம் பெறாது போனாலும் இவர்களது திறமையினாலும் அநுபோகத்தினாலும் அமெரிக்கன் கல்லூரிக் கவுன்சில் இந்திய மொழித் தலைவராக (Head of the Department of Indian Languages) நியமித்ததை யுனிவர்சிட்டி சிண்டிகேட், யாதொரு தடையுமின்றி ஒப்புக்கொண்டது. இந்நிலை, கல்லூரிகளில் பட்டம் பெறாத வேறு யார்க்கும் கிடைக்கப் பெறாத ஒரு சிறப்பியல்பாகும். இதனால் சென்னைப் பல்கலைக் கழகம் இவரைப்பற்றிக் கொண்டிருந்த நன்மதிப்பு இத்தகையதென்று நன்கு விளங்குகிறதல்லவா. இன்று செய்யும் சிறப்பு இவர்கட்கு எவ்வளவு தகுதியானது என்பதனை யான் சொல்ல வேண்டுவதில்லை. கோனுரவர்கள், கல்லூரியினின்றும் ஓய்வு பெற்ற பின்பும் அவ்வப்போது எனக்கு நல்ல ஆலோசனை கூறுபவராய் இருந்து வருகிறார்கள். இவர் உடல் நலத்தோடு பல்லாண்டு வாழும்படி இறைவனை வழுத்துகின்றேன்.

### திரு. பேராசிரியர்

## டாக்டர் மா. இராசமாணிக்கனுர்

### M. A., M. O. L., L. T., Ph. D.

### அவர்களின் சொற்பொழிவு :

பேராசிரியர் திரு. கார்மேகக்கோனுர் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 1904-முதல் எட்டு ஆண்டுகள் படித்துப் புலமை பெற்றவர்; 37 ஆண்டுகள் மதுரை அமெரிக்கன் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக இருந்து தமிழ்ப் பணி ஆற்றியவர்; சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பாடத் திட்டக் குழுவில் 21 ஆண்டுகள் தொடர்ந்து உறுப்பினராக இருந்து தமிழ்த்தொண்டு செய்தவர். இப்பெரியார் இப் பரந்துபட்ட காலத்தில் தமிழகத்தில் நடைபெற்ற தமிழ்ச் சங்க ஆண்டு விழாக்கள் பலவற்றில் சொற்பொழிவாளராக வும் தலைவராகவும் இருந்து தமிழ் வளர்ச்சிக்காக ஆற்றிய பேருரைகள் பல. இப்பேரறிஞருடைய புலமையையும் பேச் சுத் தன்மையையும் கவனித்த சென்னைப் பல்கலைக் கழக அதி காரிகள் பல்கலைக் கழகச் சார்பில் "பண்டைத் தமிழர் நாகரி கம்" என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சிச் சிறப்புச் சொற் பொழிவுகள் ஆற்றும்படி வேண்டிக்கொண்டனர். இப் பேரா சிரியர் அவ்வேண்டுகோளுக்கு இணங்கி 1927-ம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் சென்னை சென்று பல்கலைக் கழகச் செனட் மண்டபத்தில் நான்கு சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றினுர்; ஆற்றித் தமிழ்ச் சான்ருேர்களது பாராட்டுக் குரியரானுர். இவர்கட்குப் பல்கலைக் கழகம் முந்நூறு வெண்பொற் காசுகளைப் பரிசிலாக நல்கி மகிழ்ந்தது.

கல்லூரி வகுப்புகளில் இசையுடனும் பொருள் அமைதி யுடனும் பாடம் கற்பிப்பதில் பெயர்பெற்று விளங்கிய கார ணத்தால், தமிழாசிரியர்கள் மதிப்புப்பெருத அக்காலத்தில் இப்பேராசிரியர் மட்டும் தமிழ் மாணவர்தம் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரியவராக விளங்கினுர். "சமுதாயத்தில் பல கட்சிகள் உண்டு. அவையன்றிப் பல சமயங்களுமுள்ளன. இப்பல கட்சிகளையும் பல சமயங்களையும் சேர்ந்த பெற்ருேர்

களின் பிள்ளைகள் ஒவ்வொரு பள்ளியிலும் படிக்கின்றனர். இப்பிள்ளைகள் அனைவருக்கும் ஆசிரியர் பொது அறிஞராக இருந்து அறிவு புகட்டவேண்டுமேயன்றி, ஒரு தனிப்பட்ட கட்சியைப்பற்றிய அல்லது சமயத்தைப்பற்றிய தம் கருத்துக்களை ஆசிரியர், பிள்ளைகளின் உள்ளங்களில் பதியும்படி செய்வது சமுதாயத் துரோகமாகும். ஆதலால் ஆசிரியர்கள் எக்கட்சியிலும் சேராமல், இவ்வுண்மையை உளங்கொண்டு தாம் பணிபுரியும் கலைக்கூடத்தில் பணியாற்ற வேண்டும் என்பது கல்வி, கேள்வி, ஒழுக்கம் இவற்றில் சிறந்த சான்றோர் கருத்து. இக்கருத்தினை உளங்கொண்டு நடுநிலை பிறழாமல் ஆசிரியப் பணிபுரிந்த பெருந்தகை நமது இப்பேராசிரியர்.

இப்பெரியார் ஏறத்தாழ 30 ஆண்டுகட்கு முன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தனித்தமிழ் வித்துவான் வகுப்புகள் ஏற்படுவதற்கு முன்-சங்கநூல்களைப் பலர் படியாததற்குமுன்-எட்டுத்தொகை நூல்களை நன்கு ஆராய்ந்து, ''நல்லிசைப் புலவர்'' என்னும் சிறந்த செந்தமிழ் நூலை ஆராய்ச்சிக் குறிப்புகளோடு எழுதி வெளியிட்டனர். பல்வேறு காலங்களில் பல்வேறு வள்ளல்கள் மீது பல்வேறு புலவரால் பாடப்பெற்ற செய்யுட்களை வரலாற்று முறையில் தொகுத்து, அப்பாடல்களின் பொருள் தெரிந்து,அவற்றை முறைப்படுத்தி, புலவர்தம் வரலாறுகளை எழுதுவதென்பது எளிதான செயலன்று. ஆராய்ச்சி என்பது தமிழகத்தில் குழவிப் பருவத்திலிருந்த அக்காலத்தில் (30 ஆண்டுகளுக்கு முன்) ஆராய்ச்சி ஓரளவு வளர்ச்சிபெற்ற இக்காலத்திலும் அரும்பாடுபட்டு எழுத வேண்டிய ஒரு நூலை இப்பேராசிரியர் திறம்பட எழுதியிருத்தல் அது எழுதப்பெற்ற காலநிலையை நோக்கின் மிகவும் பாராட்டற்குரியதாகும். அந்நிலையில் அன்று எழுதப்பட்ட அந்நூல் என்றுமே புலவர் வரலாறுகளை எழுதச் சிறந்த வழிகாட்டியாக இருக்கின்ற உண்மையைத் தமிழறிஞர் மறுக்கார். இவர் தம் புலமையையும் ஆராய்ச்சி வன்மையையும் நாடறியச் செய்ய இவ்வொரு நூலே போதுமானதன்றோ?

''உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்'' என்றார் இராமலிங்க அடிகள்; உள்

ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத நற்பண்பினை நம் பேராசிரியரிடம் கண்டு மகிழலாம். எதனையும் நேருக்கு நேராகக் கேட்டு உடனுக்குடன் அவற்றை மறந்து விடும் பெருந்தன்மை இவர்கள் பால் உண்டு. என்றும் மலர்முகம், இன்சொல் இவைகளே இவரிடம் காணப்படும். தமிழ் பயின்ற புலவருக்கு வேலை தேடித்தருவதிலும் ஊக்கமளிப் பதிலும் இவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். தமிழ்ப்பெரும் புலவர்கள் மதுரைக்கு வரும்போதெல்லாம் இப்பெரியார் அவர்களை வரவேற்று உபசரித்து இன்முகத்துடன் விருந் தளித்துப் பாராட்டும் திறன் பார்த்து மகிழத் தக்கது. இச்சீரிய பண்பு ஒவ்வொரு ஊரிலுமுள்ள புலவரிடம் இருக்கு மாயின் புலவர் உலகம் புனிதமடையுமன்றோ? ஒற்றுமையும் பலமும் பொருந்தியதாகுமன்றோ?

''புலவர் காய்ச்சல்'' என்பதைப் புறங்கண்ட இப் பேராசிரியர் அச்சத்தையும் புறங்கண்டவராவர். தவறு என்று தமக்குப் பட்டதைச் சிறிதும் அஞ்சாமல் வெளியிடும் ஆற்றல் பெற்ற தமிழறிஞர் இந்நாட்டில் மிகச் சிலரேயாவர். அவருள் தலை சிறந்தவர் நாவலர் சோமசுந்தர பாரதியாரும் நமது மதிப்பிற்குரிய பேராசிரியருமே ஆவர். ஔவையார் வரலாறு கதையாக்கப்பட்டுப் படம் பிடிக்கப்பட்டுத் தமிழ் நாடு முழுவதும் காட்டப்பட்டது அனைவரும் அறிந்ததே. புலமையிலும் அரசியல் அறிவிலும் பண்பட்டு விளங்கிய ஔவையாரும் பெருநாவலராகிய திருவள்ளுவரும் ஒழுக்கம் தவறிய இருவருக்குப் பிறந்தனர் என்று எழுதப்பட்ட பொய்க் கதையினையும் ஆராய்ச்சிக்குப் பொருந்தாத பிற செய்திகளையும் கொண்டு ஔவையார் வரலாறு படமாக்கப் பட்டதை அஞ்சாது மதுரையில் நடைபெற்ற குறள் மாநாட்டில் கண்டித்தவர் தமிழ்ப் பேராசிரியர் நம் கோனார் அவர்கள். அப்பேச்சுக்களின் இடையில்: தமிழ்ச் சமுதாயத் திற்கேஇழிவைத் தரும் இத்தகைய படங்களைப் பொது மக்களும் அரசியலாரும் ஏன் தடுக்கவில்லை? இதுபற்றி அவர்கள் வாளா இருந்தது வருந்தத்தக்கதாகும் என்று அவர்கள் கேட்ட கேள்வி, மான உணர்ச்சியுடைய தமிழர்

ஒவ்வொருவரும் கேட்கவேண்டும் கேள்வியன்றோ? அவர்கள் அன்று பேசிய அப்பேச்சு மதுரையில்வெளி வரும் தமிழ்நாடு, தினத்தந்தி என்னும் நாளிதழ்களில் விரிவாக வெளிவந்துள்ளது.

இங்ஙனம் தமிழுக்கோ தமிழர் நலத்துக்கோ கேடு சூழப் படுமென்பதை அறிந்தவுடன் எவருக்கும் அஞ்சாமல் பேசும் உள்ள உரம் இப்பேராசிரியரிடம் காணப்படுவது மகிழ்ச்சிக் குரியதாகும். இவ்வியல்பு தமிழ் இளைஞர்கள் போற்றிப் பின் பற்றத் தக்கதாகும். இப்பெரியாருடைய சீரிய பண்பாடனைத்தும் தமிழ் இளைஞர்பால் வளர்ந்து ஓங்குவதாகுக!

நிறைந்த புலமையும், சிறந்த சொல்லாற்றலும், விரிந்த சிந்தையும், பரந்த நோக்கமும் உடைய இப்பேராசிரியருக்கு மதுரைத் திருவள்ளுவர் கழகச் சார்பிலும், கற்றோர் நிறைந்த இப்பேரவையின் சார்பிலும் எல்லாம் வல்ல இறைவன் திருவருளை உளங்கொண்டு ''செந்நாப்புலவர்'' என்னும் சீரிய பட்டத்தை வழங்கிப் பொன்னுடை போர்த்துகின்றனர். இப்பெரியார் மேலும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் தமிழருக்கும் தொண்டு செய்ய அம்மையப்பர் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

பேராசியரவர்களின் மாணாக்கரும்
மதுரை வழக்கறிஞருமான
**திரு. பி. சீனிவாசன் பி. ஏ., பி. எல்.**

அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு:

அன்பும் அறிவும் சான்ற அவைத்தலைவரவர்களே, மதுரை மாநகரின் மாண்புமிகு மக்களே,

எனது பேராசிரியருக்குப் பொன்னுடை போர்த்திப் பெருமைப் படுத்துமிந் நன்னாட்பணியில் என்னையு மீடுபடுத்தி, இப் பெருவிழாவிற் கலந்துகொள்ளும் பெறற்கரிய வாய்ப்பை நான் பெறச்செய்த இத் திருவள்ளுவர் கழகத்தாருக்கு என் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

"எந்நாட்டு மக்கள் தங்கள் நாட்டின்மீது பற்றுக்கொள்ள வில்லையோ, எந்நாட்டினர் தமது மொழியைப் போற்றிப் பாராட்டவில்லையோ, எந்நாட்டார் தமது புலவர்களுக்கு உண்மையுடனும் உவப்புடனும் உயர்நிலை யளிக்கவில்லையோ அந்நாடும் அந்நாட்டு மக்களும் அதிக அல்லல் அடைவர்" என்றார் ஓர் அறிஞர். பல ஆண்டுகட்கு முன்னால் அரசியல் வாதிகளும் மற்றையோரும் தமிழில் பேசுவதுகூட இழிவு என எண்ணியிருந்தனர். தமிழில் பேசத் தெரியாமல் இருப்பதே ஆங்கிலத்தில் தமக்குள்ள அறிவாற்றலைப் புலப்படுத்தற் குரியது எனவும் நினைத்தனர்.

இந்நோய் அக்காலத்து மாணவர்களிடமுமிருந்தது; ஆங்கிலத்தில் நான்கு சொற்றொடர்கள் தொடர்ந்து பேசத் திறமையில்லாது போனாலும், தமிழையும், அம்மொழியைக் கற்பிக்கும் ஆசியர்களையும் மிக இழிவாகப் பேசி எள்ளி நகையாடுவதில் தவறுவதில்லை. ஆனால் நம் நாட்டின் நல்லூழ் காரணமாக அந்நிலை மாறி, நன்னிலை வந்துகொண்டிருக்கிறது. ஆங்கிலத்தில் மட்டுமே பேசியவர்களும் இன்று தமிழிலேயே பேச விழைகின்றனர். கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் ஓர் புதிய தமிழுணர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டு, நல்ல தமிழ் நடையிலே மாணவர்கள் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டு வருகின்றனர். அரசாங்கத்தாரும் தமிழ் நூல்களையும், அறிஞர்களையும் பாராட்டிப் பரிசும் வழங்கி வருகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாகப் பொதுமக்கள் தமிழ் மொழியின் அருமையையும் பெருமையையும் உணர்ந்து, தமிழன்னைக்குப் பாமாலை சூட்டியவர்களை, தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர்களை, ஆராய்ச்சியில் மிக்க அறிஞர்களைப் பொன்னாடை போர்த்திப் போற்றவும் செய்கிறார்கள். திருக்குறள் கருத்துக்களை நாட்டில் பரவச்செய்யும் நன்னோக்கும் புலவர் பெருமக்களைப் பொன்னாடை போர்த்திப் பாராட்டும் பொன்னோக்கும், இனிய தமிழ் இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிக்கும் இன்னோக்கும் கொண்ட இத் திருவள்ளுவர் கழகத்தாரின் சீரிய முயற்சியால் கடந்த ஆண்டு இதே நாளிலே இன்று தலைமை தாங்கி நடாத்தும் நம் நாவலர் ச. சோமசுந்தர

பாரதியார் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி, கணக்காயர் என்னும் பட்டமும் களிப்புடன் சூட்டிப்போற்றினோம்.

நம் தமிழ் மொழிக்கே இப்பொழுது ஒரு பொற்காலம் பிறந்திருக்கிறது என்று புகலினும் மிகையாகாது. இந் நற்காலத்தின் ஒரு பகுதியே நாம் இங்கு அளவற்ற உள்ளக் கிளர்ச்சியுடன் பேராசிரியர் கோனார் அவர்களைப் பெருமைப் படுத்தப் பெருமளவில் இங்கு கூடியிருப்பது.

அவர்கள் தமிழ் நாட்டு மாணவர்கட்கும், தமிழ் இலக்கியத்திற்கும் குறிப்பாகச் சங்க நூல்களுக்கும் செய்த தொண்டு அளவற்றது. அவர்கள் செய்த, செய்துகொண்டிருக்கிற தமிழ்த் தொண்டுக்கும், அரும்பெரும் புலமைக்கும், அளவிலா ஆற்றலுக்கும் பொன்னுடை மட்டுமல்ல வயிர ஆடை போர்த்தாலும் போதாது.

## ‘ தமிழாசிரியர் ’

இவர்கள் மிக இளம் வயதிலேயே தமிழ் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார்கள். இவர்கள் அப்பணியை ஏற்றுக்கொண்ட காலம், தமிழ் நன்னிலையிலில்லாத காலம். தமிழ் மொழி என்றாலும், தமிழ் நூல் என்றாலும் தமிழ் ஆசிரியர் என்றாலும் மற்ற ஆசிரியர்களும் மாணவர்களும் மதிக்காத காலம். ஆனால் நமது பேராசிரியர் மட்டும் அந் நாட்களில்கூட ஓர் தனி இடம் பெற்றார்கள். ஆராய்ச்சித் திறமையும் அளவற்ற புலமையும், அன்புடன் பழகும் தன்மையும் பொருள் மிக்க சொல் வன்மையும், தமிழ் மாணவர் மட்டுமன்றி மற்ற மாணவர் உளத்திலும் உயரிய இடத்தை இவர்களுக்கு உரித்தாக்கியது.

இவர்கள் கல்லூரிக்கு வரும் தோற்றமே கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். தமது பெயருக்கேற்பக் கரிய மேலங்கியணிந்து கார்மேகமே வருவதுபோன்று தோற்றமளிப்பார். வீரத் தமிழனின் விளங்கு மீசையுடன் நெற்றியில் நாமம் துலங்க அழகிய தோற்றத்துடன் ஆதனத்தில் அமர்வர். ஓர்

குண்டூசி விழுந்தாலும் கேட்கக்கூடிய அமைதி வகுப்பில் நிலவும். அவர்கள் கற்பிக்கும் திறன் ஒரு தனி வகையைச் சார்ந்தது. கம்ப ராமாயணமோ, கலிங்கத்துப் பரணியோ, மகாபாரதமோ, மணிமேகலையோ, சிலப்பதிகாரமோ, சிந்தா மணியோ பாடமாயிருக்கும். தமது இனிய குரலில் முதலில் பாட்டை ஓரிருமுறை பாடிக்காட்டி, பின்பு பதம் பிரித்து உரை கூறி, அப்பதங்களைப் பொருத்திக்காட்டி மறுபடியும் பாடலைப் படித்துக் காட்டுவார்கள். அதன் பின் விரிவுரையும், இலக் கணக் குறிப்புகளும், இலக்கிய நயங்களும் தெள்ளத்தெளிய மாணவர்களது உள்ளத்தில் பதிய எடுத்துரைப்பார்கள். வகுப்பில் காலம் கழிவதே தெரியாது. மாணவர் இவ்வளவு விரைவில் ஒரு மணி நேரம் கழிந்து விட்டதே என்று எண்ணி மறுநாளைய தமிழ் வகுப்பை மிக ஆவலுடன் எதிர்பார்ப்பர். இலக்கியத்தின் இனிமையையே அறியாதவருக்குங்கூட இனி மையை உண்டாக்கி இலக்கிய இன்பத்தில் திளைக்கச் செய்வார் கள். நம் ஆசிரியர் கேட்டார்க்கு ஆழப்பதிந்த அழகிய கருத்துக்கள் ஆயுள்மட்டும் அகத்தைவிட்டகலா. இவர்கள் கற்பிக்கும் திறத்தால் அடிக்கடி அமெரிக்கன் கல்லூரி மாண வர்கள் பல்கலைக் கழகத் தேர்ச்சியில் முதல் எண்ணிக்கையை யும் தரத்தையும் பெறுவதுண்டு. 1935-ம் ஆண்டு பி.ஏ. வகுப்பில் இவ்வரிய வாய்ப்பு எனக்கும் கிட்டிற்று.

சில ஆசிரியர்கள் வகுப்பு நேரம் தவிர மற்ற நேரங்களில் மாணவருடன் பழகுவதில்லை. ஆனல் பேராசிரியர் அவர்களோ மாணவர்களை எங்கு கண்டாலும் அன்புடனழைத்து, இன் மொழி பேசி, உற்சாகமூட்டி உவப்புடன் செல்வர். பன்னூ ருண்டுகட்கு முன்பு நன்னூலருளிய பவணந்தி முனிவர், ஆசிரி யருக்கு அமையவேண்டிய அரும்பெரும் குணங்களாகக் கூறிய

‘குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்’

பிறவும் ஒருங்கே அமையப்பெற்ற உத்தம ஆசிரியர், நம் கோனுர் அவர்கள். இவர்களின் மாணவர் என்முலே தமிழ் நாட்டில் ஓர் தனி மதிப்புண்டு.

இவர்கள் ஆசிரியர் என்ற முறையில் மட்டுமன்றி அமெரிக்கன் கல்லூரித் தமிழ்க்கழகத் தலைவர் என்ற முறையாலும் அரிய தொண்டு ஆற்றியிருக்கின்ருர்கள். தமிழ் நாட்டில் பல வேறு இடங்களிலுமுள்ள தமிழ் அறிஞர்களை அழைத்து அரிய சொற்பொழிவுகள் ஆற்றச் செய்வார்கள். தமிழ்ச் சொற்பொழிவுப் போட்டிகள் ஏற்படுத்தி மாணவரிடையே சொற்பொழிவின் திறனைப் பெரிதும் உண்டாக்கினுர்கள்.

## 'நூலாசிரியர்'

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்முனது தமிழ் நாட்டின் மணி ஆரம் போன்றதும் நெஞ்சை யள்ளுவதுமான சிலப்பதிகாரத்தின் மூலத்தைப் படித்தின்புறத் திறமையற்ருேருக்கு அம் மூலத்தின் சாரத்தைப் பிழிந்து, அதன் சுவை கெடாத படி இனிய எளிய தமிழ் நடையிலேயே '**கண்ணகிதேவி**' என்னும் கவின்மிகு நூலைத் தமிழ்நாட்டுக்குக் கனிவுடன் உதவினுர். திருச்சி வானெலி நிலையத்தில் **மதுரைக்காஞ்சி, புறப்பொருள் வெண்பாமாலை, மூவருலா, ஔவையார், பாயிரம் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி - கூலவாணிகன் சாத்தனுர்** முதலிய பல பொருள் பற்றிய கட்டுரைகள், இலக்கிய வாசக வரிசையில் இவர்களால் நிகழ்த்தப்பெற்றன. இவை யனைத்தும் தொகுப்பான சீரிய நூலாவதற்குத்தக்கன. தவிர நாளிதழ்களிலும் மாத, வார விதழ்களிலும் அவ்வப்பொழுது இலக்கியங்களையும் இலக்கிய ஆராய்ச்சிகளையும் பற்றிப் பொருள் நிரம்பிய கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதி வந்திருக்கிருர்கள்.

## 'ஆராய்ச்சித்திறன்'

இவர்கள் இளவயதினராயிருக்கும் பொழுதே (36-ம் வயதில்) நமது சென்னைப் பல்கலைக்கழகம் இவர்களது ஆராய்ச்

சித் திறனை யறிந்து 1927-ம் ஆண்டில் விடுத்த அழைப்பின் மீது ‘ செனட் ’ மண்டபத்தில் ‘ பண்டைத் தமிழர் நாகரிகம் ’ என்ற தலைப்பில் நான்கு நாட்கள் அரிய பெரிய சொற்பொழி வாற்றியதைக்கேட்ட துணைவேந்தரும் அறிஞர்களும் எல்லாம் கோனாரவர்களது பண்டை வரலாற்று ஆராய்ச்சித் திறனைப் பலப்பட புகழ்ந்தனர். தமிழ் நாட்டு மன்னர்கள், வள்ளல்கள் முதலியோரது வீரம், கொடை முதலியவை பற்றிப் புகழ்ந்து கூறும் ‘ புறநானூறு ’ என்னும் புகழ்மிகு நூலிலிருந்து அந் நூல் பாடிய சங்கப்புலவர்களது பெயர்கள் மட்டும் தெரிந் தனவே யன்றி அவர்கள் சம்பந்தப்பட்ட மற்ற சரிதங்கள் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் நமது பேராசிரியரவர்கள் சங்க கால இலக்கியங்களைச் சற்றும் சலிப்பின்றி ஆராய்ந்து, அவை களிலிருக்கிற அகச்சான்று முதலியவைகளைக்கொண்டு புலவர் களது வாழ்க்கை வரலாறுகளையும், புலவர்களால் பாடப்பெற் றோரது வாழ்க்கை வரலாறுகளையும் திரட்டி ‘ நல்லிசைப் புல வர்கள் ’ என்னும் சொற் செறிவு பொருட் செறிவு மிக்க நூல் ஒன்றும் வெளியிட்டார்கள். இந்நூல் பலமுறை பல பல்கலைக் கழகங்களில் பாட புத்தகமாக அமைத்துக் கொள்ளப்பட்டது. சுருங்கக்கூறின் சங்ககாலத்து இலக்கியக்களுள் ஒன்றுவது, புலவர்களுள் ஒருவராவது நமது பேராசிரியரின் ஆராய்ச்சியில் உட்படாமலில்லை. தமிழ்ப் பேரறிஞர் உயர்திரு கா. சுப்பிர மணியபிள்ளை எம். ஏ., எம். எல் அவர்கள் தாம் எழுதியிருக்கிற ‘ தமிழ் இலக்கிய வரலாறு ’ என்னும் நூலில் நம் பேராசிரிய ரின் சங்ககால இலக்கிய ஆராய்ச்சியைப் பெரிதும் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். இன்று இவ்விழாவில் கலந்துகொள்ள இயலாமை குறித்து, தமிழ் நாட்டின் பல அறிஞர்கள் அனுப்பி யுள்ள கடிதங்களும், பாமாலைகளும் நம் பேராசிரியரது ஆற்றலை அவைகளை எழுதியவர்கள் எவ்வளவாக மதித்திருக் கின்றனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

## ‘ சொற்பொழிவுத்திறன் ’

பேராசிரியரவர்களது எடுத்த தோற்றமும், மலர்ந்த முகப் பொலிவும், எளிய இனிய தமிழ் நடையும், சொற்பொழிவு

கேட்கும் எவரையும் இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தும், தங்கு தடையின்றிப் பொங்கிவரும் ஊற்றுப்போன்று அழகிய சொற்றொடர்கள் அரிய கருத்துக்களைத் தாங்கி அடுக்கடுக்காக வந்து கொண்டிருக்கும். அவர்கள் பேசும் பொருள் பற்றி யாதும் அறியாதவர்கூட சொற்பொழிவு கேட்டபின் தனது ஐயப்பாடுகள் அறவே அழிந்து அறிவுமிக்கவராவார். இலக்கண, இலக்கிய, வரலாறு முதலியவைகளில் பேராசியருடன் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்கள்கூட, அவரது கருத்துக்கள், கொள்கைகள், முடிவுகள்சரியென்று அவர் மெய்பிக்கும் வாதத் திறமையால், அளவிலா ஆராய்ச்சிப் புலமையால் அவரது அபிப்பிராயமே சரியென ஏற்றுக்கொள்வர். பற்பல ஆராய்ச்சிகளுக்குப் பிறகு தாம் கண்ட முடிவுகளை அஞ்சாது வற்புறுத்தும் நெஞ்சுறுதி அவர்களிடம் உண்டு.

இத்தகைய ஆற்றலும், அறிவும், புலமையும் புகழும் ஒருங்கே அமைந்த நம் பேராசிரியர் இறவாத புகழ்படைத்த பெருநூல்கள் பல இயற்றி, ஆராய்ச்சிமிக்க அரிய சொற்பொழிவுகள் ஆற்றித்தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டு பல இன்னும்புரிய அவர்களுக்கு நீண்ட ஆயுளும், நிறைசுகமும், மன மகிழ்ச்சியும் அருள எல்லாம்வல்ல இறைவனின் இணையடிகளை இறைஞ்சுகிறேன்,

திருமங்கலம், **P. K. N.** உயர்நிலைப்பள்ளி.
தலைமை ஆசிரியர் திரு. **P. அருணசலம் M. A., L. T.**
அவர்கள் பேச்சு :

பெருமையும் புலமையும் மிக்க தலைவரவர்களே !

பெரியோர்களே !

தமிழ்ப்பேராசிரியர் உயர்திரு, கார்மேகக் கோனர் அவர்களைப் பாராட்டுவதற்காகக் கூட்டப்பட்டிருக்கும் இக் கூட்டத்தில் அவரது மாணவனை எனக்கும் பேசும் பாக்கியம் கிடைக்கப் பெற்றது மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. இப்பெரும் வாய்ப்பைக் கொடுத்த இக் கழகத்தினருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்போது தமிழ்மொழியின் மீது பற்றும் ஆர்வமும் கொண்டவர்களாகத் தமிழ் நாட்டு மக்கள் இருக்கப் பார்க்கின்றோம். ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்த காலமோ தமிழ், தாய்மொழி என்பதை அறவே மறந்து, தாயைப் புறக்கணித்திருந்த காலம். அப்படியும் ஒருகாலம் இருந்ததோ என்று நாம் இப்போது வியப்படையலாம். ஆனால் உண்மையில் அப்படியும் ஒரு வெட்கக்கேடான காலம் இருந்தது என்று நாம் தலைகுனிந்து சொல்லத்தான் வேண்டியிருக்கின்றது.

அப்போது தமிழின் பெருமையை மக்கள் உணரவில்லை. தமிழுக்கு சீரிய இடம் தரப்படவில்லை ; மாணவர்கள் தமிழில் பேசுவது இழிவு என்று எண்ணினார்கள். தமிழில் நல்ல மார்க்குகள் வாங்கினால் அதை ஒரு பெரிய காரியமாகக் கருதுவதும் இல்லை, தமிழ்த்தாய் அவ்வித அல்லற்பட்டுக் கிடந்த அச்சந்தர்ப்பத்தில் நம் தமிழ் நாட்டில் ஒரு சில பெரியார்கள் தோன்றித் தமிழின் இனிமை, தொன்மை, இளமை, மேன்மை இவற்றை எடுத்துக் காட்டித் தமிழுக்கு அரிய தொண்டாற்றி வந்தார்கள். அப்பெரியார்களில் ஒருவரே சங்கம் கண்ட மதுரையம்பதியாகிய இந்நகரில் அமெரிக்கன் கல்லூரியில் பல ஆண்டுகள் தமிழ்த் தொண்டு செய்து வந்தவரான நம் ஆசிரியர் திரு, கார்மேகக் கோனார் அவர்கள். இவர்கள் பணிபுரிந்த அந்தக் காலத்தில் நம் மொழி சம்பந்தமாக மக்களும் மாணவர்களும் என்ன மன நோக்குக் கொண்டிருந்தனர், என்பதை நாம் மனதில் கொண்டால்தான் பேராசிரியர் உயர்திரு கார்மேகக் கோனாரவர்கள் ஆற்றிய பணியின் சிறப்பும் மேன்மையும் நன்கு தெரியவரும்.

தமிழில் இவருக்குள்ள சிறந்த புலமையின் காரணத்தால் மாணவர்களாகிய நாங்கள் இவர் வகுப்பில் மிகவும் கவனத்துடன் கேட்போம்; வேறு வகுப்புகளில் இல்லாத அளவில் இவரது தமிழ் வகுப்புக்களில் மாணவர்களின் கவனமும் அமைதியும் நிலவி வந்தன. மேலும் மாணவர்களால் அன்னாருக்குக் கொடுக்கப்பட்ட மரியாதை இக்கல்லூரியில் வேறு எந்தப் பேராசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்க முடியாது என்றே சொல்ல வேண்டும். இதற்கெல்லாம்

காரணம் இவர்களது தமிழ்ப் புலமையும், சொல்லாற்றலும், உதார குணமும், நேர்மையும், அன்பும், பொறுமையும் ஆகும்.

தனக்குரிய அரியாசனத்திலிருந்து தள்ளப்பட்டுக் கிடந்த தமிழ்த்தாயைப் போற்றிப் பேணிப் பாதுகாத்து அவள், தனக்குரிய ஆசனத்தே வீற்றிருக்கச் செய்த பெரிய தமிழ் முதல்வர்களில் நமது பேராசிரியர் ஒரு முக்கியமானவராவார்.

தமிழ் மொழியைக் கையாளுபவர்கள் தங்களது கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் உயர்வு நவிற்சியணியிலேயே ஒன்றைப் பலவாக்கி மிகைப்படுத்துவதை இப்போது அதிகம் காண்கின்றோம். ஆனால் நமது பேராசிரியப் பெருந்தகை, எப்போதும் பொருத்தமற்ற வார்த்தைகளை உபயோகிக்க மாட்டார், ஒன்றை அலங்காரத்திற்காகவும் அதிகப்படுத்திக் கூற மாட்டார். ஆங்கிலம் போன்ற உலக மொழியளவுக்கு நிகராக அல்லது அதற்கு மேலாக நம் மொழியைக் கையாளலாம் என்பதைத் தினந்தோறும் நிரூபித்துக் காட்டிக்கொண்டு வந்தவர். இன்றும் அவருடைய சொற்பொழிவுகளையும், கட்டுரைகளையும் கேட்டும் படித்தும் உள்ளவர்கள் நான் சொல்வதை அப்படியே ஒப்புக் கொள்வார்கள்.

பேராசிரியர் உயர்திரு, கோனார் அவர்களும், அவர்களைப் போன்ற தமிழ்ப்புலமை கொண்டவர்களும் இடையறாது பொறுமையுடன் கைம்மாறு கருதாது செய்து வந்த சேவையின் பயனை, இன்றும் நாம் கண்கூடாகக் கண்டு கொண்டோம். ஆனால் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இன்னும் பேராசிரியர் போன்றவர்களது சேவை அதிகம் வேண்டியுள்ளது. நம் நாட்டிலுள்ள தினசரிப் பத்திரிகைகளிலும், விளம்பரப் பலகைகளிலும் எத்துணைப் பிழைகள் நிரம்பியுள்ளன என்பதைப் பார்த்தால் நாம் வெட்கித் தலை குனிய வேண்டி வருகின்றது. எத்தனை எழுத்துப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் நாள் தோறும் அச்சடிக்கப்பட்டு மக்களிடம் நல்ல தமிழ் வளர வொட்டாது கெடுக்கப்படுகின்றது.

இக்காலத்தில் நல்ல உரைநடையுடைய சிறந்த நூல்கள் வேண்டிய அளவில் நம் மொழியில் இன்னும் எழுதப்பட வில்லை என்றே கூறவேண்டும், இது நம் மொழி வளர்ச்சிக்கு இடையூறாகவுள்ள அடுத்த குறை என்று சொல்லலாம். மேலும் தமிழ் இன்னும் நம் ராஜ்யத்தின் அரசாங்க மொழி யாகாதிருப்பது மற்றொரு குறையாகும். இப்படிப்பட்ட குறைகள் ஓரளவு நீங்குவதற்குப் பேராசிரியர் கார்மேகக் கோனார் அவர்கள் தங்களது ஓய்வு நேரங்களைச் செலவழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அவர்களது பணி இப்போதுதான் தமிழ்த் தாய்க்கு அதிகம் தேவை; அதற்காக நீண்ட ஆயுளும், மகிழ்ச்சிகளுக்குரிய சூழ்நிலையும், பேராசிரிய ருக்குக் கிட்டவேண்டுமென்று கடவுளை வேண்டுகின்றேன்.

**வணக்கம்**

## திரு. நா. பாலுசாமி, M. A.

*மதுரை, தியாகராசர் கல்லூரித்*
*தமிழ் விரிவுரையாளர்*
பேச்சு.

**தலைவரவர்களே, தமிழ்ப் பெருமக்களே,**

மதுரைத் திருவள்ளுவர் கழகம் பல்லாண்டுகளாகத் தமிழ்ப்பணி புரிந்து வருவதைத் தமிழ் நாடு நன்கு அறியும். தமிழ் இலக்கியங்களைப் பரப்புவதோடு தமிழ்ப் பெரியோர் களையும், தக்க முறையில் பாராட்டி வருவது இக்கழகத்தின் தனிச் சிறப்பாகும். சென்ற தைத் திங்களில் பேராசிரியர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி கழகம் தன் பாராட்டினைத் தெரிவித்தது; கணக்காயர் என்ற பட்டமும் சூட்டியது. அதனைத் தொடர்ந்து இவ்வாண்டு இத்தைத் திங்களில் பேராசிரியர் ஆ—கார்மேகக் கோனார் அவர்களுக்கு அவரது தமிழ்ப் பணியைப் பாராட்டு முகத்தால் பொன்னுடை போர்த்தி, செந்நாப் புலவர் என்ற சீரிய பட்டமும் வழங்க முடிவு செய்தது மிகப் பொருத்த முடையது; போற்றத்தக்கது.

பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக் கோனூர் அவர்களைத் தமிழகம் நன்கறியும். எனவே இப்பாராட்டு விழாவில் அவர்களது இயல்புகளை எடுத்து மொழிவது மிகையாகத் தோன்றினும் யானும் அவரிடம் பயின்று பயனடைந்தவன் என்ற முறையில் ஒரு சில சொல்லுவது எனது கடமையாகும். செய்நன்றி அறிதலின் இன்றியமையாமையைச் செந்நாப்போதார் பலபடியாக உணர்த்தியுள்ளார். ஆகவே, எனது உரை அத்தகைய நன்றியுரையாகும்.

பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக் கோனூர் அவர்கள் சேது நாட்டிலே தோன்றிச் செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் தலைநகரிலே அமைந்துள்ள தமிழ்ச் சங்கத்திலே பல ஆண்டுகள் பயின்று புலமை பெற்றுத் தமிழ்நாடு முழுவதும் புகழ் பரப்பி வரும் பெரியார். தமிழே தனது பேச்சும் மூச்சுமாகக் கொண்ட தண் தமிழர். இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ் நாட்டில் தமிழுக்கும் தமிழ் அறிஞர்க்கும் பொது நிலையங்களில் எத்தகைய இடம் இருந்தது என்பதை எண்ணிப் பார்த்தால் உள்ளம் படைத்த ஒவ்வொருவரும் இரத்தக் கண்ணீர் வடிப்பர். அந்நிலையில் மேனூட்டு நாகரீகமும் மேனூட்டு அறிஞும் செறிந்த அமெரிக்கன் கல்லூரியில் தமிழின் தனிப்பிரதிநிதியாய் 1914 முதல் 1951 முடிய 37 ஆண்டுகள் தொடர்ந்து தமிழ்ப்பணி புரிந்து தனி ஆணை செலுத்தி ஒருவர்பின் ஒருவராகப் பதவி யேற்ற கல்லூரித் தலைவர் எழுவர்களையும் பண்பாலும் அன்பாலும் ஈர்த்து தன்வயமாகுமாறு செய்த பேராற்றல் படைத்த பேராசிரியர் யானறிந்தவரை தமிழகத்துக் கல்லூரிகளில் அந்நாளில் இவர் ஒருவரே ஆவர். ஆழ்ந்த சங்கநூற் பயிற்சி சொல்வன்மை, அஞ்சாது உண்மை உரைக்கும் நெஞ்சழுத்தம், இம் முப்பெரும் பண்புகளே இவரது வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணங்களாகும். அரிய கருத்துக்களையும் அழகிய முறையில் வகுத்தும் தொகுத்தும் எளிமையாகச் சொல்லும் வன்மையே மாணவர் உலகத்தை தம்பால் இழுத்தது. தமிழ் இனிமையுடையது. செம்மையுடையது என்ற உண்மையை இவரது சொற்பொழிவு நன்கு வலியுறுத்தும். 1927-ம் ஆண்டு சென்னைப்

பல்கலைக் கழக மன்றத்தில் ''பண்டைத் தமிழர் பண்பாடு'' என்பது பற்றி இப்பேராசிரியர் ஆற்றிய சொற்பொழிவுகள், பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் பாராட்டுதலையேயன்றி அன்று பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த ஸர். வேங் கடரத்தினம் அவர்களின் நன்மதிப்பையும் பெற்றன. இங்ங னம் இவரது தமிழ்ப்பெரும் புலமையைத் தமிழகம் நன் குணர்ந்தது. 'தமிழ்இலக்கிய வரலாறு' என்னும் நூல் எழுதிய காலஞ்சென்ற பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர் கள் அந்நூலுள் இக்காலப் புலவர்கள் என்ற தலைப்பில் நமது பேராசிரியர் கார்மேகக் கோனார் அவர்களது சங்க நூல் ஆராய்ச்சித்திறன் குறித்துப் பாராட்டியிருப்பது இவரது பெருமையை நன்கு விளக்கும். சென்னைப் பல்கலைக் கழக பாடத் திட்டக் குழுவில் (Board of Studies in Tamil) தொடர்ந்து இருபத்துநான்காண்டுகள் அங்கம் வகித்து பணி யாற்றிய பெருமை, இவருக்கே உரியது. சென்னை, திருவ னந்தபுரம், அண்ணுமலைப் பல்கலைக் கழகங்கள் அனைத்துமே தத்தம் தேர்வுத் தணிக்கைக் குழுக்களில் (Board of Examiners & Paper Setters) பல்லாண்டுகள் உறுப்பினராகவும், தலைவ ராகவும் இருக்கும் வாய்ப்பளித்து இவரைப் பெருமைப்படுத் தின. மேனாட்டு வரலாறுகளும் நடைகளுமே பாடப் புத்தகங் களில் இடம் பெற்று வந்த அந்தக் காலத்தில் ''கண்ணகி தேவி, நல்லிசைப் புலவர்கள்'' முதலிய தமிழ்ப் பெருமக்களின் வரலாறுகளை ஆராய்ச்சி மணம் கமழுமாறு மாணவர் உலகுக்கு ஆக்கித் தந்த பெருமையும் இவரையே சாரும்.

ஓய்வு நேரங்களில் இப்பேராசிரியருடன் உரையாடுவதன் மூலமாகத் தமிழ் அறிவு நிரம்பப்பெற்று, தமிழ்த் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பலராவர்.

தமிழகத்தில் தமிழாசிரியர்கள், தமிழ் மாணவர்களுக்கு கேலிச் சித்திரங்களுக்கு உரிய மூலப் பொருளாக அமைந் திருந்த அந்தக் காலத்தில், ஆங்கில மோகத்தில் மாணவர்கள் ஆழ்ந்து கிடந்த அந்தக்காலத்தில் பேராசிரியர் திரு. கார்மேகக் கோனார் அவர்கள் வகுப்புக்கு வருவதற்கு முன்னரே ஆங்கில வகுப்பிற்கும் வராத மாணவர்கள் உள்பட அனைவரும் வந்து

**சித்திரப் பாவையின் அத்தகவு என்னச் செறிந்திருக்கும் காட்சியை வியக்காமலிருக்க முடியாது.** இதனால் இப்பேராசிரியர் அவர்களால் தமிழே சிறப்புப்பெற்றது எனத் துணிந்து கூறலாம். இப்பேராசிரியரின் பீடு நடையும் பெருந்தகைமையும் உற்றுழி உதவும் பெற்றியும் மாணவர்களைக் கவர்ந்த பண்புகளாகும். மேலும் இவர் தாம் பயின்று சிறந்த இத் தமிழ்ச் சங்கம் மீண்டும் தழைத்துத் தமிழ்ப்பணி ஆற்றவேண்டும் என்ற பேரவாவுடன் பெருமுயற்சி செய்தது தகவுடைய செயலே ஆகும். இத்தகைய தமிழ்ப் பணியில் தளராது தொண்டாற்ற இப்பேராசிரியர் அவர்களுக்கு நீண்ட ஆயுளும், நிறைநலமும் பெருக எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். வாழ்க பேராசிரியர், வளர்க அவர் தமிழ்ப் பணி வணக்கம்.

## செந்நாப் புலவர்

# பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனார் கூறிய நன்றியுரை

சான்றாண்மை மிக்க தலைவர் அவர்களே, தமிழர் பண்பாட்டிற்கு உரையாணியாக விளங்கும் தமிழவேள் திரு. இராசன் அவர்களே, குழுமியிருக்கும் நண்பர்களே, தாய் தங்கைமார்களே, தமிழ்ப் பெருமக்களே, உங்கள் யாவர்க்கும் **எனது வணக்கம் உரியதாகுக.**

இன்று மாலையில் நீங்கள் எல்லாம் குழுமி இந்தத் திருவள்ளுவர் கழகத்தார் விருப்பத்திற்கிணங்க எனக்குப் பொன்னாடை போர்த்திப் பெருஞ் சிறப்புச் செய்தீர்கள். இச் சிறப்பிற்கும் பாராட்டுக்கும் நான் சிறிதும் தகுதியுடையேன் அல்லன். ஏதோ நான் இந்நகரின் கண்ணுள்ள பழமையான ஒரு முதல்தரக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனாக இருந்து இயன்றவாறு தமிழ்த் தொண்டாற்றினேன். தமிழ் ஆசிரியர்களையும் தமிழ் மொழியையும் புறக்கணித்து நம் நாட்டில் ஆங்கிலம் கற்றவர்களையே கற்றவர்களென்றும் ஆங்கிலமே

தங்கள் தாய்மொழியென்றும் கருதிய காலம், நான் கல்லூரி யில் பணி ஏற்ற காலம். எனக்கு முன்னர் அக்கல்லூரியில் இருந்த தமிழாசிரியர், தாம் ஓய்வு பெறுதற்குச் சில ஆண்டு கள் முன்னதாகவே ஓய்வுபெற நேர்ந்தது மாணுக்கர்கள் செய்த தொல்லேயாலேதான். இந்நிகழ்ச்சியைச் சிந்தித்துப் பார்த்தால் எப்படிப்பட்ட காலத்தில் எப்படிப்பட்ட இடுக் கண் மிகுந்த இவ்வலுவலே நான் ஏற்றேன் என்பது தெரிய வரும்.

நான் பணி ஏற்ற காலத்தில் எனக்கு வயது 23 நிரம்ப வில்லே; இதற்கு முன்னதாக உயர்நிலேப் பள்ளிகள் முதலிய வற்றில் ஆசிரியனுக அமர்ந்த பயிற்சியுமில்லே. இந்த நிலேயில் எனக்கும் வயதில் சிறிது மூத்த ஒரு சில மாணவர்களும்கூட இருந்ததான ஒரு கல்லூரி வகுப்பினே நடத்தும் பொறுப்பு என்னேச் சார்ந்தது. ஏதோ எனக்குள்ள சிறிய சொல்லாற்ற லாலும் மாணவர்களிடை தமிழுக்கு நேர்ந்துள்ள இழுக்கினேக் களேய வேண்டுமென்ற ஊக்கத்தாலும் மாணவர்கள் உளக் கிடைக்கு ஏற்பத் தமிழ்மொழியின் சிறப்பினே அவர்கள் உள்ளத்தில் பதியும்படி செய்து, தமிழ் மொழியில் அவர் களுக்கு ஆர்வமும் தமிழ் ஆசிரியர்மீது நன்மதிப்பும் உண்டா கும்படி செய்து வந்தேன்.

1914-ம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் அமெரிக்கன் கல்லூரியில் மேற்கூறிய இயல்பு மேலும் மேலும் வளரக் கண்டு மகிழ்வு கொண்டேன். மாணவர்க்குத் தமிழில் சிறப்பான ஆர்வத்தையும் உண்டு பண்ணினேன். கடைசி யாக அமெரிக்கன் கல்லூரியில் ஆங்கிலம், கலே முதலிய பாடங்களின் ஆசிரியர்கள், தமிழுக்கும், தமிழாசிரியர்களுக் கும் அமெரிக்கன் கல்லூரியில்தான் இவ்வளவு மதிப்பு இருக் கிறதென்று சொல்லிப் பெருமைப்படும்படியான நிலேமை யையும் உண்டுபண்ணினேன். இதுவே என் வாழ்நாளில் என்றும் உள்ளத்தில் நின்று மகிழ்ச்சியைத் தந்துகொண்டிருப் பது. எங்கு பார்த்தாலும் என் பழைய மாணவர்கள் நிரம்பியிருக்கின்றனர். இது எனக்குச் சிறந்த பெருமிதம்.

37 ஆண்டுகளும் 37 திங்களாகக் கழியும்படி அயராது உழைத்து வந்தேன். அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்மொழி யின் சிறப்பினை நிறுவுவதற்கு நான் செய்த பலவகை முயற்சி களுக்கும் இசைந்து நின்றும், அலுவல் ஊதியத்தில் ஏனைய பாட பேராசிரியர்களோடு ஒத்த நிலையையும் ஒரு சிலர்க்கு அதிகமான நிலையையும் கூட நான் அடைவதற்கும் உறுதுணை யாக இருந்த காலஞ்சென்ற கல்லூரி வைஸ் பிரின்ஸிபால் பீற்றர் ஐசக், பி. ஏ., எல். டி. பின்னர் பல ஆண்டுகள் கல்லூரித் தலைவராக இருந்த திரு. ரஞ்சிதம், எம். ஏ., எல். டி. இப்போது கல்லூரித் தலைவராக இருக்கும் திரு, J. சவரிராயன், M. A. ஆகிய மூவர்களையும் எனது தமிழ்ப்பணி பற்றி இங்கு எனக்கு நடைபெறும் இப்பாராட்டு நிகழ்ச்சியில் நான் நினைவு கூர்ந்து எனது நன்றியைச் செலுத்தும் கடப்பாடு உடையவனாக இருக்கின்றேன் என்பதை உங்கள் முன்னிலையில் மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தக் கல்லூரியில் பணி செய்யக் கிடைத்த பேற்றினால் நான் பெற்ற பேறுகள் பலப் பல வாகும்.

தாங்கள் மேற்கூறிய எனது சிறிய பணியைப் பெரியோர்க்குள்ள இயற்கையின்படி பெரிதாக மதித்து இந்தச் சிறப்புகளை அளிக்கின்றீர்கள். இந்த நிகழ்ச்சியில் நான் அறிவுபெறுதற்குத் தாயகமான தமிழ்ச் சங்கத்திலிருந்து என்னை ஊர்வலமாக அழைத்து வந்தது மிகவும் பொருத்த மான சிறப்புடையதாகக் கருதி உங்களைப் போற்றுகின்றேன். இரண்டாவதாக இந்நான்மாடக் கூடலம்பதியில் வாழும் தமிழ்ப் பெருமக்கள் இந்த ஆடிவிதியில் இடம் கொள்ளாதபடி அமர்ந்தும் நின்றும் குழுமி என்னைச் சிறப்பித்ததை நான் பெறலரும் பெரும் பேறாக மதிக்கின்றேன். ஏனென்றால் தமிழ் நாட்டில் பிற நகரத்து மக்களால் பாராட்டுப் பெறுதல் அவ்வளவு அருமை உடையதன்று. சங்கமிருந்த துங்கம் வாய்ந்த இந்தக் கூடலம்பதியில் வாழ் மக்களால் ஒருவர் கொண்டாடப் பெறுவதே அருமையினும் அருமையுடைய தாகும். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று சிறப்பிக் கப்படும் பெருங்காப்பியத்தை அருளிய ஆசிரியர் இளங்கோ

வடிகளைச் சிறப்பிக்குமிடத்து ஒரு பழம்பாட்டில் ''கூடலார் கொண்டாடும் செஞ்சொற் குடக்கோ'' என்று கூறப்பெறுவதால் மதுரைப் பெருமக்களால் கொண்டாடப் பெறுவதிலுள்ள அருமை பெருமை எத்தன்மையது என்பது புலனுகும்.

செஞ்சொற் புலமையும் அஞ்சா நெஞ்சமும் படைத்த கணக்காயர் நாவலர் பாரதியார் தலைமை தாங்கவும், தமிழர் பண்பாட்டிற்கே எடுத்துக்காட்டாகவும் சான்ருண்மைக்கு ஒரு நிலையமாகவும் விளங்கும் தமிழவேள் திரு, இராசன் அவர்கள் பொன்னுடை போர்த்தவும் நான், பெற்றது அரும்பெரும் பேருக மதித்து அவர்களை உளமார்ந்த நன்றியோடு வழுத்துகிறேன். நான் எதிர்பாராத இப்பாராட்டினைப் பல் வகையாலும் அழகுறச் செய்து என்னைச் சிறப்பித்த இக்கழகத்தாரையும், மதுரை மக்களையும் என்றும் மறவாது உளங்கொண்டு போற்றுவேன். இந்நிகழ்ச்சிக்கு எழுந்தருளி வந்து சிறப்பித்ததோடமையாது மேடைமீது என்னைப் பலவாறு புகழ்ந்து பாராட்டுரை பகர்ந்த பெரியோர்க்கும், பாராட்டுக் கடிதங்கள் அனுப்பிய சான்ருேர்க்கும், நண்பர்களுக்கும், என் பழைய மாணவர்க்கும் தனியாக என் நன்றியறிதலையும் வணக்கத்தையும் செலுத்துகின்றேன்.

# பாராட்டுக் கடிதங்கள்

RAJA SRI SHANMUGA
**RAJESWARA SETHUPATHI**
MINISTER FOR PUBLIC WORKS
FORT ST., GEORGE
MADRAS

தமிழ்ப் பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனாரவர்களுக்கு மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பாகப் பொன்னாடை போர்த்தும் விழா நடைபெறுவது கேள்வியுற்று மிகவும் மகிழ்வெய்தினேன்,

கோனார் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பயின்று, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முப்பத்தேழு ஆண்டுகள் தமிழ்ப் பணிபுரிந்தவர்கள். அவரது புகழ் தமிழ் நாடும், தமிழ் மாணவர்களும் நன்கு அறிந்ததே. அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் தொண்டுபுரிய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ரா. ஷண்முக ராஜேஸ்வரன்**

RAJA
SIR MUTHIAH CHETTIAR
CHETTINAD, 10—1—1955.

**பண்டித மீ. கந்தசாமிப் புலவர் அவர்கள்**
செயலாளர்,
மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

**பிரியமுள்ள ஐயா,**

தங்கள் கழகத்தில் இம்மாதம் **14, 15, 16** தேதிகளில் கொண்டாடப்பெறும் தமிழ்த்திருநாள், திருவள்ளுவர் திருநாள், உயர்திரு ஆ. கார்மேகக் கோனார் அவர்கட்கு பொன்னாடைப் போர்த்தும் விழா அழைப்பு அன்புடன் தாங்கள் அனுப்பியிருப்பதற்கு தங்களுக்கும் தங்கள் கழக

அங்கத்தினர்கள் அனைவருக்கும் எனது நன்றி. தமிழுக்காக வும், தமிழன்பர்களுக்காகவும் தமிழ் நாட்டுக்காகவும் பற்பல துறைகளில் அரும்பாடுபட்டுவரும் உயர்திரு. கார்மேகக் கோனார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி அவர்கள் செய்துவரும் தொண்டைப் பாராட்டி அவர்களையும் கௌரவிக்க வேணுமென்ற தீர்மானத்துடன் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் செய்திருக்கும் ஏற்பாடுகளை நான் மிகவும் பாராட்டுகிறேன். இதுபோன்ற விழாக்களில் இத்தகைய புலவர் பெருமான்களை கௌரவிக்க வேண்டியது நாம் அவர்களுக்குச் செய்யக்கூடிய கைம்மாறும் கடமையு மாகும். பல அறிஞர்கள், உயர்தர அலுவலர்கள் பங்கெடுத் துக்கொள்ளும் இவ்விழாவும் மிகவும் சிறப்பாக நடைபெற வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

**மு. அ. முத்தய்யா செட்டியார்**

**V. V. இராமசாமி** M. L. C.

போன் : 55 & 55 A.
**விருதுநகர்.**
***11—1—1955.***

சங்ககாலத் துங்கப் புலவர்களின் சிங்கத் தோற்றமும் தெளிதமிழ் வீரமும் ஓர் உருவாகத் திரண்ட தோற்றமுள்ள அண்ணல் கார்மேகக் கோனாரவர்களை நினைத்தவுடன் செந் தமிழ் இன்பம் உள்ளத்திற் பொங்குகின்றது.

அவர்களின் பொன்னாடை போர்த்துவிழாவினைச் செவி யுற்றவுடன், நீலமணிவரையினைச் சூழ்ந்து, பொன்வெயில் விரிக்கும் ஞாயிற்றை நெகிழ்த்துப் போர்த்ததுபோல இலங் கும் திருமால்போல அன்னார் வாழ்க என மனம் வாழ்த்திற்று. ஆழ்ந்து அகன்று செல்லும் காவேரியாற்று வெள்ளம்போன்ற புலமை வெள்ளம் பொங்கித் ததும்ப இலங்குஞ் செந்தமிழ்க் கார்மேகனார் நீடூழி வாழ்க.

தமிழ் வெல்க.

**வே. வே. இராமசாமி**

S. VAIYAPURI PILLAI, B. A., B. L.
HEAD OF THE DEPARTMENT OF TAMIL
(Retd.)
UNIVERSITY OF MADRAS
PROFESSOR OF TAMIL (Retd)
TRAVANCORE UNIVERSITY

*Kamban Nilayam*
*86, Second Main Road*
*Gandhinagar*
*Adayar, Madras 20.*

தமிழன்னையின் அரும் புதல்வர்களில் ஒருவர் பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனாரவர்கள். அவர்களிடம் தமிழ் கற்றுப் பெரும் புலவர்களாய் விளங்குபவர்கள் பலர். அவர்களது பெருமை தமிழ்நாடு நன்கு அறிந்தது. இப்போது மதுரையில் திருவள்ளுவர் கழகத்தின் சார்பாகத் தமிழ்ப் பெருமக்கள் பலர் குழுமியிருந்து அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டுவது தமிழகம் முழுவதுக்கும் மகிழ்ச்சியைத் தரக் கூடிய செய்தியாகும்.

இறைவன் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் உடல் நலத்தையும் தந்து, தமிழன்னைக்கும் தமிழ் நாட்டிற்கும் சேவை புரிந்து வருமாறு அருள்புரிவானாக.

**எஸ். வையாபுரிப் பிள்ளை.**

R. P. SETHU PILLAI B. A., B. L.,
PROFESSOR OF TAMIL
UNIVERSITY OF MADRAS

10, SECOND MAIN ROAD,
GANDHINAGAR, ADAYAR,
MADRAS-20.

அன்புடையீர்,

பொன்னே கொடுப்பினும் பெறுதற்கரிய பெரும் புலமை வாய்ந்த ஆன்றோர்க்குப் பொன்னாடை போர்த்தும் விழா இப்பொழுது தமிழ் நாடெங்கும் நடைபெறுவதறிந்து மிக்க மகிழ்ச்சியுறுகின்றேன். மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பாக முதுபெரும்புலவர்-உழுவலன்பர்-திரு. ஆ. கார்மேகக் கோனார் அவர்கள் பொன்னாடை போர்த்தப் பெறுவதறிந்து அளவிறந்த இன்பமுற்றேன். மதுரைமாநகரின் சென்ற காலச்

சிறப்பிற்கும் எதிர்கால ஏற்றத்திற்கும் ஒரு சான்ருகத் திகழும் அவ்விழாவில் கலந்துகொள்ளுதற்கேற்ற வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குப் புதியதோர் ஊக்கம் அளித்துத் தேமதுரத் தமிழ் பரப்பும் திருப்பணியை மேற்கொண்டுள்ள தமிழவேள் திரு. P. T. ராஜன் அவர்களால் அவ்விழாவில் பொன்னுடை போர்த்தப்பெறுவது ஒரு தனிச் சிறப்பேயாகும்.

'நல்ல தமிழ்' நாள்தோறும் வளரக்கண்டு உள்ளம் தழைக்கும் நண்பர் திரு. கார்மேகக்கோனுர் அவர்கள் 'சங்கப் புலவ'ராய்ப் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப்பணி புரியும் வண்ணம் ஆலவாய்ப் பெருமான் அருள்க. வணக்கம்.

அன்பன்
ரா. பி. சேதுப்பிள்ளை.

DR. M. RAJAMANIKKAM, M, A., L. T., M. O. L., PH. D.
Professor and Head of the Department of Tamil
THIAGARAJAR COLLEGE, MADURAI.
Member, Board of Studies,
UNIVERSITIES OF MADRAS AND ANNAMALAI.
*11—1—1955.*

பேராசிரியர் உயர்திரு. ஆ. கார்மேகக் கோனுர் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்து மாணவராக இருந்து பழுதறப் படித்துப் புலமை பெற்றவர்; மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முப்பத்தேழு ஆண்டுகள் தமிழ்ப்பேராசிரியராக இருந்து தமிழ்ப் பணியாற்றிய பெரியார்; கல்லூரி வாயிலாகப் பல்லாயிர மாணவர்க்குத் தமிழ்ச் சுவையூட்டிய பேரறிஞர்; இற்றைக்கு முப்பது ஆண்டுகட்கு முன்னரே தமிழ் ஆராய்ச்சித் துறையில் நுழைந்து, தொகை நூல்களை நன்கு ஆராய்ந்து, நல்லிசைப் புலவர் வரலாறுகளைச் சீரிய செந்தமிழ் நடையில் வெளியிட்ட ஆராய்ச்சி யறிஞர்; சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேண்டுகோட்கு இணங்கி ஆராய்ச்சி விரிவுரைகள்

ஆற்றிய பெரும்புலமையாளர் ; செந்தமிழ் நடையிலே சொற் பொழிவாற்றும் திறன் நன்கமையப் பெற்றவர்; தமிழ் வளர்ச்சியிலும், தமிழர் நலத்திலும், தமிழ் நாட்டு முன் னேற்றத்திலும் பேரார்வம் கொண்டு இயலும் துறைகளில் எல்லாம் தொண்டு செய்யும் பெருந்தமிழ்த் தொண்டர் ; இப் பேராசிரியர் சங்ககாலப் புலவரைப் போலவே உண்மையை எடுத்துரைப்பதில் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்; இம் மூதறிஞர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பாடக் குழுவில் இருபது ஆண்டுகட்கு மேலும் உறுப்பினராக இருந்தும், சென்னை, அண்ணுமலை, திருவாங்கூர்ப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த் தேர்வாளராக இருந்தும் தமிழ்த்துறைக்குப் பெருந் தொண்டு செய்தவராவர்.

இங்ஙனம் எல்லா நலங்களும் இயல்பில் அமையப்பெற்ற இப்பேராசிரியரைப் பொன்னுடை போர்த்துப் பெருமைப் படுத்துதல், தமிழன்னையை உளங்குளிரச் செய்யும் திருப்பணி யாகும். இப்பெருமகனுர் பீடுமிக்க இம்மாட மதுரையில் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து, தமிழுக்கும், தமிழர்க்கும் தொண்டு செய்ய அம்மையப்பர் திருவருளை இறைஞ்சு கின்றேன்.

**மா. இராசமாணிக்கனுர்.**

S. ARUMUGA MUDALIAR, M. A., B. O. L., L. T.,
(Professor of Tamil, Teacher's College, Madraa-15)
Member of the Boards of studies in Tamil, Andhra Madras and Annamalai Universities, Academic Council and Senate, Annamalai University.
" Tamilakam," 25, Kasturba Nagar, Adyar, Madras-20.
*Dated 11—1—55.*

பேரன்புடையீர் !

வணக்கம். பேராசிரியர் கோனுர் அவர்கட்குப் பொன் னுடை போர்த்திப் புகழ்ந்து பாராட்டும் பெருவிழா அழைப் பிதழ் வரப்பெற்று அடங்கா மகிழ்ச்சியும் பெருமிதமும்

கொண்டேன். பேராசிரியர் அவர்களுடன் கடந்த 25 ஆண்டு களாக நெருங்கியும் தனிப்பட்ட முறையிலும் பல்கலைக் கழகக் குழுக்கள் பலவற்றிலும் பழகும் வாய்ப்புப் பெற்றிருக்கின் றேன். என்பால் உழுவலன்புடையவர்கள். விழுமிய பண்பு மிக்கவர்கள். வீறுகொண்ட செந்தமிழ் நடையில் பேசவும் எழுதவும் வல்ல பேச்சாளர்; எழுத்தாளர். சுருங்கக்கூறின் ''காரெனப் பொழிதரும் பேருரையாளர்.'' கைம்மாறு கரு தாமலும், இன்னார் இனியார் என்ற வேற்றுமை பாராட்டா மலும், தனக்கென வரைந்துகொள்ளாமலும், அளவற்றும் பெய்யும் பெருமழைபோல் சொல் நயமும் பொருள் நயமும், நடைநலமும் தொடைநயமும் செறிந்து விளங்கும் செந் தமிழ்ச் செழும் நடையிற்பேசியும் எழுதியும் தமிழ் நாட்டிற் குத் தனிப்பெருந் தொண்டாற்றிய கோனார் அவர்கட்குத் தண்டமிழ் மதுரைப் பொதுமக்கள் செய்யும் சிறப்பு, தமிழ் நாட்டுக்கும் தமிழன்னைக்கும் செய்யும் தனிப்பெருஞ் சிறப்பா கும். என்னுடல் இங்கிருப்பினும் உள்ளம் அங்குதானிருக்கும்.

பேராசிரியர் கோனாரவர்கள் இதுபோல் இன்னும் பல் லாண்டுகள் நிலவிநின்று தமிழ்த்தொண்டாற்றுமாறு இறைவ னருளை வேண்டிநிற்கின்றேன். முழங்குக முத்தமிழ்.

ச. ஆறுமுக முதலியார்.

Thiruvalluvar Kazhagam,
Vadakkadi Street,
Mathurai-B

Offering Felicitation to Karmegakonar.

Senator - Perisundaram,
Ex Minister of Ceylon Government

M. A. DORAI RANGASWAMY, (M.A., M.O.L.,)
Senior Lecturer in Tamil,
University of Madras,
MADRAS.
8—1—55.

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் அழைப்பிற்கு நன்றி.

''பேராசிரியர் உயர்திருவாளர் ஆ. கார்மேகக் கோனர் அவர்கள், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேர் வரிசையில் இக்காலத்தில் முதலில் வைத்து எண்ணத்தக்கவர் என்ருல் அது மிகையாகாது. பல்லாண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகக் கோனர் அவர்கள் தமிழ்த்தொண்டு செய்தவர்; ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வந்தவர்; வருபவர்; பல நூல்கள் எழுதியவர்; சொல்லாற்றலுடையவர் ஆனல் இவ்வெல்லாவற்றையும்விட என் உள்ளத்தைக் கவர்ந்த அவர்களிடம், என் உள்ளம் கவர்ந்த ஒப்புயர்வற்ற பண்பு நண்புடைமையேயாகும். வாழ்க்கைத் துணேவியாகக் கொள்ளுவதற்குரியவள் எங்ஙனம் அருமைப்பாடுடையளாவளோ, அங்ஙனமே நண்பராகக் கொள்ளுதற்குரியவர் அருமைப்பாடுடையவர். இக்காலத்தில் அவ்வருமைப்பாடு தொன்னூல் வழியேயும், தொன்மைத் தமிழர் பண்பாடு வழியேயும் பழகினுர்க்கே அறியலாகும். உள்ளே பகைமை மிக்கு வெளியே பற்களே யெல்லாம் திறந்து வெடி சிரிப்புக் காட்டியும், 'தடையில்லாது இன்னது இன்னுரைக் கொண்டு செய்துதருவேன்' என வாக்களித்து, அன்னுர் இவர் கூறுவிட்டாலும் செய்வதாயிருக்கும் நிலேயையும் மாற்றிச் செய்யவொட்டாமல் தடுத்தும், ஆக்கம் கண்டவிடத்துப் பொருமைப் பட்டு உள்ளம் புழுங்கியும், எதிரே அளவிலாமற் போற்றி, மறைவில் பலரறியத் தூற்றியும் நண்பர் எனச் சொல்லிக்கொண்டு பழகும் பண்புடையாளர் இன்று நூற்றுவர்க்குத் தொண்ணூற்றௌன்பதினர்க்கு மேலென்றும் கூறலாமென்ருல், உயர்திரு. கோனர் அவர்கள் ஒருவர்க்கு உயிர் நண்பர் ஆவதன் அருமைப்பாடு எவ்வளவினது, எவ்வளவு

விலைமதித்தற்கரியது என்பது நன்கு விளங்கும். மதுரையில் சில திங்கள் யான் உறையும் பேறு பெற்றகாலை, நல்லன இடித்துரைத்தும், உடுக்கையிழந்தவன் கைபோல் இடுக்கண் களைந்தும், யான் உரையாடுங்கால் நல்லன இருப்பின் பலர் அறியக் கூறிப் பாராட்டியும், என்னைப் பெற்ற தந்தையினும் பெரிய தந்தையாய் அன்புகாட்டிப் பேணியும் இன்சொல்லும் நகைமுகமும் என்றும் காட்டித் தம் அரிய நண்புடைமையை வாரி வழங்கிய உயர்திரு கோனூர் அவர்கள் தம்மை விட்டுப் பிரிந்து அடிக்கடி காணும் வாய்ப்பு இல்லாது தொலைவில் வாழும் இந்நாளிலும் இடைவிடாமல் உளத்தாலும் ஓலையாலும் தம் நண்புடைமையை வழங்கிக்கொண்டே வருகின்றனர். இத்தகைய நண்புடைமை மற்றவர்பாலில்லையே என்று காண்கின்றபோதுதான் இதை ஏனையவற்றிலும் மிக்க அருமைப்பாடு என்று கருதி, இத்தகைய நண்புடைமையை அவர்களிடமிருந்து பெறவும், அவர்கள் போன்று நண்புடைமைப் பண்பினை ஒவ்வொருவரும் போற்றவும் முன்வர வேண்டும் என்று தமிழ்வாணர்களை யெல்லாம் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகின்றேன் ''

**மொ. அ. துரை அரங்கசாமி,**
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
**சென்னைப் பல்கலைக் கழகம்.**

P. ALALASUNDARAM CHETTIAR, M.A.,
Associate Professor in Tamil, Madras Christian College,
Member of the Board of Studies in Tamil,
Member of the Academic Council,
Member of the Senate Madras University.

15—1—1955

**திருவாளர் பண்டித மீ. கந்தசாமிப் புலவர்**
செயலாளர்,
**மதுரைத் திருவள்ளுவர் கழகம்**, மதுரை.

***அன்புடையீர்,***

**வணக்கம்.** தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய தமிழ்த் திருநாள் அழைப்பிதழ் பெற்று மகிழ்ந்தேன். எனது வாழ்த்

தினை இம்முடங்கல் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்த் திருநாள் கொண்டாட்டத்திற்குச் சிறந்த தலைவர்களும் அரிய சொற்பொழிவாளர்களும் அமைந்துள்ளனர். இத்திருநாளில் தன்னிகரில்லாத் தமிழ்ப் பேராசிரியர் முதுபெரும் புலவர் திரு. ஆ. கார்மேகக்கோனார் அவர்கட்குப் பொன்னாடை போர்த்தல் மிகவும் பொருத்தமாகும். இவ்விழாவில் தமிழவேள் திரு. P. T. இராசன், M. L. A., அவர்கள் பொன்னாடை போர்த்தும் பணியில் ஈடுபடுவதும், நாவலர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M.A., B.L., தலைமை தாங்குவதும் சாலவும் பாராட்டற்குரியன. திரு. கோனார் அவர்களின் தொண்டினைப் பாராட்டுதற்குப் பல அறிஞர்கள் வாய்த்ததும் பொருத்தமாக உள்ளது. எனது வணக்கத்தினையும் வாழ்த்தினையும் திரு. கோனார் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுவல். எல்லாம் வல்ல ஸ்ரீ சோமசுந்தரப் பெருமான் திருவருளால் தமிழ்த் திருநாள் சிறக்க நடைபெறுவதாக.

அன்பன்,

**பூ. ஆலாலசுந்தரன்.**

குறிப்பு :– திரு. கோனார் அவர்களின் திருத்தொண்டினைப் பாராட்டிச் சில வரிகள் எழுதி இக்கடிதத்தோடு பிணைத்துள்ளேன்.

**பூ. ஆ.**

## முதுபெரும் புலவர்

திருவாளர் ஆ. கார்மேகக் கோனார் அவர்கள் அன்புடைமை, அறிவுடைமை, ஆள்வினையுடைமை, சான்றாண்மை முதலிய பண்புகள் நிரம்பப் பெற்றவர்; தமிழ் இலக்கிய இலக்கணங்களை எழுத்து எண்ணிப் படித்தவர். அவரது தமிழ்ப் புலமை பண்டைத் தமிழ்ச்சங்கப் புலவரின் புலமையினைப் போன்றது என்பது அவரது நூல்களில் அறியக் கிடக்கும் உண்மையாகும்; ''நல்லிசைப் புலவர்'' என்ற தமது அரிய நூலின் வாயிலாகப் புறநானூற்றுச் செய்யுட்களைக் கல்லூரி மாணவர்களுக்கு முதன் முதல் அறிமுகப்படுத்திய

தனிப் பெருமை அவர்களுக்கே உரியதாகும். கல்லூரியில் அவருடைய வகுப்பில் எப்போதும் அமைதியும் ஒழுங்கும் விளங்கின என்று அவரது மாணவர்கள் மூலம் யான் அறிந்து மகிழ்ந்ததுண்டு.

பல தமிழ்க் கலைக் குழுக்களிலும் (Board of Studies & Board of Examiner) தேர்வுக்குழுக்களிலும் திரு. கோனார் அவர்களோடு உடன்சேர்ந்து தொண்டு ஆற்றும் வாய்ப்பு எனக்குப் பல முறை கிடைத்தது. அக்கூட்டங்களில் திரு. கோனார் அவர்களின் நேர்மை, அஞ்சாமை, கண்ணோட்டம், நடுவுநிலைமை முதலிய பண்புகளை யான் கண்டு நேரில் அவரைப் பாராட்டியுள்ளேன். அவர் சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருவிதாங்கூர்ப் பல் கலைக் கழகம், S. S. L. C. தேர்வுக்குழு, M. P. S. C. தேர்வுக் குழு முதலியவைகளில் பங்கு கொண்டு சிறந்த தொண்டு ஆற்றியுள்ளனர். இத்தகைய தமிழ்ப்பணி ஆற்றிவரும் திரு. கோனார் அவர்கள் பன்னெடுங்காலம் சிறக்க வாழுமாறு ஸ்ரீ மீனாட்சிசுந்தரப்பெருமானை யான் எனது மனமொழி மெய் களால் இறைஞ்சுகின்றேன்.

**பூ. ஆலால சுந்தரன்.**

## திரு. L. S. கரையாளர், B. A., B. L.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பாகத் தமிழ்ப் பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனார் அவர்களுக்குப் பொன் னுடை போர்த்திச் சிறப்புச் செய்தமை கேள்வியுற்று மிக்க மகிழ்வெய்தினேன்.

பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனார் அவர்கள் செந் தமிழ்ப் பாண்டிநாட்டில் அபிராமம், அகத்தாரிப்பு கிராமத் தில் பிறந்து, மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கல்வி பயின்று, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முப்பத்தேழு ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராக இருந்து தமிழ்ப்பணி புரிந்தவர்கள்

அக்காலம் தமிழ் தாழ்வுற்றிருந்த காலம். தமிழ் ஆசிரியர்கள் மதிக்கப்படாத காலம். நம் கோனாரவர்கள் தம்மிடம் பயின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்களிடம் தமிழ்ப்பற்றை ஊட்டி, தமிழின் பெருமையையும், தமிழாசிரியர்களையும் மதிக்கச் செய்தவர்கள். நல்ல நாவன்மையும் நல்ல தோற்றமும் உடையவர்கள். தமிழில் அவர்கள் எழுதிய ''நல்லிசைப் புலவர்கள்'' என்ற நூல் மிகச் சிறந்த நூலாகும்.

அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் தொண்டுபுரிய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**எல். எஸ். கரையாளர்.**

**கி. ஆ. பெ. விசுவநாதம்,**
**திருச்சிராப்பள்ளி.**
**Tel. Add. "NADHAM"**
*8—1—55.*

அன்புள்ள ஐயா !

வணக்கம்.

தமிழ்ப்பேரறிஞர் கார்மேகக் கோனார் அவர்கட்குப் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தும் செய்தி என் உள்ளத்தைப் பெரிதும் மகிழ்வித்தது. இதனை வெகு நாட்களுக்கு முன்னமேயே இவர்கட்குச் செய்திருக்கவேண்டும்.

காளமேகமும், கார்மேகமும் தமிழ் மழை பெய்துள்ள இந்தத் தமிழ் மண்ணில் வாழும் செல்வர்கள், செய்ய மறந்த இந்நாள் பணியை, வடக்காடி வீதியிலுள்ள வள்ளுவர் கழகம் செய்துவருவது வாழ்த்தவேண்டிய நற்செயலாகும்.

பேராசிரியர் கோனார் அவர்கட்குப் பொன்னாடைபோர்த்துகின்ற பெருநாளில் அவர்கட்கு நாவலர் என்ற பட்டத்தையும் வழங்கிப் பாராட்டவேண்டும் என்பது என் கருத்து. அவ்வாறு செய்வதுகூட அவரது அரும்புலமைக்கும், பெருந்தொண்டுக்

கும், சிறந்த ஆராய்ச்சிக்கும் ஏற்றதாகாது என்பது என் கருத்து. என்றாலும் அதனை வழங்கி வாழ்த்த வேண்டியது தமிழக மக்களின் நீங்காத கடமைகளில் ஒன்றாகும்.

வணக்கம்.

தங்களன்பிற்குரிய,
**கி. ஆ. பெ. விசுவநாதம்.**

**Phon :84103** **KALAIMAGAL** **P. B. No. 604**
**MYLAPORE : : MADRAS 4.**

**10—1—54**

அன்புடையீர், வணக்கம்.

அகலமும் ஆழமும் உடைய தமிழறிவு பெற்ற திரு. கார்மேகக் கோனாரவர்களுக்குச் சிறப்புச்செய்ய எண்ணியிருப்பது தெரிந்தது, மிக்க மகிழ்ச்சி. புலவரவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கி. வா. ஜகந்நாதன்,
ஆசிரியர்.

சிவக்கவிமணி
திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ.,
(வக்கீல், சைவப் பிரசங்கசாலை அதிபர், கோவைத் தமிழ்ச்சங்கத் தலைவர்.)
"சேக்கிழார் நிலையம்"
வைசியாள் வீதி, கோயமுத்தூர்.
12—1—1955.

நண்பர் – புலவர் திரு. ஆ. கார்மேகக் கோனார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்த மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் முன் வந்துள்ள நற்செய்தியறிந்து மிகவும் மகிழ்ச்சி

யடைகின்றேன். திரு. கோனார் அவர்கள் என்னுடன் நீண்ட கால நண்புடையவர். சென்னைப் பல்கலைக் கழகத் தொடர்பு பற்றி அவர்களுடன் பழகி நீண்டகாலமாக நண்புடையேன். அவர்களைக் கண்ட நாள்முதலே அவரது இன்முகமும் நன் மொழியும் என் மனதிற் பதிந்து அன்பை விளைத்தன. அவர் களது அமைதியான பெருந்தன்மையான ஒழுக்கங்களும் தமிழுக்குப் பேருபகாரமாகிய செயல்களும் என் கவனத்தை ஈர்த்து அன்பைப் பெருக்கின. நூலாசிரியராகவும் பேராசிரிய ராகவும் அவர் தமிழன்னைக்குச் செய்த பணிகள் மிகச் சிறந் தன. தமிழுலகம் அவர்கட்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. அவருக்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்புச்செய்ய முன் வந்த மதுரைத் திருவள்ளுவர் கழகத்தாரைப் பாராட்டுகின் றேன். புலவர் திரு. கோனாரவர்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு நல்வாழ்வு வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்து இனிது வாழ்க என்று வாழ்த்துகின்றேன்.

இங்ஙனம்

**C. K. SUBRAMANIA MUDALIAR.**

Thiru A. S. AIYASWAMY CHETTY, M. A., B. L.,
District Magistrate, Tanjore.
KUMBAKONAM
12–1–1955.

புலவர் திரு. கார்மேகக்கோனார் அவர்கட்குப் பொன்னுடை போர்த்தும் செய்தி கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்றேன். கல்லூரித் தமிழாசிரியர்களில் நல்ல புகழ்ச்சியும், புலவர்களில் செல்வ மும் உடையோர் சிலரில் திரு. கோனாரவர்களும் ஒருவர். பல் கலைக் கழகத்திலும், தமிழ்க் கழகங்களிலும் நீண்டகாலம் தொண்டாற்றிய ஒரு பெரியார், பல ஆராய்ச்சி நூல்களின் ஆசிரியராய் இன்றும் வாழ்கின்ற பழைய புலவர் வரிசையைச் சார்ந்தவர்.

மதுரை, தமிழ் வளர்த்த நகரம். புலவர்களைப் போற்றும் பண்பு, தமிழகத்தில் தொன்றுதொட்ட பழக்கம். மதுரை வள்ளுவர் கழகத்தார் புலவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பிப்பது அத் தமிழ் மரபை நினைவூட்டுகிறது. இதன் தொடர்புடைய எல்லார்க்கும் என் பாராட்டுகள் உரியன. புலவர் கோனாரவர்களும், வள்ளுவர் கழகமும் நீடு வாழ வேண்டுகிறேன்.

S. A. அய்யாசாமி செட்டி

**ABRAHAM ARULAPPAN,** B. A.
Head of The Department of Tamil,
ST. XAVIER'S COLLEGE.

"*Arasaham*"
13. Daniel Thomas St.,
PALAYAMKOTTAI.
*15—1—55*

செயலாளரவர்கள்

**ம. திருவள்ளுவர் கழகம்,**

**வடக்காடி வீதி, மதுரை.**

பெருந்தகையீர்,

பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனாரவர்கள் பல காலம் உடல் நலத்தோடு திடமாக உயிர் வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றிவர வாலறிவனும் அருள்சால் தலைவனுமாகிய இறைவனை வேண்டுவோம்.

தமிழாசிரியக் குலம் உயர்திரு கோனாரவர்களை உள்ளத்தில் நன்றியறிவோடு என்றுங் கொள்ளுதல் கடமையாம். கல்வி நிலயங்களில் தமிழாசிரியர், மாணவர்களால் மட்டுமன்றிப் பிறபாட ஆசிரியர்களாலும் எள்ளல் நகைக்கிடமாகவே மதிக்கப்பட்டனர். தமிழாசிரியருள் ஒருசிலரே அங்கங்கே பிற பாட ஆசிரியரளவு மாணவரது மதிப்பைப் பெறுந் தகுதியுடையராயிருந்தனர். அவருள் முதன்மை பெறத்தக்க ஒருவராகப் பாராட்டப்படத்தக்கவர் பேராசிரியர் கார்மேகக் கோனாரவர்களாவர். பலவகையான திறமை நிறைந்த அமெரிக்கன் கல்லூரி மாணவரிடையே அன்று தமிழ் வகுப்பை

யும் தமிழாசிரியரையும் இகழ்தலொழிந்து புகழ்தல் எழுந்து நின்றதெனின் காரணம் இத்தமிழ்ப் பேராசிரியரது கல்வித் தெளிவும் கற்பிக்கும் ஆற்றலும், ஆள்வினையுடைமையுமன்றி வேறென்ன ?

இப்புலவர் பள்ளி வகுப்புகளுக்குங் கல்லூரி வகுப்புகளுக் குந் தேவையான பலவகைத் தமிழ்ப் புத்தகங்களையும் வெளி யிட்டுச் சிறந்த நூலாசிரியராகவும் விளங்குகிறார்கள்.

இப்பெருந்தகையாரைப் பொன்னாடை போர்த்திப் பாராட்டுதல், தக்கவரைப் போற்றும் பண்பு நமக்குண்டு என்பதற்குத் தெளிவான சான்றாகும்.

அதே தமிழாசிரியக் குலத்தைச் சேர்ந்தவன் என்பதிற் பெருமைகொண்டு அவர்களை மனமார வாழ்த்தி எனது வணக்கத்தையுஞ் செலுத்துகிறேன்.

தங்கள் அன்பான அழைப்புக்கு மிகநன்றி. திருவள்ளுவர் கழகத்தைத் திறம்பட நடத்திவருந் தங்கட்கு இறைவன் என்றும் அருள் செய்க.

மிகவணக்கம்.

தங்களன்புள்ள

**ஆ. அருளப்பன்**

Dharmapura Adeena Tamil Pulavar,
Vachagamani, Vidwan
S. RUDRAPATHI, M. A.,
Assistant Professor of Tamil
CENTRAL COLLEGE

12/1, Jawaharlal Street,
SESHADRIPURAM,
BANGALORE 3,
15–1–1955.

பேரன்பரீர்,

வணக்கம். நலம், நலமறிய விருப்பம். தாங்களன்புடன் அனுப்பிய தமிழ்த் திருநாள் அழைப்பு வரப்பெற்று மகிழ்ந் தேன். பழுத்த தமிழ்ப்புலமை பாலித்தொழுகும் செந்தமிழ்ச் செல்வர் திரு. கார்மேகக் கோனார் அவர்கட்குப் பொன்னாடை

போர்த்துதல் தமிழன்னைக்குப் போர்த்தி அவள் திருவடி வணங்குதலை யொக்குமென நினைக்கின்றேன். முடியுடை வேந்தர்கள் மறைந்த இக்காலத்தில் நாமெல்லாம் இந்நாட்டு மன்னராகையால் நாம் புலவர்களைப் பாராட்டுதல் மிகப் பொருத்தமாம். கடமையுமாம்.

தமிழ் விழாச் சிறப்புற்று நடைபெறுவதாக. வாழிய மாபெரும் புலவர்கள்.

இங்ஙனம்,
அன்பன்,
S. ருத்திரபதி.

## LIEUT. A. KRISHNAMURTI, (NCC).

M. A., B. L., B. O. L. (HONS).,
17, Periya Appavu Chetty Street,
Mathalampet, KUMBAKONAM.

பாண்டிநாட்டின் பழைய தமிழ்ப் பேராசிரியர் மரபில், இன்று ஓய்வுபெற்றுள்ள பெரியார் இருவர். ஒருவர் பேராசிரியர் கார்மேகக்கோனர்; மற்றவர் பேராசிரியர்—சோமசுந்தர பாரதியார். இவ்விருவரும் வறுமையைப் புறங்கண்ட புலவர்கள்.

புலவர்களின் வரலாறுகளைத் தொகுத்தெழுதிய முதலாசிரியர்களில் திரு. கோனாரவர்களும் ஒருவர். இப்பேராசிரியரைக் கடந்த பதினாறாண்டுகளாக நேரில் அறிவேன். எடுத்த தோற்றமும், கருத்தமேனியும், மலர்ந்த மீசையும், நிமிர்ந்த நடையும், அன்போடு உறுதியமைந்த பார்வையும் உடைய புலமையாளர் திரு. கோனாரவர்கள். கொண்டகொள்கையில் அழுத்தமும், அதை எடுத்துக்கூறுவதில் நெஞ்சுறுதியும் பெற்ற தமிழ்ப் பண்பினர். தமிழ், தமிழாசிரியர் என்றால் புறக்கணிப்பாக நடத்திய பழைய நாளில், கல்லூரி மாணவரும், ஏனையாசிரியரும் தம்பால், ஆர்வத்தோடு அடங்கியொழுகு

மாறு கல்வி ஆட்சி செலுத்திய ஒரு நல்லாசிரியர். இது ஒரு, காலப் பழைமைபெற்ற உண்மை என்பதைத் தமிழுலகு முழுதும் அறியும்.

வாழ்க அக் கார்முகில்! வாழ்க அவ் வையைக்கோன்!!

அ. கிருஷ்ணமூர்த்தி.

P. Doraikannoo, Mudaliar, M. A., M. A., L. T., DIP. EC.,
Principal,
Dr. Alagappa Chettiar Training College,
KARAIKUDI.
12—1—55.

அன்பரீர்,

வணக்கம் பல. தங்கள் 5—1—55 கடிதத்தால் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் நிகழும் ஜய ஆண்டு தைத் திங்கள் நான்காம் நாள் திங்களன்று (17—1—55) செந்நாப் புலவர் உயர்திரு ஆ. கார்மேகக்கோனார் அவர்கட்குப் பொன்னாடை போர்த்தும் விழா நடைபெற இருப்பதை அறிந்து எம் உள்ளம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது.

மதுரை அமெரிக்கன் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் ஆகவும் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பகுதியின் உறுப்பினராகவும் இருந்து அன்னார் இயற்றிய அரும்பணியைத் தமிழ்நாடு நன்கு அறியும்; தமிழ்ப் புலவர்களும் அறிஞர்களும் நன்கு அறிவார்கள். அவருடைய பரந்த மனப்பாங்கும் கல்லூரி மாணாக்கர்கட்கு இனிய எளிய நடையில் செந்தமிழை விளக்கிச் சொல்லும் தண்ணென்ற சொல்லொழுக்கும் ஆழ்ந்தகன்ற இலக்கியப்பட்டறிவும் அவரிடம் கற்றோர் உச்சி மேற்கொண்டு போற்றும் உயரிய பண்புகளாகும். இனிய பல செந்தமிழ் நூல்களை இயற்றித் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் செய்த தொண்டைத் தமிழுலகம் என்றென்றும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளது. இனியும் செந்தமிழ்ப் பணிகளைச் சீரிய முறையில் செய்துவர உடல் வளம்பெற்று கலைமகளும் திரு

மகளும் கலந்து நடமாடும் இன்பப் பேருருவாக அவர் என்றென்றும் இனிதோங்கி நிலைக்க எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். அவரைப் பாராட்டும் திருவள்ளுவர் கழகத்தினரின் முற்போக்கு எண்ணத்தை மெச்சுகிறேன்.

வணக்கம்,

அன்பன்,
ப. **துரைக்கண்ணு முதலியார்.**
12—1—55.

உயர்திரு,
**பண்டித மீ. கந்தசாமிப் புலவர்,**
செயலாளர்,
மதுரைத் திருவள்ளுவர் கழகம், **மதுரை.**

Vidwan N. SUBBU REDDIAR, M. A., B. SC., L. T.
LECTURER,
Member, Academic Council and Senate
UNIVERSITY OF MADRAS
Alagappa Training College,
KARAIKUDI.
15-1-1955

பேரன்புடையீர்,

வணக்கம் பல. தாங்கள், 5—1—55உ கடிதம் வந்தது. கடிதம் கொண்டுவந்த செய்தி பெரு மகிழ்ச்சியினைத் தந்தது. மதுரைத் திருவள்ளுவர் கழகச் சார்பில் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. கார்மேகக் கோனார் அவர்கட்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்பிப்பதைக்கண்டு பேருவகை அடைகின்றேன்.

பேராசிரியர் கோனார் அவர்களைப்பற்றி முதன் முதலாக யான் அறிந்தது 1934-ல்; யான் முசிறியில் பள்ளியிறுதித் தேர்வு வகுப்பில் பயின்று வந்த காலம் அது. பள்ளியிறுதித் தேர்வுக்குரிய தமிழ்ப்பாட புத்தகத்தில் இருந்த 'நல்லிசைப்

புலமை மெல்லியலார்' என்ற தலைப்பில் ஔவையாரையும் அதிகமானையும் பற்றி அவர் எழுதிய கட்டுரையொன்று என் உள்ளத்தைக் கவர்ந்தது. செஞ்சொற்களால் புனையப்பெற்ற மிடுக்கான நடை, பொருள் தெளிவு, கருத்து ஆழம், ஆற்றொழுக்கு போன்ற ஓட்டம் முதலிய உயர்ந்த உரைநடைப் பண்புகள் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அந்தக் கட்டுரைதான் என் தமிழ்ப் படிப்புக்கு வித்திட்டிருக்குமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. எப்படியோ யான் தமிழ்ப் படிப்பைப் பல ஆண்டுகட்குப் பிறகு - வாழ்க்கையில் நுழைந்த பிறகு - மேற்கொண்டேன். 1934 தொட்டு சென்ற ஆண்டு வரை அவரைக் காணும் பேறு பெறவில்லை; பார்க்கவேண்டும் என்ற உள்ளத்துடிப்பு மட்டிலும் இருந்துகொண்டுதானிருந்தது. 1941-லிருந்து துறையூர் உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றிவந்த பல ஆண்டுகளில் அவருக்கும் எனக்கும் பல கடிதப் போக்கு வரவுகள் இருந்தன. நேரில் காணும் நாள் எந்நாளோ? என்று எண்ணிக்கொண்டிருந்தது என் மனம்.

சென்ற ஆண்டில் எனக்கு மதுரை அமெரிக்கன் உயர்நிலைப் பள்ளியின் இலக்கியக் கழக ஆண்டுவிழாவில் தலைமை தாங்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது பல தமிழ் அறிஞர்களைக் காணும் வாய்ப்புக்களும் ஏற்பட்டன. பேராசிரியர் கோனார் அவர்கள், அ ட க் க மே உருவெடுத்தாற்போன்று கூட்டத்தின் கடைசியில் அமர்ந்துகொண்டு என் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்ததைக் கூட்டத்தின் இறுதியில் அறிந்தேன். பிறகு என்னை அவர்கள் தம் இல்லத்திற்கு இட்டுக் கொண்டு சென்றார்கள்; இரண்டு மணி நேரம் அளவளாவினோம். 1934-ல் அரும்பிய ஆர்வம் 1953-ல் தான் நிறைவு பெற்றது! உவப்பத்தலைக் கூடினோம். ஆழ்ந்த புலமையும் நிறைந்த பட்டறிவும் பெற்ற பேராசிரியருடன் அளவளாவும் பேறு பெற்றதை எண்ணி எண்ணி என் உள்ளம் உவகைக் கடலில் ஆழ்ந்தது. அவருடைய பரந்த மனப்பான்மையும், அடக்கமான புலமையும், இலக்கிய நயங்காணும் ஆற்றலும் என் சிந்தையைக் கவர்ந்தன. அந்த அறிவுத்திருவுரு இன்னும் என் உள்ளத்தில் நின்று நிலவுகிறது; என்றும் நின்று நிலவும்.

பல ஆண்டுகள் உடலாலும் உள்ளத்தாலும் தமிழ் நாட்டிற்குத் தொண்டாற்றிப் பாடஞ்சொல்லியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து நிற்கும் பேராசிரியர் கோனார் அவர்களைத் திருவள்ளுவர் கழகம் பாராட்டுவது மிகமிகப் பொருத்தமானதாகும். செல்வர்கள் கூடிச் சிறப்பிப்பதைவிட அறிஞர்கள் கூடிப் போற்றுவது தலை சிறந்தது. ஆன்ற மதிப்பு மேன் மக்களால்தானே மதிக்கப்பட வேண்டும்? செந்நாப்புலவருக்குப் பொன்னுடை போர்த்தும் விழா சிறப்புற நடைபெறவும் முதுபெரும் புலவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் தொண்டாற்றி இன்னும் பன்னெடு நாட்கள் உடலுறுதியுடனும் மனவளத்துடனும் வாழவும் எல்லாம்வல்ல இறைவன் துணைபுரிய வேண்டும் என்று அவன் அடிகளை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

வணக்கம்.

அன்பன்,
ந. சுப்பு ரெட்டியார்.

Prof. N. P. Palaniappan, M. Sc. M. Sc. Tech (Manch).,
A. M. C. T., F. C. S.,
Professor & Head of the Department of Chemical
TECHNOLOGY, ANNAMALAI UNIVERSITY.

பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோனார் அவர்களுக்கு "செந்நாப்புலவர்" என்ற சிறப்புப்பட்டம் அளித்துப் பொன்னுடை போர்த்தி தமிழ்நாட்டுத் தலைநகரின் மக்கள் அவரைப் பாராட்டுவது அறிந்து மிகவும் மகிழ்வெய்துகிறேன். திரு. கோனார் அவர்கள் 37 ஆண்டுகள் அமெரிக்கன் கல்லூரியில் சலிப்பின்றித் தமிழ்ப்பணி ஆற்றி வந்திருக்கின்றனர். மிகவும் தெள்ளியமுறையில் சங்கநூல்களை அவரினும் திறம்பட விளக்குபவர்களை நான் இதுவரை கண்டதில்லை. மாணவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதில் சோதனைகளில் தேர்வு பெறுதல் ஒன்றே குறிக்கோள் என்ற குறுகிய நோக்கம் இல்லாது,

தமிழறிவையும், தமிழார்வத்தையும் மாணவர் உள்ளங்களில் தோற்றுவித்து, வளர்த்து வந்துள்ளார்கள். இதற்குச் சான்று இன்று அவரது மாணவர்களில் பலர் தமிழன்பர்களாகப் பணி செய்து வருவதே. எனது வாழ்வின் பெறும்பேறுகளில், ஆசிரியர் அவர்களிடம் நான் பதினாறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் மாணவனாய்க் கற்கக்கிடைத்த வாய்ப்பே சிறந்தது எனக்கருதுகின்றேன். பேராசிரியர் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் உடல்நலத்துடன் வாழ்ந்து தமிழ்த்தொண்டு ஆற்றுமாறு அருள இறைவன் திருவடிகளை வழுத்துகின்றேன்.

N. P. Palaniappan.

K. G, KRISHNAN. B. SC., (Hons.)
M. SC., A. INST. P. (LOND.)
*Professor of Physics.*
DR. ALAGAPPA CHETTIAR COLLEGE,
ALAGAPPA COLLEGE, P. O.
KARAIKUDI.
11–1–55.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்துச் செந்நாப் புலவருக்குப் பொன்னுடை போர்த்தும் விழாச் செயலாளருக்கு வணக்கம். நலம்.

கடல் நீருண்ட கார்மேகம் பொழிந்து உயிர் நலம் பெறப் பயிர்விளைத்து வையை யாறுகப் பெருகுதல்போல் பேராசிரியர் **ஆ. கார்மேகக் கோனாரவர்கள்**, மொழிக் கடல்புக்கு ஏற்பன முகந்து நிறைந்து இளைஞர் உள்ளச் செய்யுள் காலமறிந்து பெய்து நலன்நந்த நாடணி நந்தப் புலனந்த மதுரை அமெரிக்கன் கல்லூரி வைப்பின் தமிழ்ப் பகுதிப் பேராறுகப் பெருகிய திருவுடைப் பேராசிரியராவர்.

உள்ளமும் உரையும் ஒளிதரும் பொன்னுக்கொண்டு கருவி வான மென்னத் திகழும் திரு. **கார்மேகக் கோனாரவர்கட்குத்**

தமிழ்த் திருநாளாம் பொங்கலன்று பொன்னுடை போர்த்தல் கேட்டு எம்போல்வார் உள்ளத்தே உவகை ஊறிப் பொங்க விடுகிறது. தமிழறிஞர் திறம் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு வாழ்க !

இங்ஙனம்,
K. G. Krishnan.

*Vidwan*
M. GOVINDASWAMY THEVAR,
LECTURER IN TAMIL,
Jamal Mohamed College,
28, Ramanujam Street,
KALLUKUZHI,
TIRUCHIRAPALLI.
16—1—1955.

அன்புடைய ஐயா !

பொன்னுடை போர்த்தும் பெருவிழாக் குறித்த கடிதங் கண்டு பெருமகிழ்வுகொண்டேன். விழாவில் கலந்துகொள் ளும் பேறு பெற்றிலேன்.

தமிழ்நாடும் பிறநாடும் அறிந்த தண்டமிழ்ப் புலவர் திரு. கார்மேகக்கோன் அவர்கட்கு எத்துணைச் சிறப்புச் செய் யினும் ஏற்புடைத்தாகும்.

சங்கப்புலவரிடைத் துங்கமுற்று விளங்கிய எங்கள் நக்கீரர் போல்த் ஆலவாய் உறை அருந்தமிழ்ப் புலவர்க்கு மேலதாய் விளங்கும் "மேகம்" அவர்களின் புலமையையும் வேறு நிலைமை யையும் எடுத்துக்கூறவேண்டுமோ ? நாடு அறிந்த நற்றமிழ்ப் பெரியாரின் பாடு, பாவலர் பலரும் அறிந்ததே, எழுத வேறு ஏடு வேண்டுமோ ? அது இடமின்றியொழியுமே.

வாழ்க ! கார்மேகம், வளர்க நம் செந்தமிழ்.

அன்பன்,
மு. கோவிந்தசாமித் தேவர்.

## T. V. சதாசிவபண்டாரத்தார்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

அன்புமிக்க ஐயன்மீர்,

நலம், என் சொந்த ஊராகிய திருப்புறம்பயம் போயிருந்தேன். ஆதலால் இன்றுதான் தங்கள் கடிதத்தைப் பார்க்கும்படி நேர்ந்தது. தங்கள் கழகத்தின் அரும்பணியைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

தமிழ்ப்பேராசிரியர் திருவாளர் ஆ. கார்மேகக்கோனார் அவர்கள் நம் தமிழ்த்தாய்க்குப் பல்வகைத் தொண்டுகள் புரிந்து வருவதை யான் நீண்டகாலமாக நன்கறிந்துள்ளேன். அத்தகைய பெரும்புலவரைப் பாராட்டிப் போற்றுதல், நம் மனோரின் சிறந்த கடமைகளுள் ஒன்றாகும். ஆதலால் தங்கள் பெரும்பணி இனிது நிறைவேறுக; இவர் நீடுவாழ்ந்து நற்றொண்டுகள் நம் தமிழகத்திற்கு ஆற்றுவாராக.

அன்பன்,
**T. V. சதாசிவன்.**

## அர. அ. நாராயணசாமி நாயுடு, M. A.,

**விருதுநகர்.**

13—1—1945.

அன்பரீர், வணக்கம்.

தங்கள் தமிழ்த் திருநாளழைப்புக்கு நன்றி. தங்கள் கழக முயற்சிகள் வெற்றி பெற்று வாழ்க.

திருவாளர் ஆ. கார்மேகக் கோனாரவர்கள் பொன்னாடை போர்த்தப் பெறுஞ்சிறப்புக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இக்கழகம் ஆற்றுஞ்சிறப்பு தமிழ் நாட்டின் பாராட்டே யாவதாக; அவர்கள் நீடு வாழ்க.

அன்பு,
**நாராயணசாமி.**

**சுப. அண்ணுமலை M. A.**
*தமிழ்விரிவுரையாளர்:*
*தியாகராயர் கல்லூரி,* **மதுரை.**

*தமிழ்ப்பெரும் புலவர், பேராசிரியர்*
உயர்திரு. **ஆ. கார்மேகக்கோனர்** அவர்கட்குப் படித்தளித்த
## பாராட்டுரை

''இருந்தமிழே! உன்னல் இருந்தேன்'' என்று புலவர் பெருந்தகை பாடியாங்குத் தமிழ்ப் புலவர்க்கு உயிரும் உவகையுமாக இலங்குவது செழுந்தமிழ். தம்மனேர்க்கு வாழ்வும் வளமும் தந்த வண்டமிழைச் சங்கத்துச் சான்ருேரும் இளங்கோவும் வள்ளுவரும் பொங்குகவிக் கம்பனும் மற்ருேரும் சொல்மணியால் அணிசெய்து, சிந்தனையால் அழகூட்டிக் கற்பனையால் எழில் சேர்த்து, மூவேந்தர்க்கொரு செல்வி, மொழியரசி எனப்போற்றிச் சிங்காதன மேற்றி மகிழ்ந்தனர். அப்பெரும் புலவர் வழித்தோன்றலாய்ச் சங்க மிருந்த தமிழ் மதுரையில் தோன்றி இருபதாம் நூற்ருண்டுத் தமிழ்ப் புலவர் தலைமணிகளில் ஒருவராய் வீற்றிருக்கும் பேராசிரியர் உயர்திரு. ஆ. கார்மேகக்கோனர் அவர்கள் அமெரிக்கன் கல்லூரியில் பல்லாண்டுகள் சிறப்புறத் தலைமைத் தமிழ்ப் புலமை நடாத்தியவர்கள். அவர்கள், கார்மேகமென்னும் தம் பெயருக்கேற்பச் சொன்மாரி பொழியும் திறமிக்கவர்கள். வடசொற்கலப்பின்றிக் கவிநயமும் பிறபொருளும் பற்றிச் சீரிய சொற்களால் அவர்கள் விரிவுரை நிகழ்த்துங்கால் தமிழ்வயப்பட்டுத் தந்நிலை மறவார் இரார். அவர்கள் பால், தேறிய தமிழ் பயின்று வீறிய சொல்நடை பேசும் திறம்பெற்ருேர் பலர். சங்கநூல்களில் அவர்கட்கு வாய்த்த ஆழ்ந்த புலமையும், அவர்களதியல்பான நுழைபுலமும், நல்லிசைப் புலவர் பல்லோரின் வரலாற்றையும் பாநலம் பற்றிய பல ஆராய்ச்சிகளையும் அவ்வப்போது வெளிப்படுத்தின. அவர்களது ஆராய்ச்சியில் அமையும் மதிநுட்பமும் சொல்நயமும் தெள்ளு நடையும் கற்போர்க்குக் கழிபேருவகை செய்வன. பேராசிரி

யர் கோனாரவர்கள் பல்லாண்டுகள் சிறப்புற வாழ்ந்து தமிழன்னைக்கு அமிழ்தமன்ன தொண்டுசெய்யத் திருவருள் துணைசெய்வதாகுக.

இங்ஙனம்,
அன்பன்,
சுப. அண்ணாமலை.
16—1—55.

**நா. லக்ஷ்மீநரசிம்மன்,**
*தலைமைத் தமிழாசிரியர்,*
*பி. கே. என். உயர்நிலைப்பள்ளி,*
**திருமங்கலம்.**

மதுரைத் தமிழ்ப்பேராசிரியர் **திரு. ஆ. கார்மேகக் கோனார்** அவர்கள் ஒரு **செந்தமிழ்க் குலபதி** என்றே கூறத்தக்கவராவர். முப்பது ஆண்டுகட்கு மேலாக மதுரை அமெரிக்கன் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய பெரியார் அவர் என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். ஆயிரக் கணக்கான அவரது மாணவர் இன்று நாடெங்கும் பல்வேறு துறைகளில் தலைமை பூண்டு அவரது புகழ்ச் சான்றுகளாக விளங்கி வருகின்றனர்.

தமிழ்மொழிப் பற்றும் பயிற்சியும் மிகக் குறைத்திருந்த அந்நாளில், தமிழ் மொழிப் பயிற்சியால் பேருதியம் பெறுதற் கியலாது என்று உறுதியுற அறிந்த அந்நாளில், தனித்தமிழ் பயின்றவர்களை எள்ளிநகையாடிய அந்நாளில், தமிழார்வத் தால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் மாணவராகச் சேர்ந்து பெரும் புலவர்களிடம் முறையுறக் கற்றுப் புலமை நிரம்பினார். இவர் ஆசிரியப்பணி ஏற்ற பிறகும் அடிக்கடி சங்கத்திற்கு வந்து மாணவர்களுடன் அளவளாவி அறிவுரை வழங்கிச் செல் வது வழக்கம். இவர் ஆசிரியப்பணி ஏற்ற சில ஆண்டுகட்குப் பிறகு சங்கத்தில் மாணவனாகச் சேர்ந்து பயிலும் பேற்றினைப் பெற்றிருந்த காரணத்தால் இளமை தொடங்கியே இப்பெரி யாரை நன்கறியும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது என்பதைப் பெரு மகிழ்வுடன் கூறிக்கொள்கின்றேன்.

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகட்குமுன் மதுரை அன்னக் குழி மண்டபத்தில் இவர்கள் புரிந்த பத்துப் பாட்டுச் சொற் பொழிவு இன்றும் என் உள்ளத்தை விட்டு அகலவில்லை. இவ் வாறு, பண்பும் அறிவும் செறிந்த சொற்பொழிவுகளால் இவர் புரிந்த செந்தமிழ்ப்பணி என்றும் மறக்கற்பாலதன்று. பின்னர் உயர்நிலைப்பள்ளி, கல்லூரி இவைகட்குத் தமிழ்த் தேர்வுக் குழுத்தலைவராகவும் பல்கலைக்கழக உறுப்பினராகவும் இருந்து இவராற்றிய பணி பலரும் அறிந்ததே. மாணவர்க்குரிய பாட புத்தகங்களும் நூல்களும் இயற்றிப் பல்லாயிரவர் மொழிப் பற்றுடன் தமிழ் கற்க இன்றும் பணி புரிந்து வருகின்றார். இவ்வாறு பேராசிரியராகவும் சொற்பொழிவாளராகவும் தேர்வுக் குழுத்தலைவராகவும் நூலாசிரியராகவும் இவர் புரிந்த - புரிந்துவரும் - தமிழ்ப் பணிகளை அளவிட்டுரைக்க இயலாது.

கோனாரவர்கள் அன்புகனிந்த உள்ளமுடையவர்; ஆழ்ந் தகன்ற நுண்ணறிவுடையவர்; எப்பொழுதும் இனிய மொழியே பேசுபவர். இவரது கனிந்தவுள்ளமும் நுண்ணிய அறிவும் எப்பொழுதும் செயல் வடிவிலே காட்சியளிக்கும். இவர் இவ்வாறு செயல் வீரராக விளங்கினமையால்தான் பின்னாளில் இவரது சொற்பொழிவுகள் அருகித் தோன்றுவன வாயின. இவரால் நன்மை பெற்றோர் எண்ணிலர். இவரிடம் தமிழ் பயின்ற மாணவரேயன்றி இவரிடம் பயிலாதவராயினும் தமிழைக் கற்றவர் இவரை ஒரு புகலிடமாகப் பெற்றனர். இவரால் தகுதியும் பதவியும் பெற்றுவிளங்கும் தமிழாசிரியர் பலர் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இன்று தமிழ்ப் பணி ஆற்றிவருகின்றனர். 'மகனறிவு தந்தையறிவு' என்பதுபோல இவரது மகனார் ஆ. கா. கிருஷ்ணன் அவர் களும் தமிழாசிரியராகவே விளங்குதல் மகிழ்ச்சிக்கும் புகழ்ச் சிக்கும் உரியது. இத்தகைய தமிழ்ப்பெரியாரைப் பொன் னாடை போர்த்திப் பாராட்டுவது நன்றிமறவாத் தமிழகத் தின் இயல்பான கடமையேயாகும். தமிழ்நாட்டு வரலாற்றில் இடம் பெறத்தக்க பொன்னாளாகவே இது போற்றப்படும்.

**G. GOVINDAN, M. L. A.**
**PARAMAKUDI.**
(RAMNAD DT.)

அன்பார்ந்த,

ஐயா, மதுரை, திருவள்ளுவர் கழகத்தில் உயர்திரு. ஆ. கார்மேகக் கோனர் அவர்களுக்குத் தைமாதம் 4-ந் தேதி பொன்னுடை போர்த்த ஏற்பாடு செய்தவர்களுக்கு என் நன்றி.

கிழக்கு ராமநாதபுரம் ஜில்லாவின் அபிராமம் பக்கத்தில் உள்ள அகத்தாரிருப்பு கிராமத்தில் பிறந்து, தமிழ்நாட்டில் பிரபல்யம் அடைந்தவர் உயர்திரு. ஆ. கார்மேகக்கோனர், அவர்கள். எங்கள் கிழக்கு ராமானுதபுரம் ஜில்லா வாசியாகிய இவர் அடையும் புகழ்ச்சியில் எனக்கும் பெருமை உண்டெனத் தெரிவித்துக்கொள்வதுடன் நீண்டகாலம். திரு. ஆ. கார் மேகக்கோனர் அவர்கள் வாழப் பிரார்த்திக்கிறேன்.

**கோ. காவிந்தன், M. L. A.**

ராஜ்குமார்
**காசிநாததுரை**
இராமனுதபுரம்
12—1—55.

அன்புள்ள பெரியார் அவர்களுக்கு,

தாங்கள் அனுப்பிய அழைப்பிதழ் பார்த்து மகிழ்ச்சி. ஆண்டவன் அருளால் விழா இனிதே நடைபெற வணங்கு கிறேன். பண்டிதர் திரு. கார்மேகக் கோனர் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தும் நல்லசெய்திக்கு என் நன்றி. தனிப் பட்ட அளவிலேயே களிப்புற வேண்டியவன் நான்.

அன்புள்ள,
Kasinathan.

## மகளிர் இல்லம்

**அமராவதிபுதூர்,** இராமனுதபுரம் ஜில்லா.

*15—1—55.*

*அன்புள்ள ஐயா,*

தமிழின்பால் ஆர்வங்கொண்டவர் அனைவரும் அறிந்த புலவர் பெருமகன் கார்மேகக்கோனுர் அவர்கள், தமிழகத்தில் இன்று மறுமலர்ச்சிக் கவிஞர்களும், எழுத்தாளர்களும் தோன்றி வருகிருர்கள். மக்களிடம் தமிழுணர்வு பெருகி வருகிறது. என்ருலும் பழைய அழுத்தமான கல்விமுறை மறைந்து வருவதையும் காண்கிருேம். முன்னுளில் தமிழைத் தொழிலுக்காக அன்றி, தமக்குக் கிடைக்கும் நற்பேருகவே கருதிப் பயின்று வந்தனர். எனவே இலக்கண இலக்கியங் களில் முழுநாட்டம் வைத்துப் பயில முடிந்தது. அவ்வாருன புலவர்களுள் பெரியார் கார்மேகனுரும் ஒருவர். அவரைப் பாராட்டிப் பொன்னுடை அணிவிப்பது சாலப் பொருத்த முடையது. உங்கள் முயற்சி ஓங்குக. புலவர் பெருமகனுக்கும் அவர் பணிக்கும் பல்லாண்டு.

அன்புள்ள,

**சொ. முருகப்பன்.**

**பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனுரவர்கட்குப்** பொன்னுடை போர்த்தும் செய்தி கேட்டு நாங்கள் மகிழ்ச்சிக்கடலில் திளைக்கிருேம். பேராசிரியர் அவர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சியையே தம் வாழ்வின் இலட்சியமாக எண்ணி எழுத்தாலும் சொல்லாலும் ஈடிலாப் பணியாற்றிய ஏந்தல்; கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மிக்கவர்; எண்ணிய உண்மையை எவர்க்கும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் புண்ணியர். அவரைப் போற்றுவதும் புகழ்வதும் தமிழ் மொழிக்குப் புரியும் - தமிழ் அன்னைக்கு ஆற்றும் - சிறந்த வழிபாடே ஆகும். சங்கம் வளர்ந்த செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் செந்நாப்புலவர் பேராசிரியர் ஆ. கார்மேகக் கோனுரவர்கள்

பைந்தமிழ் மொழிபோல் பல்லாண்டு வாழ்க. வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

ம. துரைசாமி முதலியார் அண்டுகோ,
*1/1 மலையபெருமாள் தெரு, சென்னை.*

6603

M. R. APPADURAI, B. A.
EDUCATIONAL PUBLISHER,
VEPERY P. O. :: MADRAS - 7

**மதுரைத் திருவள்ளுவர் கழகச் செயலாளர் அவர்களுக்கு!**

அன்பார்ந்த புலவீர்!

வணக்கம்! புலவர் பெருந்தகை உயர்திரு. ஆ. கார்மேகக் கோனாரவர்களுக்குக் கழகச் சார்பிற் பொன்னாடை போர்த்தி மகிழ விரும்பும் கழக அன்பர்கள், தமிழறிஞர் பாராட்டுக்கு மிகுதியும் உரியவர்கள். பல்லாற்றானும் தமிழன்னையின் ஏற்றங் கருதித் தொண்டாற்றிவரும் அறிஞர் பெருமான் கோனாரவர்களுக்குத் தமிழ்நாடு பெரிதும் கடமைப்பட்டுள்ளதாகும். அறிஞர் கோனாரவர்கள், மாணவருலகத்திற்கு மிகச் சீரிய முறையில் அமைந்த போதகாசிரியராய்ப் பலரும் மதிக்கத் தொண்டாற்றி வருவதுடன் தண்டமிழ் நூல் பல இயற்றிய சான்றோராகவும் திகழ்கின்றார்கள். அவர்கள் தமிழிற் பெற்ற பெரும் புலமையும், நாவன்மையும், செயலாற்றுந்திறனும் ஒய்வு பெற்றுள்ள இந்நாளிலும் பல்லாற்றானும் பயன் விளைத்து வருவது அனைவருமறிந்ததே. இத்தகைப் பண்புடையாளர் பின்னும் பலர் பாராட்டுக்குரியவராய்ப் பல்லாண்டு வாழத் திருவருள் சுரக்குமாறு எல்லாம்வல்ல ஆண்டவனை மனமொழி மெய்களாற் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கும்:

13. முத்தியாலுசெட்டித் தெரு,
புரசை, சென்னை-7

அன்பன்,
ம. ரா. அப்பாதுரை.

பெருநாவலர், பேராசிரியர்

**பு. சி. புன்னைவனநாத முதலியார்**

**13—1—1955.**

*அன்பார்ந்த நண்ப !*

வணக்கம் பல. என்னுடன் தமிழ்ச்சங்கத்தில் இற்றைக்கு 48-ஆண்டின்முன் பயின்று சிறப்புறத் தேர்ந்து பின், மதுரை அமெரிக்கன் முதற்றரக் கல்லூரியில் 1914 ஜூலையில் பேராசிரியராக நியமனம் பெற்று, கல்வி பயின்றுர் அனைவரும் பாராட்டு முறையில் சிறந்து, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் தேர்வுக் கழகத் தலைவராகவும் பெருமையுற்ற நண்பர் திரு. ஆ. கார்மேகக் கோனுர் இவர்கட்கு 17—1—1955-ல், திருவள்ளுவர் கழகச் சார்பில் பொன்னுடை போர்த்திச் சிறப்பிப்பது அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன்.

ஆங்கில மொழிப் புலமையும் சார்ந்திருப்பின் மேனுட்டாரும் பாராட்டும் சிறந்த தமிழ்ப் புலவரிலொருவராவர் இவர். இவர்கள் நண்பும் பண்பும் மற்றைய புலவர்கட்கு வாய்ப்பது அருமை. இவர்கள் நீடுவாழ இறைவன் பொன் மலரடி போற்றுகின்றனன். பாட்டின் வாயிலாகவும் சில வரைந்துள்ளேன் அவற்றையும் போற்றுக.

கல்லூரிப் பேராசிரியர்,

**பண்டித வித்வான் தி. இராமானுசன்,**

**205. மணிரங்கபுரம், சிவகங்கை.**

**12—1—54**

பண்பு கெழுமிய நண்பர்—புலவர் கந்தசாமி அவர்கட்கு: சிவகங்கை அன்பன் இராமானுசன் எழுதியது. நலம். வணக்கம் பல. 'புலவர் தலைவர்' திருமிகு கோனுர் அவர்களைப் பாராட்டும் செய்தி கேட்டேன். அதில் மகிழ்ச்சி பெரிது. தமிழ், இனிப்பெறும் சீரிய வாழ்வின் பேரறிகுறி அது. திருமிகு கோனுரவகள் தனித்தமிழில் பெரும் புலவர். " தன்மானமும்

தனியாற்றலும் தமிழிலே புலவர்க்கு உண்டு'' — என்ற உண்மைக்கு உயர்வு நல்கிய வண்மையாளர். தம் இயல் பால் வீறிவிளங்கும் பேரறிவாளர். புலமையால் தலைமை மிக்க கலைஞர். மேலும் பலபல நாள் போற்றலாம். போற்று வதில் பொருளிராது. பொருத்தமும் இராது. கழகம், அவரைப் போற்றுவதில் புகழில்லை: அவரைப் போற்ற — பண்ணிய புண்ணியமே பெரிது. கழகத்தின் புண்ணிய நல்லூழ் கண்டே நான் மகிழ்கின்றேன். தமிழர்க்கு மட்டும் அல்ல: தமிழுக்கே விழுமிய திருநாள் இது. இதுகண்டு தமிழினமும் தமிழகமும் விழித்தெழுதல் தகும். ''ஆங்கிலம் செம்பாகம் கற்றன்றித் தமிழ் பாங்கு உறுது'' என்கிறது தூங் கும் தமிழன் குரல். இக்குரல் மாற — தமிழினம் வளம்பெற — தனித்தமிழ் கற்றவன் இனித் தாழ்ந்தவன் அல்லன் என்று தலைநிமிர — இத்திருநாள் பெருநாள் ஆகுக. வள்ளுவர் உள்ளம் தமிழ் புரக்கும் வள்ளல்களைக் கள்ளம் இன்றி ஊக்குக. விழாவில் வந்து கலக்க ஆர்வம் உண்டு. அலுவல் மிகுதி அதற்கு இடம் தரவில்லை. தங்களது பொன்னனை முயற்சி உயர்ச்சி உறுக. விழா வெற்றி பெறுக. மீண்டும், வணக்கம்.

இங்ஙனம் அன்புமிக்க
நண்பன்,
தி. இராமாநுசன்,

# மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார்

**தமிழர் திருநாளின் நான்காநாள்**

**17—1—55 திங்கட்கிழமை**

**மதுரை அமெரிக்கன் கல்லூரி முன்னாள் தமிழ்ப்பேராசிரியரும்**

**பல செந்தமிழ் நூல்களின் நல்லாசிரியருமாகிய**

## திரு. ஆ. கார்மேகக் கோனாரவர்கட்குப்

*பொன்னாடை போர்த்திப் பாராட்டியபோது*

*மனமுவந்து படித்துக்கொடுத்த*

## வாழ்த்துப்பா.

(ஆறுசீர் விருத்தம்)

திருவளரும் பெருவையை செவிலியெனத் திரைக்கரத்தாற் செழுநீ
[ரள்ளிக்
கருவளரும் மகவுநிகர் பயிர்க்களித்துப் பயன்மக்கள் கையிற் சார
உருவளரும் கடுங்கோடை யினுநல்கு முயர்பாண்டி யூர்கள் தம்மிற்
றருவளரும் மாமுகவை சேர்அகத்தா ரிருப்பொன்ருச் சாற்று வாரால்.

முன்னமொரு வடவாயர் பாடியிலோர் கார்மேகம் முளைத்த தென்ன
மன்னியவங் நகராயர் பாடியென வொருநாமம் வாய்த்த தந்தை
தன்னைநிகர் உடற்கட்டு மனத்திண்மை சொல்வன்மை தழைப்ப வந்த
பன்னயஞ்சேர் **கார்மேகப்** பேரறிஞ! பல்லாண்டு பகரக் கேண்மோ.

வேந்தனெனத் திகழ்பாண்டித் துரைநிறுவு தமிழ்ச்சங்க மேவி யெட்டாண்
டாய்ந்துபல கலைபயின்று முதற்பரிசு மடைந்துபே ராசா னாகி
மாந்தர்புகழ் அமெரிக்கன் கல்லூரி மாணவர்தாம் மாந்த நந்தம்
தீந்தமிழை முப்பத்தே ழாண்டுகளாச் செப்பியநின் றிறநன் ருமே.

செந்தமிழ்ப்பே ராசிரிய னெனவங்கண் நீதலைமை செலுத்தும் போதே
இந்திமொழி மலையாளம் இயைந்தவட மொழிதமக்கு மேந்த லாகி
யெந்தமொழி யாசானும் பெருதபெருஞ் சிறப்பெய்தி யிருந்த தோடும்
அந்தநாள் மாணவரும் அன்புடனச் சங்கொளச்சீ ரடைந்தா யன்றே.

மல்லல்நிறை திருவிதாங் கூர்சென்னை வளரண்ணு மலையின் மேய
நல்லனபல் கலைக்கழகத் தேர்வாள ராகநீ நயந்து வைகி
வல்லவந்தக் குழுக்கள்சில வற்றினில்நீ தலைமைநிலை வகித்தும் வந்தாய்
சொல்லவெனின் நின்புகழெம் மொருநாவாற் சொல்லலுறுந் துணைய
[தாமோ.

இடுக்கணுறப் புலவர்தமை நெருக்கிவரு வறுமையினை யிறுகப் பற்றி
நடுக்கமுறப் புறங்கண்டாய் புலவர்குழாந் தனக்குயர்வு நல்க லானும்
வெடுக்கெனவே பேசலிலாய் பாண்டியநா டாமிதற்கு மேன்மை தந்தாய்
வடுக்களைந்தாய் தமிழணங்கை யரியணைமேல் அமர்வித்து வாழச்
[செய்தாய்.

பெயர்பெறுகண் ணகிதேவி பழந்தமிழர் நாகரிகம் பேசிப் பின்பு
மயர்வறுநல் லிசைப்புலவர் ஆபுத்தி ரன்கதைநூல் வரைந்து மற்றும்
உயர்வமையும் மாமதுரைக் காஞ்சிமலை படுகடாம் உலாக்கள் மூன்று
அயர்வொழிவெண் பாமாலை வள்ளுவர்நூ லாராய்ச்சி வகுத்துத் தந்தாய்.

அன்றுபாண் டியவரசர் பொன்னுடை போர்த்துதல்போல் அவரில் லாத
இன்றுபா ளையவரசாம் தமிழவே ளெனு பீ-டி. இராசன் அன்பு
துன்றுசீர் பெருகிடநின் றமிழ்த்தொண்டு பாராட்டிச் சூழ்ந்து மக்கள்
நின்றுபெரும் வாழ்த்தெடுப்பப் பொன்னுடை போர்த்தமகிழ் நெஞ்சங்
[கொண்டோம்.

பொன்னுடை பெறுபுலவ! வாழ்கவினித் தமிழகத்தின் புகழ்மிக் கோங்க
முன்னுள்போற் சொற்பெருக்கோ டுரைகாணல் நூலியற்றல் முனைந்து
[நின்று
நின்னுலே யியன்றவரை யிசைபேணல் இவைபலவும் நிகழ்த்தி யிங்குப்
பன்னுளும் நீவாழ வருள்கவெனத் தமிழ்த்தாயைப் பணிகின் றேமால்.

இங்ஙனம்,
தங்களன்புள்ள,
**மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார்,**
வடக்காடி வீதி.

மதுரை,
17—1—55.

மதுரை வடக்காடி வீதி

**திருவள்ளுவர் கழகத்தில் நடக்கும்**

புலவர் பாராட்டு விழாவில்

# திரு. ஆ. கார்மேகக் கோனாரவர்கட்குப்

பொன்னாடை போர்த்தும்போது

**மதுரைத்** திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன இளவரசு

திரும்பெருந்திரு சோசுந்தர பரமாசாரிய சுவாமிகள்

## மனமுவந்தளித்த வாழ்த்துரை.

**நிலமண்டில ஆசிரியப்பா**

திருச்சிற்றம்பலம்

மலர்தலை யுலகில் மாதவர் போற்றும்
பலர்புகழ்ந் தேத்தும் பண்பினைக் கொண்ட
மதுரைமா நகரில் வாழ்ந்திடும் புனிதன்
சதுரர்கள் போற்றுந் தமிழ்ச்சங் கத்தில்
விதுரனாக் கற்ற மேன்மை யாளன்
ஆயர் குலத்தில் அவதரித் திட்ட
தூய குணத்தோன் தொன்னூ லாய்ந்தவன்
அமெரிக்கன் கல்லூரி யாசா னாகப்
பல்லாண் டிருந்து பணிபுரி சமர்த்தன்
கல்வித் துறையின் கழகத் திருப்போன்
பல்பல நூல்கள் பாங்குட னியற்றியோன்
கன்னலின் இன்சொற் கழறும் விபுதன்
பன்னரும் நூல்கள் பாங்குடன் கற்றோன்
கார்மே கம்போற் கவிமழை பொழிவோன்
கார்மேக மென்ற கண்ணியப் பெயரான்
இத்தகைக் குணமிகு ஏந்த லாவான்
பத்தியும் புத்தியும் பாரினிற் பெற்று
புத்திரர் மித்திரர் போற்றஇப் புவியில்
நித்திய மாக நீடாயு ளோடு
சித்திகள் பெற்றுச் சிறந்துமே வாழ
மனமொழி மெய்களால் வாழ்த்துதும் யாமே.

பொன்னாடை போர்த்தப்பெற்ற உயர்திரு

**பேராசிரியர் கார்மேகக் கோனார் அவர்கட்கு**

**கவியரசர் திரு. பாரதிதாசன் உரைத்த**

# வாழ்த்து

சேண்அவர் ஒழுக்கத் திற்கே! திருஅவர்
தமிழர்க் கெல்லாம்.
மாணவர் மனவி ருட்கே அவர்ஒரு
சுடர்வி ளக்கு!
வீணவர் தமிழ்ப்பண் பாடு விரும்பார்பால்
திரும்பார் நெஞ்சே
காண்அவர் நாட்டுத் தொண்டு! கார்மேகக்
கோன்தான் வாழ்க. 1

வீணாளே ஒன்று மின்றி வினைசெயும்
விரிக திர்போல்
வாணாளில் இதுவ ரைக்கும் தமிழர்தம்
மாண்பு காக்கக்
கோணாமல் தொண்டு செய்தார் கோனிவர்போல்
எவரு மில்லை;
நீணாள்கள் வாழ்க அன்னார் தமிழ்அன்னை
மீளு மாறே. 2

நாட்டுக்குத் தொண்டு, பள்ளி நாடினர்
மகிழக் கல்வித்
தேட்டுக்குத் தொண்டு, நாளும் செந்தமிழ்
மொழிமேற் பாயும்
கேட்டுக்குத் தொண்டு, வாய்மை இதுஎனக்
கிளக்கும் பன்னூல்
ஏட்டுக்குத் தொண்டு - அதேநாள் இல்லுக்கும்
தொண்டு செய்தார்; 3

முதியவர் ; கடந்த நாட்கள் முற்றிலும்
அவர்தம் தொண்டிற்
புதியவர் ; எண்ணி லாத புலவர்தம்
நெடுங்கு ழாத்தின்
பதிஅவர் ; தமிழர்க் கான பாங்கிது
வென்று காட்டும்
மதிஅவர். கார்மே கத்து வண்மையை
வாழ்த்து நெஞ்சே ! 4

வள்ளுவர் கழகத் தார்கள் மகிழ்வுடன்
இற்றை நாளில்
எள்ளலில் புலவர் கோனுக் கெழில்மிகு
பொன்னி னாடை
வள்ளல்போல் போர்த்து கின்றார் மாண்பொடு
வாழ்த்து கின்றார்
உள்ளுமிச் செயல்தான் யார்க்கும் உவகையை
விளைக்கு மாலோ. 5

நல்லதின் நன்மை நாடும் நல்லாரால்
உண்டிவ் வையம்
அல்லவா ? அறமே வெல்க அல்லவை
தாழ்க என்னும்
கல்வியார் ; அறிவின் மேலார் ; கார்மேகக்
கோனார் தாம்தம்
இல்லத்தார் உறவா ரோடு வாழிய
இனும்பல் லாண்டே. 6

பாரதிதாசன்



கல்லூரித் தமிழ்க்கழக மாணவர்களும் பேராசிரியரும். (1932)

தோரமங்கலம்
புலவரேறு ஆசிரியர்

**திரு, வரதநஞ்சைய பிள்ளையவர்கள் பாடியவை**

(பதின்முன்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

அமிழ்துண வானப் புலவரை யருத்தி யதனினு முயர்சுவைத் தமிழை
அவனிவாழ் புலவர்க் களிக்கமுற் சங்கம் அமைத்தொரு தலைவனு
[மானேன்
சமையகப் பொருணூல் ஒன்றுதன் பெயராற் சாற்றிய தென்றமிழ்க்
[கடவுள்
தடாதகை கொழுநன் கூடலம் பதியிற் சார்திரு வள்ளுவர் கழகத்

தமைவுறு சான்றோர் தமிழறி கோமா னயகார் மேகநா வலனார்க்
கன்பினு லொளிர்பொன் னுடைபோர்த் துதலை யறிந்தக
[மகிழ்வனுதலினுற்
கமையுறு மிவர்கள் யாவர்க்கும் செல்வம் கருதிய நலமெலாம் பெருகக்
களிப்புறு வாழ்நாள் மிகப்புகழ் ஓங்கக் கருணைகூர்ந் தருள்வனென்
[குவமே.

இங்ஙனம்
தங்கள் ஆணையின் வண்ணம்.
எனது அருமை நண்பர்
கார்மேகனார்க்கும் வணக்கம்
**அ. வரதநஞ்சைய பிள்ளை.**

இடம்:
தற்போது
சென்னை

**K. BALASUNDARA NAYAKAR, M. A.**
**Reader in Tamil**
**S. U. Oriental Institute, TIRUPATI.**
**10—1—55**

**இயன்மொழி வாழ்த்து.**

**கட்டளைக் கலித்துறை**

கன்னித் தமிழ்மொழிக் காக்கம் தருவான் கலையுணர்வின்
நன்னர்ச் சிறந்த பழநூல் புதுக்கி நலமுறுத்தி
முன்னிய மாணவர் பல்லா யிரவர் முழுதுணரத்
துன்னியோன் ாரெனிற் கார்மேகக் கோனெனச் சொல்குவரே.

பல்கலைச் சங்கக் குழுவிற் றமிழ்மொழி பாங்குபெற
அல்கலில் ஆற்றற் பெருக்காற் புரிந்த அறிஞனெவன் ?
மல்கிய மாணவர் உள்ளங் கொள நூல் மகிழ்ந்தளித்துப்
பல்கிய ஆசான் எவன் ? அவன் கார்மேகப் பாவலனே.

செந்தமிழ் நாடு முழுதும் இவனையார் தெரிகிலாதார்
முந்துள சங்கநூ லெல்லாம் திரண்டு மொழிபுலமாய்
வந்திவண் கார்மேக னென்றோர் வடிவாய் மருவினவால் ;
நந்தில மற்றவை ; இங்கிவன் வாழ்கபல் நாள்நிலத்தே.

ஆசிரியப்பா :

முதுபெரும் புலவன் ; மொழியையாய் உளத்தன் ;
புதுமுறை யாசான் ; பொழியும் வண்மைக்
கார்மேக மன்னன் ; கவிஞன் ;
கார்மேகன் வாழ்க ; ஏர்பெறத் தமிழே.

இங்ஙனம் அன்புள்ள,
**கே. பாலசுந்தர நாயகர்.**

சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், திரு.
**ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை,**
*தியாகராாசர் கல்லூரி,* **மதுரை.**

**அவர்கள் பாடியவை**

*சீர்மேவச் செந்தமிழ்ச் செல்வர் பலர்சூழக்*
*கார்மேகக் கோனார்க்கெம் கண்பரவ — நேரிய*
*பொன்னுடை போர்த்திப் புலமை புகழ்கின்றார்*
*எந்நாளும் வாழ்கஎன ஏத்து.*

*வேறு*

*கார்மேகம் கண்டு களித்த மயிற்கன்று*
*போர்வையணிந்து புகழ்பெற்றான் ஒரு தமிழ்வேள் ;*

கார்மயிலின் களிப்புக்குக் காரணம் கண்டான்போல்
கார்மேகக் கோனுக்குக் கவினியதோர் பொன்னுடை
சீர்த்தவொரு பேரணிந்து செய்யமலர்த் தாரணிந்து
போர்த்தினன் இன்றும் ஒரு புரவலனும் தமிழவேள்;

அதனால்,

பொன்னுடை பூண்ட புலவனும் போர்த்த
மன்னுடு சீர்த்தி வண்டமிழ் வேளும்
நன்னகர் மாந்தரும் பிறரும்
மன்னுக நெடிது மாநிலத் தினிதே.

நலம்படு செந்தமிழ்ப் புலமை என்பது
எளிமை யுடைத்தன்று இந்நாள்; ஏனெனில்
அரசியல் ஆங்கிலம், அமைச்சியல் ஆங்கிலம்;
வாணிகம் ஆங்கிலம்; வண்கலை ஆங்கிலம்;
நீதி மன்றத்தும் நிற்பது ஆங்கிலம்;
ஓது பவர்க்கும் ஊதியம் ஆங்கிலம்;
இறைவன் முன்னும் இன்தமிழ் இல்லை;
எங்கும் செந்தமிழ்க் கினிய இடமில்லை;
இந்த நிலையில் செந்தமிழ் பயில்வதும்
அரிது; ஒருசிறிது கற்க நேரினும்
பெரிது பிறர்புகழ் பெருமை பெறுவது;
உடல்பொருள் உயிரெனும் மூன்றையும் மறந்து
இடையில் பலர்செய் இகழ்ச்சியும் துறந்து
சீர்மேவு நம்தமிழ்த் திறமிகப் பயின்ற
கார்மேகனார் போல் கருத்திடைத் திண்ணிய
கொள்கையால் உயர்ச்சி கூடுதல் அரிதே;
அரிதின் அரிதாம்இவ் வருமை கண்டும்
பேரா சிரியனும் பெருமை யுணர்ந்தும்
செந்தண் மதுரைச் சீர்த்த நன்மக்கள்
பொன்னுடை போர்த்து அவர்புலமைக்கு வணக்கம்
செய்வது கண்டு தெளிந்தனம்
உய்ந்தது தமிழகம் தமிழ்சிறந் தெனவே.

ஔவை - சு. துரைசாமி

## திரு, வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை

காஞ்சிபுரம்.

*செந்நாப் புலவர் திருவாளர் கோனூர்க்குப்*
*பொன்னுடை போர்த்தும் புலவீர்காள்! — எந்நாளும்*
*செந்தமிழ்க்குத் தொண்டுமிகச் செய்வாரைப் போற்றுதலே*
*சிந்தைக் கினிய செயல்.* **1**

*கார்மேகக் கோனூர் கனிவார் மனமுடையார்*
*சீர்மேவு செஞ்சொற் றிறனுய்வார் — பார்மேவு*
*தண்டமிழின் மேலாந் தரமாகு நூல்தருவார்*
*பண்டைநூ லாய்ந்து பரிந்து.* **2**

**மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை.**

உத்தமபாளையம்

பண்டித, வித்வான்

## திரு, தி. சங்குப்புலவர் பாடியவை

அகவல் விருத்தம்

சீர்மேவுந் தென்மதுரை அமெரிக்கன் கல்லூரி சிறக்க வாங்குப்
பேர்மேவுந் தமிழ்த்தலைமை யாசிரிய னெனவமர்ந்து பெருமை பெற்றோய்!
ஏர்மேவுஞ் செந்தமிழ்நூற் புலவரெலாம் வியக்குவண்ண மினிமை யாகக்
கார்மேகம் போலமொழி மழைபொழியுங் கார்மேகப் பேர் நாவல்லோய்!

செந்தமிழிற் பற்றுள்ளங் கொண்டிளமைப் பருவத்தே
[தெரிந்தாய் பன்னூல்
வந்துபெருங் கல்லூரி மாணவர்க்குத் தமிழ்பயிற்றும் வண்மை பூண்டாய்
சந்தமுறு சுவைப்பாவுங் கட்டுரையும் பலநூலுந் தகவே தந்தாய்
இந்தமுறை தமிழ்த்தொண்டு புரிவதுவே கடமையென
[விவண்வாழ் கின்றாய்.

நின்னருமைத் தமிழ்ப் பணியை பாராட்டா தாருளரோ நிலத்தி லின்று
மன்னுமது ரைத்திருவள் ளுவர்கழக மும்வியந்து மதித்து மேலாம்
பொன்னுடை நின்மேனி போர்த்தியதென் றுலிதனிற் புகழ் வேறுண்டோ
என்னுரையிற் பாட்டினினின் பெருஞ்சீர்த்தி யியம்புவது மெளிதே யம்மா,

**நேரிசை வெண்பா**

**கண்ணன் திருவள் ளுவர்கழகங் காணவந்து**
நண்ணியது போற்ருேற்ற நாங்கண்டோம்—புண்ணியமே;
நன்ருளிற் கார்மேக நாவலற்கே யார்வலர்செம்
பொன்ருடை யைப்போர்த்த போது.

இங்ஙனம்,
**தி. சங்குப்புலவர்,**
12—1—55.

*செட்டிநாடு '' இதழாசிரியர் '' தருமபுர ஆதீன வித்துவான், திருவண்ணுமலை ஆதீன விரிவுரையரசு, சித்தாந்தப் புலவர்மாமணி பாலகவி,*

**வயிநாகரம், வே. இராமநாதன் செட்டியார்**
தேவகோட்டை.
**11—1—55.**

*மதுரைத் திருவள்ளுவர் கழகச் செயலாளரவர்களுக்கு பேரன்புடையீர்! வணக்கம். நலம். தங்கள் 5—1—55 கார்டு கிடைக்கப்பெற்றேன். அடியேனது பாராட்டுச் செய் யுள் வடிவம் பெற்று, இதனடியில் எழுதப்பெற்றுள்ளது. பயன்படுத்திக் கொள்க.*

பதினுறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

*வானத்துக் கார்மேகம் மாநிலத்தி லுள்ள*
*மன்னுயிர்கள் வாழ்வதற்கு வழிசெய்யு நீரை*
*வழங்குவது கருதியதன் மாண்பைமிக மதித்து*
*மாந்தரெலாம் பாராட்டி மகிழவது கண்டோம்.*

*ஊனத்தை யார்ந்தகுண மொருசிலமற் றதன்பா*
*லுளஎனினும் குணங்கருதி யுளமமைப்பா ருலகோர்*
*உமைபாகத் தொருவனிருந் தொண்டமிழா ராய்ந்த*
*வொருசங்க மதுரையினி லுறைகின்ற வாசான்,*

ஞானத்தைச் சூற்கொண்டு நண்ணுகின்ற கொண்மூ;
நறுந்தமிழ்ச்சொன் மழைபொழியு நயனுடைய
[வெழிலி;
நங்கையமர் திருமார்பி னுயகனை யேத்தி
நாளுளும் பரவுகின்ற நல்லிசைசேர் புலவன்.

தேனொத்த தமிழ்க்கடலிற் றிளைத்துதவுங் கொண்டல்
திகழ்குணத்தை யன்றியொரு குறையுமிலாச் சீரான்
செப்புமிசைக் கார்மேகக் செம்மலைப்பா ராட்டுந்
திருவள்ளு வர்கழகச் செயற்கிணைமற் றதுவே.

நலம் பெருகுக.

அன்புள்ள
**இராமநாதன் செட்டியார்.**

## வித்துவான், S. ஆழ்வாரையங்கார்.

தலைமைத் தமிழாசிரியர்.
சூசையப்பர் உயநிலைப்பள்ளி, மதுரை.
12—1—55.

## திரு, ஆ. கார்மேகக் கோனாரவர்களுக்குப் பொன்னாடை போர்த்தவிழாக் காலத்துப்
## பாடியளித்த பாராட்டு.

ஆனபல புகழ்சேர் மானவர் வாழும்
அபிரா மஞ்சேர் அகத்தா ரிருப்பில்
புகழொடு தோன்றிய தகவு மிகப்பெறூஉம்
கார்மே கப்பெயர்க் கண்ணிய நீயே
அமெரிக்கர் நிறூஉம் ஆன்றகல் லூரித்
தமிழ்ப்பே ராசா னுகித் தலைமையுற்
றரியபல் பொருளும் உரியநன் மாணவர்
மனங்கொள உரைக்கு மாண்பால் என்றும்
திசையெலாம் இசைபெறூஉந் தெள்ளியை ; வல்லுநர்
போற்றச் சொற்பொழி வாற்றுந் திறத்தினை

சங்கக் கல்லூரியிற் சார்ந்துபன் னூல்பயில்
சிறப்பினை ; நூல்பல செய்துயர்ந் தனையால்
இன்னபன் னலமும் ஏய்ந்தவெம் பெருமநீ
ஊழி ஊழி ஊழி
வாழி வாழி வளம்பல படைத்தே.

இங்ஙனம்
S. ஆழ்வாரையங்கார்

**வேம்பத்தூர், திரு. பி. பாஸ்கரையர்**
*தலைமைத் தமிழாசிரியர்*
*மதுரைக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி*, **மதுரை.**

## சிறப்புரை

வெண்பாக்கள்

பாண்டித் துரைத்தேவர் பைந்தமிழ்ச் சங்கத்திற்
பாண்டித் தியபதக்கம் பாரித்தோன் — ஈண்டித்
தலத்தமெரிக் கன்பள்ளித் தண்டமிழ்ப்பே ராசான்
பலத்தநா ளுற்றபண் பன். 1

சங்கத் தமிழ்நூல்க டம்மிற் றிளைத்தபலன்
பொங்கத் தமிழ்வசன புத்தகங்கள் — எங்கெங்கும்
காணவெளி யிட்டுக் கரைகண்டோ னஃதன்றி
வேணவெலாம் பேசுமேதா வி. 2

பல்கலைச்சங் கத்திற் பசுந்தமிழ்க்கார் பங்குகொண்டோன்
நல்கலைத்தஞ் சீராக நண்ணினோன் — அல்கலிலாச்
செம்பொன்னும் மாணவருந் தேசமெலா மாக்கிவைத்தோன்
நம்பொன்னு சாமிமகிழ் நன். 3

செந்தமிழ்தேர்ந் தேயறிவுச் செல்வம் மிகப்படைத்தோன்
செந்தமிழின் மேன்மையே செப்புபவன் — சந்ததமும்
சங்கத்திற் காந்தொண்டு சாலப் புரிந்துவரக்
கங்கணங்கொண் டான்கார்மே கம். 4

அன்றுற்குச் செம்பொன்னும் ஆடையினைப் போர்த்திமகிழ்
நன்னுளு மிந்நாளாம் நாவலர்கள் — என்னுளும்
எல்லீரும் வாழ்கவென இவ்வால வாயீசன்
வல்லியினை யாம்வாழ்த்து வம்.

**பி. பாஸ்கரையர்.**

**மதுரைத் தமிழ்ச் சங்கம்,**
மதுரை.
**18—1—1955.**

**வெண்பா**

கார்மேக மென்றுன்பேர் கட்டுரைத்தார் நீயுமக்
கார்மேகம்போல் விளைத்தாய் கல்விநலன் — கார்மேக
வண்ணனடி மறவாய் வாழிபல காலமிவண்
மண்ணவர்கள் ஏத்த மகிழ்ந்து.

**திரு. நா. அப்பனையங்கார்,**
செந்தமிழாசிரியர்.

**திரு. பண்டித. ஆ. சிவசுப்பிரமணியன்,**
தலைமைத் தமிழாசிரியர்,
சௌராட்டிர உயர்நிலைப்பள்ளி, **மதுரை.**

ஆசிரிய விருத்தம்

செந்தமி ழெனுந்தீம் பௌவஞ்
சிறக்கவுண் டெழுந்து பொய்ம்மை
சிந்திட இடித்து நல்லோர்
சேரவை யதனில் மின்னி
நந்தலி லாத வாழ்க்கை
நலம்பெற மாண்ப யிர்க்கிங்(கு)
உய்ந்திடப் பெய்து காத்த
உயர்ந்தகார் மேகம் வாழி.

**14—1—55,**
மதுரை.

இங்ஙனம்,
**ஆ. சிவசுப்பிரமணியன்.**

புலவர் மணியாகிய திருமிகு

## ஆ. கார்மேகக் கோனாரவர்கட்குப்

## பாராட்டுப் பாமாலை.

### வித்வான் திரு. இராசகோட்டியப்பன்

தண்டமிழின் கரைகடந்தாய்! தமிழ்ப்புலவோர்
கொழுகொம்பாய்த் தலைமை சான்றாய்!
பண்டிருந்த சான்றோர்தம் பட்டியலைப்
பெருக்குமுயர் பண்பா டுற்றாய்!
கண்டிருந்த புலவரெலாங் களிகூர்ந்து
பொன்போர்த்துங் கார்மே கக்கோன்!
கொண்டிருந்த புகழ்க்கமைந்த குரிசிலே!
குணக்குன்றே! குலவி வாழி! 1

எங்கள்பிரான் சம்பந்தன் இனிதேத்தும்
எழின்மதுரைக் கியைந்த கீர்த்திப்
பொங்குநிறை யமெரிக்கன் கல்லூரித்
தலைப்புலமை பூத்துப் பல்லாண்(டு)
எங்குமியற் பெயர்நிறுவி என்போன்றார்க்
கிதயமளித் தினிதி னிற்பாய்
செங்கமலத் திருவிழைகார் மேகம்எனும்
திருப்பெயரைச் செழிக்கச் செய்தாய்! 2

கற்பகமும் நனிநாணக் கலைவழங்கிக்
களிக்கின்ற காட்சி கண்டோர்
சொற்கண்டு தமிழ்சொரிந்து திளைக்குங்கார்
மேகமிதே! சொல்வ தென்னென்(று)
அற்புதமுற் றானந்தம் கொளவளவில்
ஆராய்ச்சி நூல்கள் தந்த
சற்குணசம் பன்னஉயர் தமிழ்ப்புலவோர்
முடிமணியே தழைத்து வாழி! 3

அ. இராசகோட்டியப்பன்,
11—1—55.

**திரு. ந. சேதுரகுநாதன்**

கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்,

**விருதுநகர்.**

**17—1—1955.**

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார்க்கு மெய்சிலிர்த்த உவகையுடன் வணக்கம் செலுத்துகின்றேன்.

மதுரைமாநகரைப் பண்டைத் தமிழ் மதுரையாக்கிச் செழித்தோங்கச் செய்கின்றீர்கள். மகிழ்ச்சிப் பெருக்குத் தாங்கமுடியவில்லை. இனி எதிர்காலத்தின் சிறப்பு எம்மனோரால் இயம்புதற்கு மேலாக மிளிரும் என்பதில் ஐயமில்லை.

பொன்னுடை போர்த்தப்பெறும்

**பேராசிரியர் கார்மேகனார்க்கு வாழ்த்து.**

சிங்கக் குரலும் தமிழ்த்திறலும்
திகழ்ந்தோங் குருவின் பெருவிறலும்
மங்குல் வான மழையின்மிகத்
தமிழின் மழைபெய் மகிழ்தகவும்
பொங்கும் பெரிய கார்மேகன்
பொன்போர்த் திலங்கும் புகழ்மேகன்
எங்கும் புகழும் எழில்வேந்தன்
என்றுந் தமிழ்போல் வாழியவே.

வாழியர் செந்தமிழ்க் கார்மேகனார். செந்தமிழ்க் கார் மேகத்தின்மேல் பொன்போர்த்து நிற்குஞ் செந்தமிழ்ப் புரவலர் P. T. ராஜன் வாழ்க.

இங்ஙனம்,
ந. சேதுரகுநாதன்.

பேராசிரியர்

**திரு, ப. ஜோதிமுத்து, M. A.**

கண்கவர் வனப்பே இன்குரல் புன்முறுவல்
தூயஉடை திருமண் தோற்றமுறு பாகை
என்பவை அணிவான் இசைபல பெறுவான்
தேமதுரத் தமிழைத் திறம்படப் பேணும்
மாமதுரைத் தமிழ்ச்சங்கப் புலமைவளம் கொண்டோன்.
அந்நகர் தன்னில் அமைந்து விளங்கும்
அமெரிக்கன் கல்லூரி ஆசிரியன் ஆகி
முப்பத்தே ழாண்டு மொழித்திற மிகுந்து
மாணவர் மகிழவும் மற்றையோர் வியக்கவும்
தமிழ்மொழி பயிற்றித் தனிமதிப் படைந்தோன்.
பல்கலைக் கழகப் பதவிகள் ஏற்றுத்
திறம்பட நூல்பல செவ்விதின் இயற்றிச்
சீர்மிகு மக்கட் பேறும் செல்வமும்
சிறப்புற இல்லறம் செழிக்கவே வாழ்வோன்.
எவ்வழி வாழ்வது உலகம் அவ்வழி
தன்வழி எனக்கொளும் தகைசால் அறிஞன்.
இத்தகைப் பெரியோன் இத்தரை புரக்கும்
எழிலியின் பெயரை இசைவுறப் பெற்றோன்,
கற்றோர் காமுறும் கார்மேகம்
என்றன் ஆசான் இனிது வாழியவே!

**Thiru, Vidvan, S. DORAISWAMY,**
Principal.
Srimath Sivagnana Baliya Swamigal Tamil College
MAILAM, TINDIVANAM.
14—1—55

சீரெழில் இளமை தொன்மை தெய்வத்தின் தன்மை யோடு
பேரிசை இனிமை ஏய்ந்து பிறங்குபைந் தமிழைப் போற்றி
பாரினில் மிக்க பாண்டிப் பழம்பதி மதுரை மேய
கார்நிகர் வண்கை கொண்ட கார்மேக ஞர் தாம் வாழ்க.

பொங்கலின் பின்னர்ப் போந்த பொன்தமிழ்த்
[திருநாள் தன்னில்
திங்களும் கதிரும் என்னச் சிறந்தநூல் பலவுந் தந்தே
எங்களிற் சிறப்பின் மிக்க ஏந்தல்கார் மேக ஞர்க்குப்
பொங்குபொன் னுடை போர்த்திப் பொற்புறச் செய்வீர்
[வாழ்க.

செந்தமிழ்ப் புலவன் றன்னைச் சிறப்பித்த மன்னர் பின்னால்
நந்தமிழ் நாட்டில் தாயின் நன்மொழி வளர்க்க என்றே
அந்தமில் உலக மெல்லாம் தமிழ்நாட்டை அறியச் செய்த
பைந்தமிழ் வள்ளு வன்பேர் பரப்புநும் கழகம் வாழ்க.

இங்ஙனம்,
**சி. துரைசாமி.**

செஞ்சொற் கவிஞர்

## திரு, அ. கி. பரந்தாமனர், M. A.

தமிழ்ப்புலவர் தமைமதியா அந்த நாளில்
தனிமதிப்பைச் சென்னையிலே அடையச் செய்தான்
அமிழ்தமென இருந்தஎங்கள் **நமசி வாயன்;**
அருந்தமிழ்த்தென் மதுரையிலே அவரைப் போன்று
நிமிர்ந்திருந்து புலவர்களை மதிக்கு மாறு
நின்திறலால் கார்மேக வள்ளால், செய்தாய்!
இமிழ்கடல்சூழ் உலகினிலே புலவர்க் கெல்லாம்
இம்மதிப்பைப் பெறச்செய்தாய், வாழி வாழி! 1

கல்லூரி மாணவர்கள் அஞ்சிப் போற்றக்
கவினுறவே வகுப்பாட்சி செய்த தன்மை
சொல்லிடவும் கேட்கின்றோம்; அதுவு மன்றித்
தொன்மதுரைச் சங்கநூற் கடலில் மூழ்கிப்
பல்லோரும் பயனடையப் புலவர் வாழ்வைப்
பரிந்தளித்தாய் நூலாக; அதுவு மன்றி —
எல்லோரும் போற்றுறவே பாடம் சொன்னாய்;
இவ்வாறு தமிழ்வளர்த்த கோவே வாழி! 2

இன்றுனக்குப் பொன்னுடை போர்த்தி எங்கள்
இனப்புலவர் தமையெல்லாம் போற்றுகின்றோம்,
மன்றினிலே கார்மேகம் என்ன நின்று
மழைபொழியும் கார்மேகன் என்னும் பேரோய்,
இன்னுரைகள் மிகப்பேசி ஊக்கு விக்கும்
எழிற்குணத்துப் பேரறிஞ, புலவர் ஏறே,
பொன்மதுரை வையைநதி மணலின் நீடு
புவியினிலே பல்லாண்டு வாழி, வாழி ! 3

அ. கி. பரந்தாமனுர், M. A.

## திரு. பண்டித அ. முத்துசாமிப் புலவர்,

*தலைமைத் தமிழாசிரியர்,*
*தூயமரியன்னை உயர்நிலைப்பள்ளி,* மதுரை.

நிலைமண்டில ஆசிரியப்பா.

மதுரைத் தமிழ்ச்சங்க மாணவ ஞகி
முதிர்தமிழ் நூற்களை முறையொடு பயின்றோன்
விண்ணவர் ஏத்தும் கண்ணகி நல்லாள்
புண்ணிய சரிதம் பண்ணிய பெருமகன்

நன்னயம் சான்ற நல்லிசைப் புலவர்
என்னும் உரைநூல் இயற்றுமூ தறிஞன்
கேட்பவர்ப் பிணித்துக் கேளா தவரும்
வேட்ப மொழிதிறன் மேவிய நாவலன்

கற்பவர் மகிழக் கனிதமிழ் மொழியைப்
பொற்புறப் புகட்டும் புகழ்சால் ஆசான்
பார்மேல் அருந்தமிழ்ப் பணிபல புரிந்தோன்
கார்மே கப்பெயர் கவினுறப் பெற்றோன்

அன்னவன் தமிழ்ப்பணி யுன்னுபு கூடலில்
மன்னிய வள்ளுவர் மாண்பெயர்க் கழகம்
பொன்னுடை போர்த்துப் புகழ்ந்துபோற் றியதே
இன்னும் பன்னுள் மன்னுக அவனே !

6—1—55. அ. முத்துசாமிப் புலவர்.

**திரு, புலவர் வி. அ. அரங்கசாமி,**
*தமிழ்ப் பேராசிரியர்,*
*அரசர் கல்லூரி,* **திருவையாறு.**
14—1—54.

*அன்பரீர் வணக்கம்:*

*உழவர் பெருநாளாம் தமிழர் திருநாளில் சொல்லேருழவர் திரு. கார்மேகக் கோனூரவர்கட்குப் பொன்னுடை போர்த்து வது கண்டு பெரு மகிழ்வடைகின்றேன். உடலிங்குறினும் உளமங்குறுகின்றது. புலவர் உடல் நலத்தால் நீடு வாழ்வார் களாக.*

கார்மேகம் தோன்றியே கருதுநற் புலமையால் கவின மின்னி
பார்புகழு மாராய்ச்சிப் பண்புற்ற இடியாலே பைந்தமிழ்க்கு
சேர்விலாப் பொய்யுரைகள் சிதைத்திட்டுச் செந்தமிழாம் பயிர்செழித்து
ஏர்பெறவே பொழிந்துமினி இன்றமிழர் வாழ்ந்திடவே இனிது வாழி.

பொங்கல்திரு நன்னுளே புவிதனிலே தமிழர்க்குப் பொன்னு ளாகும்
துங்கமிகு ஏருழவர் துயர்தீர்த்து இன்பளிக்கும் தூய நாளில்
சங்கமேய் தமிழாய்ந்த தண்மதுரைப் பதியினிலே சான்ரேர் கூடி
பங்கமிலாச் சொல்லுழவர் பரிசுபெறப் பொன்னுடை பரித்துவாழி.

*அன்பன்*
**வி. அ. அரங்கசாமி.**

**திரு, S. குருஸ் அந்தோணி**, எம். ஏ.
*தமிழ்ப் பேராசிரியர்,*
*தூய சவரியார் கல்லூரி,* **பாளையங்கோட்டை.**
12—1—1955.

## *பாராட்டுப்பா.*

*பொன்கொழி பூந்துறைப் புதுமணல் கொளீஇய
மதுரையம் பதியில் வாழ்ஒரு கலைஞன்
தொல்காப் பியம்பல தொன்னூற் கடலையும்
சான்றோர் பாடிய சங்கச் செய்யுளையும்*

ஐயமொன் றின்றி யரில்தபக் கற்றேன்
பாற்கடற் கிடந்த பயனுறு அமுதைக்
கடைந்தவர் எடுத்துக் கையிற் கொடுத்தென
நூற்கடல் கடைந்து நுண்பொருள் கண்டு
யாவரும் இன்பம் நுகரும் வண்ணம்
நல்லிசைப் புலவர்தம் நலனுறு சரிதையை
ஆய்வுக் குறிப்புடன் அணிநூ லாக்கியோன்
கார்மேகக் கோன் ஏர்நனி உடையன்
பல்கலை பயிலும் பைந்தமிழ் மாணவர்
மனதைக் கவர்ந்த மாண்புறு கள்வன்
எம்மவர் உளத்தினை ஈர்த்தவண் ணலுக்குப்
பொன்னுடை இன்று போர்த்துதல்
புதுமை யன்றே புலமுறு வுலகிலே.

இங்ஙனம்

S. குருஸ் அந்தோணி, எம், ஏ.

மதுரைத் தமிழ்ப் பேராசிரியர் திருவாளர்

## ஆ. கார்மேகக் கோன் அவர்கட்கு

***17—1—1955**ல் மதுரை, திருவள்ளுவர் கழகத்தில்,*

**பொன்னுடை போர்த்தியபோது பாடிய**

## பாராட்டு வாழ்த்து.

மொழிகளுள் உயர்ந்த மொழியென ஒப்பியும்
இனிமையில் இதற்கிணை இலையென இசைந்தும்
முதுமையில் இதுவே முதலதாய் மொழிந்தும்
இலங்கும் நன்மொழி எங்கள் தமிழ்மொழி
தொன்றுதொட் டிம்மொழி துலங்கிய தெங்கெனின்
நன்மைகள் பலசேர் நயம்பெறு மதுரையாம்.
இம்மது ரைப்பதி இலக்காய்க் கொண்டு
அமெரிக்க நாட்டினர் அன்பன் கிருஸ்துவைக்

காட்ட வந்தவர் கல்வியும் தந்தனர் ;
அவ்வழி தல்லா குளத்தினி லமைந்த
அமெரிக் கன்கல் லூரியா மதனில்,
சங்கத் தமிழ்நூல் தனைமுழு தறிந்து
இலக்கண மிலக்கிய மெதிலுமே வல்ல
தமிழ்ப் பேராசான் தமிழ்த்தா நத
கலைஞன் அறிஞன் **கார்மே** **கக்கோன்**
**ஆண்டுகள்** பலவும் அரும்பணி புரிந்தார்,
இவரிடம் பயின்ற இனமா ணாக்க
இம்மா நிலமுழு தெங்குமே யுள்ளார்
பண்புகள் நிறைந்தவித் தண்டமிழ்ப் புலவனை
இன்றும் போற்றுவர் இயம்புவர் சிறப்பினை.
அத்தகைத் தொண்டுகள் ஆற்றிய அண்ணலீர் !
ஓய்வுபெற் றிருக்கும் உத்தமப் பெரியீர் !!
நூல்பல எழுதிய நுண்ணறி வாள !!!
போர்த்தினோம் இன்று பொன்னாடை யொன்று
தமிழ்த்தாய் மகிழ்ந்து தானும் வாழ்த்துறாள்.
திருக்குறள் என்னும் தெய்வநூல் தன்னை
உலகினுக் களிக்க உழைக்கும் கழகம்
நல்லதே செய்கிறார் நாட்டார் களிக்கிறார்,
அன்புடைத் தமிழ ! அரும்பெரும் தலைவ !!
என்றுமே வாழ்வீர் இனிதுபல லாண்டு
வாழ்கவே நலம்பல பெற்றினி வாழ்வீர்.

*இங்ஙனம்,*
**மணிப் பதிப்பகத்தார்.**

இயற்றியது : வித்துவான்,
**திரு, வீ. ப. நடராஜன்,** பசுமலை.



மகள் சௌந்தரியவல்லியும் மருகர் A. T. N. நாகலிங்கமும் குழந்தைகளும்.

## A. T. N. நாகலிங்கம் & Co.,

**EDUCATIONAL PUBLISHERS,**
Pudumandapam,
MADURAI.

பேராசிரியர் திரு, ஆ. கார்மேகக் கோனாரவர்கள் செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் அபிராமம், அகத்தாரிருப்புக் கிராமத்தில் பிறந்து, பாண்டிய மன்னர்களாலும் பாலவநத்தம் சமீன்தார் பாண்டித்துரைத் தேவர் அவர்களாலும் போற்றி வளர்க்கப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கல்வி பயின்றவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கல்வி பயிலுங்கால் தமிழ் நூல்களைச் சிறப்புறக் கற்றுத் தேர்வுகளில் முதல்வராகத் தேர்ந்து பொற்பதக்கப் பரிசுகளும் பெற்றவர்கள்.

இவர்கள் தமிழ்ச் சங்கத்தில் கல்வி பயின்று வெளிவந்த பின்னர் இவர்களுடைய கல்வித்திறனையும், தோற்றத்தையும் கண்ணுற்ற மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆட்சியாளரான அமெரிக்கர்கள் இவரைத் தங்களுடைய கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக ஆக்கினார்கள். இவர்கள் அக்கல்லூரியில் 37 ஆண்டுகள் தொடர்ந்து சிறந்த தமிழ்ப்பணி புரிந்தவர்கள். கல்லூரியில் இவர்களுடைய சிறந்த புலமையினாலும் பாடம் நடத்தும் திறத்தாலும் கல்லூரி மாணவர்கள் இவர்களிடத்தில் பேரன்பு கொண்டார்கள். இவர்களுடைய வகுப்பென்றால் கல்லூரி மாணவர்களுக்கு மிகவும் விருப்பம். இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் ஏறக்குறைய முப்பதாயிரத்துக்கும் அதிகம் எனலாம்.

இவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் தொடர்ந்து பல பொறுப்புள்ள பதவிகளை வகித்தவர்கள். இவர்கள் எழுதிய ''நல்லிசைப் புலவர்கள்'' என்ற புத்தகத்திலிருந்து இவர்களுடைய புலமையை நாம் நன்கு அறியலாம்.

நிறைந்த புலமையும், சிறந்த பண்புமுடைய இவர்கள் பல்லாண்டு வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,
**A. T. N. நாகலிங்கம் & Co.**

திரு. வீ. உலக ஊழியன்,
தமிழ் விரிவுரைஞர்,
சேலங்கல்லூரி, **சேலம்.**
**13—1—1955.**

ஆசிரிய விருத்தம்

*சீர்மேவு பாத்தமிழ்க்குச் சங்கங் கண்ட*
*தென்னர்குலத் திருப்பாண்டித் துரையின் அன்பா,*
*பேர்மேவும் பரிசுபல வதனிற் பெற்றோய்!*
*பெயராத புலவர்வர லாறு கண்டோய்!*
*ஆராலும் அளவிடுதற் கரிய உள்ளத்*
*தாழ்வார்கள் திருவடியை அமர்த்தும் ஐயா!*
*கார்மேக! பொன்னுடை போர்த்த செல்வன்*
*காக்கவுனைப் பொன்னுடை அணிந்து வாழி.*

**வீ. உலக ஊழியன்**

பேராசிரியர்,
**சி. இலக்குவனார்** M. A., M. O. L.,
மாசனக்கல்லூரி,
**ஈரோடு.**
**7—1—55.**

வாழ்கபல் லாண்டு வாழ்க பல்புகழ்
செந்தமிழ்க் கடலுள் திளைத்தே நாளும்
அரும்பொருள் முத்தை அள்ளி வழங்கி
மாணவர் புலவர் மற்றையோர் புகழ
தமிழ்ப்பணி புரியும் தக்கோன், சான்றோன்
**கார்மே கக்கோன்** கனிவுரை யாளன்
உரையும் பாட்டும் உடையோன்
நரைதிரை யின்றி நாளும் வாழ்கவே.

சி. இலக்குவன்.

## திரு, V. S. சுவாமிநாதன்,

EDUCATIONAL PUBLISHER,
West Tower Street, MADURAI.
13—1—1955.

அமிழ்தினு மினிய அருமை மொழியாம்
தமிழ்மொழி தன்னையே தாரக மாகக்
கொண்ட பண்புடைக் குலக்கார் மேகமே!
கொண்டல் நிகரெனக் கொண்டுநன் னிலத்தில்
தமிழ்மழை பொழிந்த தனித்த கோனவ!
''தமிழகம் எனது தங்கக் கோயில்;
தமிழர் எனது தகைமிகு தோழர்
தமிழர் எனது சலியா மூச்சு;
'எந்தாய் வாழ்க!' மந்திரம் எனக்கே!''
என்பன போன்ற பன்னலப் பாங்கினைத்
தன்னரு மியல்பாய் நன்றுநீ இசைத்தனை.
பார்மிசைப் பலவளம் நேர்மையோ டிசையக்
கார்முகில் வண்ணன் கழலிணை காக்க
வாழிநீ டூழிநீ! வாழிய நிலத்தே!

அன்பான,
**வி. சூ. சுவாமிநாதன்.**

## திரு, சி. நயினார்முகம்மது, M. A.

தமிழாசிரியர்,
ஜமால் முகமது கல்லூரி,
திருச்சி.

## பாடிய பாராட்டு.

திருவெலாந் தமிழ்மேவத்
தீதெலாம் மாய்ந்தினிய
பொருளெலாம் பெயலாகப்
புவியருளுங் கார்முகிலே! 1

சங்கத்தால் சிறந்ததன்பின்
துன்பத்தால் துவண்டுலர்ந்த
எங்கள்தமிழ்ப் பூங்கொடிநல்
லெழில்பெற்ருள் நின்வரவால். 2

அலையெனவே கலைபெருக்கும்
அமெரிக்கன் கல்லூரி
மலையனைய புகழ்மதுரை
மாண்புறவே மழைபொழிந்தாய். 3

நல்லிசையும் நூல்பலவும்
நல்கிடவே நானிலத்துத்
தொல்லிசைத் தமிழ்மஞ்ஞைத்
தோகைவிரித் தாடுகின்ருள். 4

பன்னலமும் பொருந்திமிகப்
பாரிலிசை பரப்பிவாழப்
பொன்னுடை போர்த்துகின்ருர்
புலவர்புகழ் போற்றுகின்ருர். 5

**சி. நயினர்முகமது, M. A.**

பேராசிரியர்,

## திரு, பு. சி. புன்னைவனநாதன்.

# புலவர் வாழ்த்து.

சீருறும் நான்காம் சங்கம் திகழ்சேது பதிகல்லூரி
சாருறு தமிழ்ப்பால் பெற்ற தகைமைசால் கார்மேகம்என்
பேருறுபுலவ நாத னுடன்பயில் பெற்றி வாய்ந்தாய்
ஏருறு புலமை கண்டார் இயற்றினர் பாராட்டென்க. 1

மதுரையிற் ஐம்புரோ சொல் மதிநிறை புலவனுகி
விதுகுல மன்னர்முன்னுள் வளர்தமிழ்ச் சுவையை மீட்டும்
புதுமையிற் கற்பார்யாரும் களிப்புறப் புகட்டி வந்தாய்
நதியறி தமிழின்மேலாம் நல்விசைப் புலவர் தந்தாய். 2

நல்மனை வாழ்க்கைப்பேறு நலமெலாம் நன்னர் பெற்றாய்
தொல்புகழ் நூலினுய்வு துகளறக் கொண்டாய் நாளும்
வல்லவர் புகழுங் கூடல் வள்ளுவர் கழகம் போற்ற
எல்லையில் புகழும் ஏற்றாய் இனிது பல்லூழி வாழி. 3

அன்புள்ள,
**சி. புன்னைவனநாதன்.**

## திரு. வித்துவான், வெ. முத்துராக்குக் கோன்,

*தலைமைத் தமிழாசிரியர்,*
கோமதியம்பாள் போர்டு உயர்நிலைப்பள்ளி,
**சங்கரன் கோவில்.**

## ஆ. கார்மேகக் கோனார் அவர்களைப் பாராட்டியது.

நேரிசை ஆசிரியப்பா

மாடமலி மதுரைக் கூடற் பதியில்
பாடல்சால் புலவர் பீடுகெழு மரபில்
அருந்தமிழ்ப் புலமையும் ஆன்றமை கேள்வியும்
பெருந்தகைச் செல்வமும் திருந்தப் பெற்றோன்
நாவீறு படைத்த நற்றமிழ்ப் புலவன்
பாவீறு பொலிந்த பண்புடைப் பெரியோன்
அமெரிக்கர் நடத்தும் ஆங்கிலக்கல் லூரி
அமிழ்தினு மினிய தமிழ்மொழித் தலைவராய்ப்
பன்னாட் பணிசெய்து பாங்குடன் ஓய்வுகொள்
கார்மேகப் பெயர்க் கண்ணிய மிக்கோன்
பார்வேந்தர் போற்றும் பாவலர் பெருமான்
நல்லிசைப் புலவரை நல்கிய பெரியோன்
இலக்கிய இலக்கண இனியநன் னூல்களை
கலக்கற வியற்றிக் கவின்பெறத் தந்தோன்
பல்கலைக் கழகக் குழுக்களில் அமர்ந்து
நல்வகை உதவிய நலந்திகழ் மேலோன்

இல்லறம் மதனை இன்புடன் ஏற்று
நல்லறம் புரிந்துநன் மக்கட்பெற் ருேன்
பல்வளம் செறிந்த பண்பொடு
மல்லல்மா ஞாலத்து வாழ்க பல்லாண்டே.

இங்ஙனம் அன்பன்,
**வெ. முத்துராக்குக் கோன்.**

## வித்துவான், திரு. நா. இராமய்யா பிள்ளை,

தமிழாசிரியர்,

ஐக்கிய கிருஸ்தவப்பள்ளி, **மதுரை.**

## பாடிய பா.

மதுரை சிறக்க வாழும் பெரியோய்!
எதிருரை வாங்கா ஏந்தலே வாழ்க.
ஆங்கிலம் அறியார் அறிவுடை யவரிலர்
ஈங்கே வாழ்தற் கியல்புடை யவரிலர்
என்னும் மதியிலார் புன்மதி மருள
இன்பமும் அறனும் பொருளொடு மியைந்து
வாழ்ந்து காட்டிய தமிழ்வல் லாள!
உலகிய லறிவு நிலவிய பெரியோய்!
சிலசொற் சொல்லும் புலமைத் தலைவ!
என்றும் என்பால், எளிமையு மினிமையும்
அன்பும் பண்பும் காட்டும் அன்பினேய்!
புறநூல் கொண்டு புலவர் சரிதம்
ஆக்கி மாணவர் அறிஞர் போற்றத்
தந்த பெருந்தகாய்! தமிழ்மொழி சிறக்க
இன்னும் பலநாள் மன்னுக பெரிதே.

இங்ஙனம்
**நா. இராமய்யா.**

திரு. வித்துவான், சீ. இராமசாமி,
தமிழாசிரியர்,
கழக உயர்நிலைப்பள்ளி,
வத்தலக்குண்டு, மதுரை.

10—1—55.

## பாராட்டுப் பாக்கள்.

பண்டிதர்கள் என்றாலே பரிகசிக்கும் மாணவர்கள்
பயின்ற காலம்
அண்டியவாங் கிலமொழிக்கும் அம்மொழியா சிரியருக்கும்
அருமை கூறித்
தண்டமிழைப் பேணுதோர் தருக்கடக்கித் திறமையினல்
தமிழ்த்தாய்க் கேற்றம்
கண்டவனெங் கார்மேகப் பெரும்புலவன் புகழ்முழுதும்
கழறற் பாற்றே? 1

ஏர்மேவும் அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள்
எண்ணி லாதோர்
பேர்மேவப் பின்னுளிற் பெரும்பதவி களிலமர்ந்து
பிறங்கும் வண்ணம்
பார்மேவுந் தமிழ்க்கடலைப் பருகியதன் சுவைதேர்ந்து
பாடங் கூறிக்
கார்மேகம் பொழிந்தபொருள் கணக்கிலவாம் அவன்பெருமை
கணிப்பார் யாரே! 2

திண்ணியநல் லுடற்றோற்றம், தீந்தமிழின் துறைதேர்ந்து
திகழும் ஏற்றம்,
எண்ணியவா றெதனையுமே எளிதிலியற் றிடுமாற்றல்
எல்லாம் வாய்ந்து
கண்ணியமாய்ப் பொருளீட்டி வறுமையினைப் புறங்கண்ட
கார்மே கக்கோன்
நண்ணியவன் பருக்கெல்லாம் நலஞ்செய்யும் பெருங்குணமே
நயப்போன் அம்மா; 3

சங்கநூற் றுரைகையாய்ந்து தமிழினிக்கும் உரைநூல்கள்
தருபே ராண்மைச்
சிங்கமாய், நமதுரிமைச் சென்னைப்பல் கலைக்கழகத்
தேர்வுக் கூட்டத்(து)
அங்கமாய்ப் பலவாண்டிங் கமர்ந்தபெருங் கார்மேகம்
அவைகள் தோறும்
பங்குபூண் டரியதமிழ்ப் பணியாற்றி வாழ்கவெனப்
பாடு வோமே! 4

இங்ஙனம்,
சி. இராமசாமி.

## திரு. பண்டித வித்துவான், சா. கூர்மாவதாரக் கான்,

## பாடியவை.

பூவேந்தர் போற்றும் புலவர் பெருமானே
பாவேந்தர் போற்றுஞ்சீர்ப் பாவேந்தே — பூவேந்தும்
செல்வி அருள்பெற்ற சீராளா கார்மேகா
நல்விருந்தாய் வந்தெமக்கு நல்கு. 1

தலைநிமிர்ந்து செல்லும் தனித்தமிழா உன்றன்
விலையுயர்ந்த சொல்லழகின் மேன்மை — தலைசிறந்த
தொண்டு, மனப்பான்மை தூய தமிழ்ப்பண்பு
கண்டு மனமகிழ்வோம் காண். 2

அன்றுயர் பாடிதனில் அங்குரித்த மாமுகில்போல்
இன்றுயர் பாடி எழில்மகனாய் — நன்றாக
வந்துதித்த மாமணியே வாழ்கநீ பல்லாண்டு
செந்தமிழ் நாட்டகத் தே. 3

கூடல், வடக்காடி வீதிதனில் கோமானே
கூடல் புரியும் குழாத்தினர்தாம் — நாடோறும்
வள்ளுவனார், தந்த மறைப்பொருளை யாய்ந்தாய்ந்து
வள்ளலாய் வாய்ந்தாரம் மா. 4

பொன்னைப்போல் உன்னைநாம் போற்றுதற் கேயிந்தப்
பொன்னாடை போர்த்துகிறோம் பொன்னனையாய் —
மன்னவர்கள்
இல்லையெனில் இந்நாட்டில் எல்லாரும் மன்னவரே
முல்லையனே ஏற்றருள முன். 5

தாய்மொழியைக் காக்கும் தனித்தமிழா கட்டழகா
ஓய்வெடுத்தா லும்நாங்கள் உன்னைவிடோம் —
சேய்விருப்புத்
தாயிருக்கப் பிள்ளை தருக்கித் திரிவதுபோல்
நீயிருக்க நாம்நிற்போம் நேர். 6

இங்ஙனம்,
**சா. கூர்மாவதாரக் கோன்.**

R. கிருஷ்ணமூர்த்தி M. A.,
தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் கல்லூரி, மதுரை.

## பாராட்டுரை.

கார்மேவு கூடல்மா நகரின்கண் கல்லூரி
சீர்மேவு மாசானாய்த் தமிழ்வளர்த்த தன்மையினால்
பார்மேவு புகழ்படைத்த பல்சான்ற பெருந்தகையோன்
கார்மேக மெனும்பெயரோன் கார்மேக மன்னோனே 1

கட்கினியன் செவிக்கினியன் கருத்துக்கு மிகவினியன்
நட்பிற்கு நனிஇனியன் நாவலர்கள் நவிலுகின்ற
பெட்புமிகப் பொருந்தியவன் பலகல்லாப் புலவர்கள்
உட்குவர உரைபகர்வோன் உரைசான்ற உரவோனே 2

பாடல்சால் பைந்தமிழின் பண்பெலாம் பாரித்தே
ஆடல்கொள் புலமையினால் அவனியோர் தாம்புகழ
நாடல்வல் லார்நவிலும் நாவன்மை நனியெய்திக்
கூடல்மா நகரிருந்த குன்றன்னோன் வாழியவே ! 3

இங்ஙனம்,
R. கிருஷ்ணமூர்த்தி.

திரு. பண்டிதர், **சு. வே. நடராசன்,** B. O. L.,
மதுரை, தொ. ந. உ. க. உயர்நிலைப்பள்ளி,
தமிழாசிரியர்.

அஞ்சாத நெஞ்சன் அரிய தமிழ்ப்புதல்வன்
செஞ்சொற் புலவனெனும் செம்மல் யார்? — நெஞ்சே! நீ
பார்புகழும் பண்புடையோன் பைந்தமிழ்சேர் மாமதுரைக்
கார்மேக மென்றே கழறு.

பூமாலை ஈந்திட்டார் பொன்னுடை போர்த்திட்டார்
பாமாலை பாடிப் பரிந்தளித்தார் — யாமாலை
கண்ணுரைக் கண்டதிருக் காட்சி யெனவியந்தேம்
புண்ணிய! நீ போர்த்திருந்த போது.

கண்டுங் கரும்புங் கனிரசமும் போன்றினிய
தண்டமிழில் நல்லுரைகள் தந்தேயாங் — கண்டுவருங்
காலமெலாம் இன்புதருங் கார்மேக வண்ணனே! நீ
தாலமிசை வாழ்க தழைத்து.

இங்ஙனம்,
**சு. வே. நடராசன்.**

திரு. வித்துவான், **நா. கூத்தப்பன்,**
தலைமைத் தமிழாசிரியர்,
மதுரைத் தொழிலாளர் நலவுரிமைக் கழக உயர்பள்ளி,
மணிநகரம், மதுரை.

கார்மேகம் என்னும்பேர் கருத்துப்பின் மழைபொழியக்
காரணமா யுள்ள தற்கும்
பார்மேலே பலகருத்தை மழையெனவே பொழியும்நம்
பாவலர்க்கும் உண்டென் றூலும்
நீர்மேகம் கறுத்தேபின் கண்ணில்லா தெவ்விடத்தும்
தன்கருத்தே கொண்டுபெய்யும்
கார்மேகம் வெளுத்தேநல் கண்கொண்டு வேண்டிடத்து
நம்கருத்தில் விரும்பிப் பெய்யும், 1

தனித்தமிழின் புலமையினால் தரணியினில் தலைமையொடு
யாரும் செய்யாத்
தனியாட்சி தான்செலுத்தித் தமிழனைக்குச் செய்திட்ட
தொண்டால் இன்றும்
இனித்தமுடன் எந்நிலையில் இருப்பவரும் எதிர்வந்து
இயற்றும் நன்றி
தனிப்பெருமை தானதனால் தனையர்களாம் யாமின்று
தழைக்கின் றோமே. 2

புலவரெலாம் பெருமையுறப் புதுக்கருத்துத் தான்நிலவ
புவியில் இன்னும்
பலர்புகழும் புதுநூல்கள் பார்வைக்கும் அழகுறவே
பதிப்பில் தோன்ற
நலமுடனே நானிலத்தில் தமிழகமும் சிறக்க எந்த
நாளும் ஈசன்
புலவராம் கார்மேகம் புகழுடனே பொலியஅருள்
புரிக மாதோ. 3

இங்ஙனம்,
நா. கூத்தப்பன்.

**கதி. சுந்தரம்,**
தமிழ் விரிவுரையாளர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

பெரும்புலவர் செந்நாப் புலவர்

**ஆ. கார்மேகக் கோனார் அவர்கட்குப்**

பொன்னாடை போர்த்திப் பாராட்டிய விழாவின்போது
வழங்கிய

## வாழ்த்துப்பா.

கொட்டும் கவிமேகம் கோழைகளைச் சொல்வாளால்
வெட்டுகின்ற கார்மேக வீரனுக்குப் — பட்டாடை
போர்த்துகின்றார் போற்றிப் புகழ்கின்றார் தென்மதுரை
ஆர்த்து மகிழ்கின்ற தாம். 1

வானின்றி வாழ்வில்லை வான்தமிழ்க்கோ கார்மேகக்
கோனின்றி வாழ்வில்லை கோதையே! — தேனினிமை
சேர்த்துச் செழுந்தமிழைத் தேயத்தில் தான்பரப்பும்
கார்மேகச் செந்தமிழைக் காண். 2

என்னுவி போன்ற எழில்மேகக் கோனார்தான்
பொன்னுடை பெற்றார் பொலிகின்றார் — தென்னாட்டார்.
செந்தமிழர் கண்திறந்தார் சீர்கொண்டார் நற்புலவர்
சந்ததமும் வாழ்க தழைத்து. 3

இங்ஙனம்,
கதி. சுந்தரம்.

## இரா. வே. நாராயணன், B. O. L. (Hons),

தி. ரா. கல்லூரி, மதுரை.

### தமிழ் வளர்த்த செவிலி

வாழி வாழி தமிழ்வளர்த்த செவிலி வாழி வாழியே!
வாழி வாழி நேர்மைமிக்க அண்ணல் வாழி வாழியே!
வாழி வாழி கார்மேக வள்ளல் வாழி வாழியே!
வாழி வாழி இன்பமாக நன்று வாழி வாழியே!

இங்ஙனம்,
இரா. வே. நாரயாணன், B. O. L. (Hons

## திரு. பண்டித வித்துவான், அ. கி. செல்வக்கணபதி,

துணைச்செயலர்,
மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

பூமகள் முகமெனப் பொலிவுறு நாட்டில்
நாமகள் நடமிடும் நற்றமிழ்க் கூடலில்
மாநிலம் புரந்த மாண்புடைத் தமிழை
நானிலம் புகழ நவின்ற நாவல!
புறமெலாம் கடந்து புத்தமு தெடுத்துத்
திறமெலாங் காட்டித் தெரித்த பாவல!
இளங்கோ தந்த இன்றமிழ்க் கன்னலை

இளைஞருஞ் சுவைக்க இயற்றமிழ்ச் சாறும்
வடித்த புலவ! வையக மேத்தப்
படியா வுளத்தைப் பண்படத் திருத்தி
வடியா நாவான் வல்லாங் குழுது
உரையும் பாட்டும் உரத்துடன் வித்தி
விரையும் நறவும் விளைத்த செயலோய்!
ஆங்கிலம் பயின்ற அறிஞரும் நின்னருள்
பாங்கடைந் துய்வான் பணிந்துவரப் பெற்றதால்
அன்றுநின் புகழெலா மார்த்தனர் இன்றுநின்
பொன்றுப் புகழினைப் புலவரும் போற்றினர்
வள்ளுவர் கழகமும் வாழ்த்தமுன் வந்தது
உள்ளிய பெருமையை உலகெலா முணர
ஊழி யூழி ஊழி
வாழி வாழி வாழிய பெரிதே!

இங்ஙனம்,
**அ. கி. செல்வக்கணபதி.**

வாழிய செந்தமிழன்னே!

தலைப்பு:— வணங்குவோம் போற்றி வாரீர்.

**ஆக்கியோன்:— திரு. நா. தேசிகன்,**
தமிழ்ச்சங்க மாணவர்.

(அறுசீராசிரிய விருத்தம்)

கார்மழை வருகை கண்டே களித்திடும் உழவர் ஒப்பச்
சீர்மிகு புலவ நிற்கே செம்பொன்னி னுடை போர்த்தி
பேர்மிகப் பெற்றேம் யாரும் பெற்றிடா மகிழ்வு கொண்டே
பார்மிகு புகழைப் பெற்ற பண்புடை முகிலின் பேரோய்.

பண்டையத் தமிழர் வாழ்வைப் படமெனப் பிடித்துக் காட்டும்
கண்டைநேர் அகம்பு றத்தின் கனிவெலாந் திரட்டிக் கூட்டி
தண்டமிழ் நடையிற் றந்து சாற்றரும் ஆற்றல் பெற்ற
வண்டமிழ்க் கார்மேகத்தை வணங்குவோம் போற்றி வாரீர்.

பேராசிரியர்

# ஆ. கார்மேகனூர் அவர்களின்

## வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு

இவ்வாசிரியர், இராமநாதபுர மாவட்டம், அபிராமம் என்னும் பேரூரின் ஒரு பகுதியான அகத்தாரிருப்பு கிராமத்தில் 1889-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ஆம் நாளில் பிறந்தார். இவரது தந்தையார் ஆயர்பாடிக் கோனூர், தாயார் இருளாயி அம்மாள்; தந்தையார் தம் பெயருக்கேற்ப இராமநாதபுரம் மாவட்டம் ஆயர்பாடிகளில் வாழும் ஆயர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கியவர். 1907-ஆம் ஆண்டு முதல் 30 ஆண்டுகள் **இராமநாதபுரம் ஜில்லா யாதவகுல தர்ம பரிபாலன சபை** என்ற சங்கத்தை நிறுவி, அதற்குத் தலைவராக விளங்கி, சபையை சட்டப்படி பதிவுசெய்து பல அங்க அமைப்புகளுடன் நடத்தி, இவ்வகுப்பினருக்குச் சிறந்த முற்போக்கு விழிப்புணர்ச்சியை உண்டு பண்ணியவர். கல்வியில் பிற்போக்குற்றுக் கிடக்கும் இவ்வகுப்பினரின் இழிநிலையை நீக்குதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்தவர். திடமான இயற்கை யறிவினுல் தமக்குள்ள கல்வி யறிவைப் பெருக்கி, பல துறைகளிலும் சிறந்த அறிஞராக விளங்கியவர். உயர்ந்த தோற்றமும், திடகாத்திரமும், அஞ்சா நெஞ்சமும் படைத்தவர். நேர்மையும், நடுவு நிலைமையும் உடைவர். இவர் தம் சமூகத்தினரையே கல்வியறிவினராக ஆக்க ஊக்கங்கொண்டவராதலால், தம் பிள்ளைகளையும், ''தந்தை மகற் காற்றும் நன்றி அவையத்து, முந்தியிருப்பச் செயல்'' என்ற தமிழ் மறையின் நெறிக் கேற்ப கல்வியறிவினராக்கப் பேருக்கம் உற்ருர் என்று எடுத்துரைக்க வேண்டுவதில்லை.

நம் கார்மேகனூர் தொடக்க உயர்நிலைப்பள்ளியின் படிப்பு முடிந்தவுடன் மேற்படிப்புக்கு அவ்விடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் இல்லாமையால் ஓராண்டு சும்மா இருக்க நேர்ந்தது.



பேராசிரியர் மனைவியார் க. பத்மாசனி அம்மாள்

இராமநாதபுரம் சேதுபதிகளின் வழித் தோன்றலான திரு. பாண்டித்துரைத் தேவரவர்கள், மதுரையில் தமிழ்ச் சங்கம் இல்லாக் குறையை நீக்குவதற்கு, 1901-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாளில், மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினர்.

நம் பேராசிரியரின் தந்தையார் மதுரைக்கு வரும்போ தெல்லாம் அத் தமிழ்ச் சங்கத்துக்குச் சென்று, அங்கு பல புலவர்கள் தமிழ் நூலாராய்ச்சி செய்வதையும், மாணவர்கள் கல்வி பயில்வதையும் மிக்க விருப்பத்துடன் பார்ப்பதுண்டு. இங்ஙனம் பார்த்ததுமுதல், இச்சங்கத்தில் தம் மகனையும் சேர்ப்பித்து, தமிழ் இலக்கண இலக்கியக் கல்வி பயில்விக்க வேண்டும் என்று பேரார்வம் கொண்டார். தமிழ்ச் சங்கக் கல்லூரியில் மாணவர்கள் சேர்வதென்பது எளிதானதன்று, 35 மாணவர்களுக்குமேல் படிக்க இடமில்லை. மதுரை நகர வாசிகள் தமிழ்க் கல்வியின் அருமையை அறிந்து, தம் பிள்ளை களை இச் சங்கத்தில் சேர்க்க முயலவில்லை. பெரும்பாலும் அயலூர் வாசிகளான 30 பிராமண வகுப்பு மாணவர்களும்: 4 அல்லது 5 பிறவகுப்பு மாணவர்களுமே கல்வி பயின்று கொண்டிருந்தனர். சங்கத் தலைவர் பாண்டித்துரைத் தேவ ரவர்கள்; தலைமையாசிரியர் திரு, நாராயண அய்யங்கார் அவர்கள்; அடுத்த ஆசிரியர் திரு, சுந்தரேஸ்வர அய்யர் அவர் கள், மூன்றுவது ஆசிரியர் திரு, அ. கோபால அய்யர்; சோழ வந்தான் திரு, அரசன் சண்முகனர் இரண்டு ஆண்டு ஆசிரிய ராக இருந்து விலகிக்கொண்டார். தமிழ் நூலாராய்ச்சித் தலைவர் திரு, ரா. இராகவையங்கார் அவர்கள், செந்தமிழ் ஆசிரியர் திரு, மு. இராகவையங்கார் அவர்கள், சைவ நூல் ஆராய்ச்சித்துறைத் தலைவர் திரு, சே. ரா. சுப்பிரமணிய கவி ராயர் அவர்கள் காரியதரிசி, திரு, T. C. ஸ்ரீனிவாசையங்கார், இவ்வாறு பேரறிஞர்களைக்கொண்டு தமிழ்ச் சங்கம் நடை பெற்றுக் கொண்டிருந்தது.

1904-ம் ஆண்டின் இடையில் பாண்டித்துரைத் தேவர் தமது பந்தல் குடி ஜமீனை, அபிராமம் நத்தம் து. கா. துப்பாஷ் காதர் என்னும் பெருஞ் செல்வருக்கு விற்க முயற்சி நடந்தது.

இக்காரியத்தை இடையில் இருந்து முடிப்பதற்கு இராமேஸ்வரம் இப்ராம்ஸா மரைக்காயர் என்னும் பெரியார் வந்திருந்தார். இவ்வமயத்தில் நம் பேராசிரியரவர்களின் தந்தையார், தம் பிள்ளையையும் மதுரைக்கு அழைத்து வந்து, தமிழ்ச் சங்கத்தில் சேர்க்கவேண்டும் என்ற விருப்பத்தை துப்பாஷ் காதர் அவர்களிடம் தெரிவித்துவிட்டு, தம் மகனுடன் ஒரு வாரம் மதுரையிலேயே தங்கி இருந்தார். ஜமீன் விற்கும் காரியம் முடிவுறவும், துப்பாஷ் காதர் அவர்கள், தமது இல்லத்தில் தங்கி இருக்கும் இப்ராஷா மரைக்காயர் அவர்களிடம் நம் கார்மேகனுரைக் காண்பித்து, இந்தப் பையனைத் தமிழ்ச் சங்கத்தில் மாணவனுகச் சேர்ப்பது உங்கள் பொறுப்பு என்று சொன்னுர். அப்பெரியார் உடனே அதற்கிசைந்து கார்மேகனுரையும், அவர் தந்தையாரையும், பாண்டித்துரைத் தேவரிடம் அழைத்து வந்து, அறிமுகம் செய்துவைத்து விருப்பத்தையும் தெரிவித்தார். தேவரவர்கள் உடனே உவப்புடன் அவருடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தமது அலுவலாளர் ஒருவரை உடன் அனுப்பி, இப்பையனைக் கல்லூரித் தலைமையாசிரியரிடம் அழைத்துக் கொண்டுபோய், சங்கத்தில் சேர்த்துக்கொள்ளும்படி சொல்லிவருக எனக் கட்டளையிட்டார்கள். அங்ஙனமே சென்று, தலைமை யாசிரியர் அவர்களைக் கண்டபோது நம் கார்மேகனுரின் தமிழ் அறிவைச் சோதிக்கக் கருதித் தலைமை யாசிரியரவர்கள் ஏதாவது ஒரு செய்யுளைச் சொல்லுக என்று வினவினுர்கள். உடனே கார்மேகனுர்,

> "பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
> நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் — கோலஞ்செய்
> துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீயெனக்குச்
> சங்கத் தமிழ்மூன்றுந் தா"

என்ற செய்யுளைச் சொல்லி, பொருளும் சொன்னுர். சங்கத்தில் தமிழ்ப் படிக்க வந்த இவர் சொன்ன இப்பாடல், "சங்கத் தமிழ் மூன்றுந்தா" என்ற முடிபைக் கொண்டதாயிருந்தது மிகவும் மங்கலமாகவும் பொருத்தமாகவும் இருந்தது. இதன் பின்னர் தலைமை யாசிரியர் அவர்கள் இவரது தந்தையாரை நோக்கி "உங்களுக்கெல்லாம் இந்தப் படிப்பினுல் என்ன பயன்,

பையனை ஏதாவது தொழில் துறையில் புகுத்தலாமே'' என்று சொன்னார்கள். அதனைக்கேட்ட இவரது தந்தையார் முகம் வாட்டமுற்றது. அதுபோலவே நம் பேராசிரியரது உள்ளமும் ''படிக்க இடம் கிடைக்காது போலிருக்கிறதே'' என்று ஏக்க முற்றது. பின்னர் தலைமை யாசிரியர் அவர்கள் ஒரு முடிவும் சொல்லாது எழுந்துபோய் விட்டார்கள். இந்த நிகழ்ச்சிகளை இவரது தந்தையார், மறுநாள், பாண்டித்துரைத் தேவர் அவர்களிடம், மரைக்காயரைக் கொண்டு தெரிவித்தார். இதனைக் கேட்டதும் தேவரவர்கள் தம் ஆள் ஒருவரை அனுப்பி இந்தப் பையனை ஒரு தடையுமின்றி உடனே கல்லூரியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி வருக என அனுப்பினார். அங்ஙனமே அவர் வந்து தலைமை யாசிரியரிடம் சொல்லவும், கார்மேகனார் மாணவராகச் சேர்த்துக்கொள்ளப் பெற்றார். முதலில் புகுமுக வகுப்பில் சேர்ந்து படித்தார், இவர் கல்வியில் பேரார்வமும், ஊக்கமும் உடையவராய், வீண் பொழுது போக்காது, கல்வியிலேயே சிறந்த நாட்டமுடையவராக விளங்கினார். அதனால் மாணவர்களிடை, இவர்பால் நன்மதிப்பும், ஆசிரியர்களிடை சிறந்த அன்பும், உண்டாயின. இவர் இளம்வயதில் சிறந்த நினைவாற்றல் உடையவராக இருந்தமையால், நன்னூல், முதலிய இலக்கண சூத்திரங்களையே யன்றி, உரைகளையும் இலக்கியங்களில் நூற்றுக்கணக்கான பாடல்களையும் நெட்டுருவாகச் சொல்லக் கூடியவராக இருந்தார். கல்வி பயிலுங்காலத்தில் ஒரு நூற் செய்யுட் கருத்தினைப் பிற நூல்களில் வரும் செய்யுளின் கருத்தோடு ஒப்பு நோக்கி ஆராய்ந்து படிப்பதில் சீரிய விருப்பமுடையவராக விளங்கினார். சங்க இலக்கியங்களின் வரலாறுகளையும் அவற்றில் வரும் சேர சோழ பாண்டியர்களின் சரிதங்களையும், சாஸனங்களில் வரும் தமிழ் வேந்தர்களைப்பற்றியும் கால வரையறைப்படி ஆராய்ந்து அறியும் ஆர்வமுடையவராகவும் இருந்தார்.

**ஒரு விநோத நிகழ்ச்சி :—**

இவர் புகுமுக வகுப்பில் பயின்றுகொண்டிருக்குங்கால், இராமநாதபுரத்தில் உள்ள ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியரும்,

பாண்டித்துரைத் தேவரவர்களின், அன்பினைப் பெற்றவரு மான ஒரு வீர சைவர், மதுரைக்கு வந்திருந்த பாண்டித் துரைத் தேவர் அவர்களிடம் வந்திருந்தார். தேவரவர்கள் அவரைக் கண்டபோதெல்லாம் பரிகாசம் பண்ணி விளையாடுவ துண்டு. தேவரவர்கள் அவரை நோக்கி ''ஏன்காணும் இன்று என்ன உணவு உண்டீர்?'' என்ற போது, அவர் ''வடை பாய சத்துடன் நல்ல சாப்பாடு'', என்று விடையளித்தார். உடனே தேவரவர்கள் "நீர் வீர சைவராயிற்றே, பாயசம் சாப்பிட லாமா?'', என்று விளையாட்டாகக் கேட்டபோது, அதற்கு வீர சைவர் "பாயசம் சாப்பிடுவது என்ன குற்றம்? சாமியவாள் சொல்லுவதுதான் விநோதமாக இருக்கிறது'', என்றார். உடனே தேவரவர்கள் தமது வேலையாளை அனுப்பி அடுத் துள்ள சங்கத்திலிருந்து யாராவது ஒரு மாணவரை அழைத்து வரச் சொன்னார். அந்த ஆள் சங்கத்துக்கு வந்தபோது, நம் பேராசிரியராம் மாணவரே எதிர்ப்பட்டார். உடனே அந்த ஆள் இவரை அழைத்துக் கொண்டுபோய்த் தேவரவர்களிடம் விட்டார். தேவரவர்கள் இவரை நோக்கி "பாயசம்'', என்ற சொல்லைப் பிரித்து பொருள் சொல்லுக'' எனக் கட்டளையிட் டார். உடனே தயங்காது இவர், இச் சொல்லின் முதல் நிலையை வடசொல்லாகவும், தமிழ்ச் சொல்லாகவும் கொள்ள இடமுண்டு, வடசொல் பகுதியில் "பயசு (பால்) சம்பந்தம் பாயசம்'' என்று விரித்துப் பொருள் சொல்லப்படும். இனித் தமிழ் முதல் நிலையாக வைத்து ''பாய் + அசம் எனப் பிரித்து பாய்கின்ற ஆடு'' என்று பொருள் சொல்லவும் கூடும் என்று உரைத்தார். உடனே தேவரவர்கள் வீர சைவரை நோக்கி ''பாய்கின்ற ஆடு சாப்பிடுகின்ற சைவரா நீர்'' என்று நகைத்து நையாண்டி செய்தார். பின்பு தேவரவர்கள் இவரை மகிழ்ச்சியுடன் நோக்கி '' நன்றாகப் படித்து முன்னுக்கு வருக'' என்று வாழ்த்திப் போகுமாறு சொன்னார்.

## கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் அவர்களின் அன்பினை அடைந்தது.

வ. உ. சி. அவர்கள் சுதேசி இயக்கத் தொடர்பான சொற் பொழிவுகள் பல ஆற்றுதற்கு 1905-ம் ஆண்டு மதுரைக்கு

வந்திருந்தவர் பாண்டித்துரைத் தேவரவர்களின் விருந்தின ராகத் தங்கியிருந்தார். அப்போது அவருக்கு உடன் உதவிச் சிறுவனாக இருக்குமாறு தேவரவர்கள் நம் கார்மேகனாரை அழைத்துக்கூற அங்ஙனமே, இவர் "தமக்கென வாழாப் பிறக் குரியாளரான" சிதம்பரனார் அவர்களுக்கு இரண்டு நாட்கள் சிறு பணி புரியும் பேறு உடையவரானார். சிதம்பரனாரவர்கள் புறப்பட்டுப் போகுங்கால், இவரது அறிவின் தெளிவையும், பேசும் முறைமையையும், அறிந்த அவர்கள், "நீ நன்றாகப் படி, நீ பிற்காலத்தில் சிறந்த சொற் செல்வனாக விளங்குவாய்" என வாழ்த்துரை பகர்ந்தார். இவ் வாழ்த்துரையின்படியே இவர் சொற் செல்வராய் விளங்கியதை 22 ஆண்டுகளுக்குப் பின்னர், ஒரு பேரவையில் சிதம்பரனார் அவர்கள் இவரது சொற் பொழிவை நேரில் கேட்டறிந்து பாராட்டலானார்.

புகுமுக வகுப்புத் தேர்ச்சி பெற்று, மேல் வகுப்பில் பயிலுங்கால், பாரதம், பிரபுலிங்கலீலை, இராமாயணம், பிள்ளைத் தமிழ்கள், கலம்பகங்கள், அந்தாதிகள், ஆகியவற்றை ஆசிரியர் திரு, அ. கோபாலையரிடமும் சுந்தரேஸ்வர அய்யர் அவர்களிடமும் பாடங்கேட்டார். திருவிளையாடற் புராணம், காஞ்சிப்புராணம், தணிகைப் புராணம், முதலிய சைவ புரா ணங்களைத் திருவாவடுதுறை மகா வித்துவானும், மதுரைத் தமிழ்ச் சங்கப் பேராசிரியருமான திரு, சே. ரா. சுப்பிரமணிய கவிராயரிடமும் பாடம் கேட்டார். திருக்குறள், பாகவதம், சேனாவரையம், தர்க்க சங்கிரகம் முதலிய நூல்களைத் தலைமை யாசிரியர் திரு, நாராயணய்யங்கார் அவர்களிடம் பாடம் கேட்டார். புகுமுக வகுப்புத் தேர்ச்சி பெற்றபின் பிரவேச பாலபண்டித வகுப்புக்களில் பயின்று தேர்ச்சி பெற்றபின் 7-வது ஆண்டில் பண்டித வகுப்பில் பயின்று கொண்டிருந் தார்.

தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றமையால் புதுக் கோட்டை மன்னரின் பொற்பதக்கப் பரிசுக்குரியவரானார். இப்பரிசு தமிழ்ச் சங்கத் தலைவர் திரு, பாண்டித்துரைத் தேவ ரவர்களின் தலைமையில் சங்கப் பேரவையில் இவருக்கு அளிக்கப்பட்டது.

## மகா மகோபாத்தியாய
## உ. வே. சாமிநாதையரவர்களின் வினு :

இவ்வாசிரியர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பிரவேச பண்டித வகுப்பில் பயின்றுகொண்டிருக்கும் போது, சென்னை யிலிருந்து மதுரைக்கு வந்திருந்த ஐயரவர்கள் தமிழ்ச் சங்கக் கல்லூரியைப் பார்வையிட வந்தார்கள். அப்போது வகுப்பில் அழகர் கலம்பகப் பாடம் நடந்துகொண்டிருந்தது. ஐயரவர்கட்கு அழகர் கலம்பகப் பாடல்களுள் "நந்த நந்தன" என்று தொடங்கும் தலைவி இரங்கல் துறையமைந்த பாடல் மிக விருப்பமானது. ஆதலால் வகுப்பிலிருந்த கார்மேகனுரை நோக்கி மேற்குறித்த பாடலைக் கூறும்படி வினவினுர். உடனே இவர் அப்பாடலைப் பிழையின்றி ஒப்பித்தார், ஐயரவர்கள் கேட்டு இப்பாடலுள் ''வேணுவாய் அமுதமுண்டுயர் வமிச மானது'' என்பதிலுள்ள நயம் என்ன? என வினுவினுர்கள். புல்லாங்குழல் கண்ணது வாயில் வைத்து ஊதப்படுவதினுல் அவனது வாயின் எச்சில் நீராகிய அமுதத்தை உண்டு உயர்ந்த குலமாயிற்று என்பது செம்பாகமான பொருள் ; வமிசம் என் பது வடமொழியில் மூங்கிலுக்கும் பெயராதலால் உயர்ந்த மூங்கிலாயிற்று என்ற பொருளும் செம்மொழிச் சிலேடை யாக அமைந்துள்ளது ; இது ஒரு சிறந்த நயம் என்று விநயமாக விடையிறுத்தார். ஐயரவர்கள், படிப்பு அழுத்தமாக இருக் கிறது, இங்ஙனமே மாணவர்கள் ஆராய்ச்சியுடன் கற்கவேண் டும் என்று சொன்னுர்கள். இங்ஙனம் இவ் வகுப்பில் இவரது படிப்பைப்பற்றி, ஐயரவர்கள் மொழிந்த நற்கருத்தாம் அரும்பு, சில ஆண்டுகளின் பின்னர் மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாப் பேரவையில் இவரைப்பற்றி ஐயரவர்கள் திருவாய் மலர்ந்த பாராட்டு மலராக விரிந்தது.

**ஒரு வியப்புக்குரிய நிகழ்ச்சி :—**

இவர் தமிழ்ச் சங்கத்தில் பாலபண்டித வகுப்பில் பயின்று கொண்டிருக்கும் போது, யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த, திரு, சி. சுப்பிரமணிய தேசிகர் என்பவரும் சங்கத் தில் படித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் இத் தேசிகருடன்

நம் ஆசிரியர் மதுரை புதுமண்டபத்திற்கு எதிரில் வந்து கொண்டிருக்கும்போது, மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழாசிரியர் யாழ்ப்பாணம் முதலியார் இராமலிங்கம் என்பார் சந்தித்தார். இருவரும் ஒரு நாட்டவராதலால் அளவளாவி உரையாடிக்கொண்டிருந்தனர். நம் ஆசிரியர் தேசிகர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். அப்போது இராமலிங்கனுர் தங்கள் பேச்சுக்கிடையில் கார்மேகனுரை அடிக்கடி உற்று நோக்கினுர். பின்பு தேசிகரை நோக்கி உங்களுடன் நிற்பவர் இவர் யார்? என வினவினுர். அதற்குத் தேசிகர் "என்னுடன் சங்கத்தில் கற்பவர் இவர்" என்றுர். இதனைக் கேட்டதும் முதலியார், "இவரது தோற்றத்தைப் பார்த்தால், பின்ஞளில் இவர் ஒரு பேராசிரியராக வருவார்போல் தோன்றுகிறதே" என்றுர். தேசிகர், "அங்ஙனமே வரக்கூடும் என்றுர்". நம் ஆசிரியர் நகைமுகத்துடன் அடக்கமாக நின்றுர். முதலியார் இராமலிங்கம் அவர்கள் துறவுள்ளம் படைத்த தூய்மையாளர். உலக விவகாரங்களில் தலையிடாது கல்வி யறிவு ஒழுக்க நெறியிலேயே தம் வாழ்நாளை அடக்கமாகக் கழித்தவர். ஆனுல் "சாது வெருண்டால் காடு கொள்ளாது" என்ற பழமொழிப்படி வகுப்பில் சில மாணவர்கள் குற்றஞ் செய்தால் குற்றஞ்செய்தவர், செய்யாதவர் யார் என்று பாராமலேயே, அருகில் இருக்கும் மாணவர்கட்குத் தன் கைக்குடைச் சாத்தைக் கொடையாக கொடுத்துவிடுவார். வயது முதிர்ச்சியினுலும், சொல்திறம் குன்றியமையாலும், வகுப்பில் அமைதி வரவரக் குன்றத் தலைப்பட்டது. அதனுல் கல்லூரித் தலைவர் ஜம்புரோ அவர்கள், முதலியார் ஓய்வு பெறுதற்கு முன்னரே, ஓராண்டுச் சம்பளத்தைக் கொடுத்து ஓய்வுபெறச் செய்துவிட்டார். இப்பெரியார் ஓய்வு பெறவும் நம் பேராசிரியர், முன்னர் இப்பெரியார் உரைத்தபடியே, உயர்நிலைப்பள்ளிகளில் இருந்து பயிற்சி பெறுமலேயே, படிப்பு முடிந்ததும் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரானது மிகவும் வியப்பானதன்றே! அங்ஙனம் உரைத்த அப்பெரியாரது இடமே கிடைத்தது அதனினும் வியப்பானதன்றே!!

**பேராசிரியர் நிலை எய்தியது :—**

1912-ஆம் ஆண்டு மே - திங்களில், இப்பேராசியருக்கும் க. பத்மாசனியம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடந்த சில திங்களின் பின்னரும், இவர் தமிழ்ச் சங்கத்துக்கு வந்து பண்டித வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்தார். கோடை விடுமுறையில் ஊருக்குச் சென்றிருந்த போது, ''மெயில்'' என்னும் ஆங்கிலச் செய்தித்தாளில், அமெரிக்கன் கல்லூரிக்குத் தமிழ்ப் பேராசிரியர் தேவை என்ற விளம்பரத்தைக் கண்டு ஷை கல்லூரித் தலைவருக்கு விண்ணப்பம் செய்தார். அந்தக் கோடைகாலத்தில் தமிழ் லெக்ஸிகன் கமிட்டி (வின் சலோ அகராதிக் குழு) கொடைக்கானலில் கூடிற்று. அதற்குத் தலைவர் சாண்ட்லா என்னும் அமெரிக்கப் பாதிரியார். அமெரிக்கன் கல்லூரித் தலைவர் ஜம்புரோவும் அவ்வமயம் கொடைக்கானலுக்குச் சென்றிருந்தார். அக் கமிட்டிக் கூட்டத்திற்குத் தமிழ்ப் பேரறிஞராகிய மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் வந்திருப்பதை, சாண்ட்லர் பாதிரியார் மூலம் அறிந்த ஜம்புரோ. தமக்கு வந்திருக்கும் தமிழாசிரியப் பதவி விண்ணப்பங்களை யெல்லாம், ஐயரவர்களிடம் கொடுத்துத் தக்கவரைத் தெரிந்து சொல்லும்படி வேண்டினர். ஐயரவர்கள் இவ்விண்ணப்பதார்களுள், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்தவர்களே இந்நிலைக்குத் தக்கவராவார்கள், அவர்களுள் இந்த விண்ணப்பதாரே நிரம்பத் தகுதியுடையவரென்று நம் பேராசிரியரைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். பின்பு கல்லூரித் தலைவர் நம் கார்மேகனாரை மதுரையில் 1914-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ஆம் நாள் வந்து தம்மைப் பார்க்கும்படி கடிதம் உய்த்தார். அங்ஙனமே, இவர்கள் வந்து கல்லூரித் தலைவர் அவர்களைக் கண்டபோது அவர், இவர் வயது 23 நிரம்பாத இளைஞராயிருப்பதையும், வேறு உயர்நிலைப்பள்ளிகளில் ஆசிரியராக இருந்த பயிற்சியில்லாமையையும் உட்கொண்டு, உடனே நியமன உத்தரவைக் கொடாமல் 3-ஆம் தேதி தம்மை வந்து பார்க்கும்படி சொல்லி அனுப்பிவிட்டார். இதற்குள், இந்த இடத்தை அவாவியிருந்த ஒரு மிஷன் உயர்நிலைப்பள்ளித்



கல்லூரி பிரின்ஸ்பால் ஜம்புரோ. (1899—1922)

தமிழாசிரியர், இந்த நிகழ்ச்சிகள் தெரியவும், மதுரைக் கல்லூரியில் தமிழாசிரியராய்ச் சில ஆண்டுகள் இருந்து வரும் தம் நண்பராகிய ஒரு ஐயரைத் தூண்டிவிட்டு ஜம்புரோத் துரையைப் பார்க்கும்படி செய்தார். அங்ஙனமே அவர் வந்து ஜம்புரோ அவர்களைப் பார்த்தபோது அவருடன் உரையாடி அவரைப்பற்றித் தெரிந்துகொண்டு, பின்பு வந்து தம்மைப் பார்க்கும்படி சொல்லி அனுப்பிவிட்டார். பின்னர் கல்லூரித் துணைத்தலைவர் திரு, பீற்றர் ஐசக் அவர்களை அழைத்து இது பற்றி ஆலோசிக்க அவர் நம் பேராசிரியரைப்பற்றிச் சிறப்பாக எடுத்துக்கூறி, மதுரைத் தமிழ்ச் சங்கப் பயிற்சியுடையார் கட்கு, வேறு பள்ளியில் ஆசிரியராய் இருந்த பயிற்சி வேண்டிய தில்லை; இவர் மேற்கொள்ளும் பணியைத் திறம்படச் செய்வா ரென்பதில் ஐயமில்லை என்றெல்லாம் சொன்னவுடன் அவர் களிடமே துரை நியமன உத்தரவை எழுதிக்கொடுத்து நம் ஆசிரியரிடம் கொடுக்கும்படி செய்தார்.

**கல்லூரியில் செயலாற்றிய முறை :—**

அன்று முதலாக இவர் அமெரிக்கன் கல்லூரித் தமிழா சிரியர் நிலை எய்தி அலுவல் பார்க்கத் தொடங்கினர். இக் கல்லூரியில் தமிழாசிரியர் இவர் ஒருவரே. இண்டர்மீடியட், பி. ஏ. என்னும் இரண்டு வகுப்புகளேயிருந்தன. மாணவர் களுள் சிலர், இவ்வாசிரியரோடு ஒத்த வயதினராகவும் இருந்த னர். அக்காலத்தில் கல்லூரி மாணவர்களாக வருபவர்கள் 20 வயதுக்குக் குறைந்தவர்களாக இருப்பது அருமை. இவ் வாசிரியர் ஆண்டில் இளையவராக இருப்பினும் உயர்ந்த தோற்றமும், அதற்கேற்ற உடற்கட்டும் உடையவராக இருந் தார். நீண்ட கருமை நிறச் சட்டையும், வெள்ளைத் தலைப் பாகையும், மடித்த சரிகை மேல் வேட்டியும் அணிந்த தோற்றத்தோடு இவர் வகுப்பிற்குள் நுழைவது மாணவர்க்கு மன எழுச்சியும், மகிழ்ச்சியும் விளைக்கும்.

இவ்வாசிரியர் பாடங் கூறுங்கால் முதற்கண் செய்யுட் களை அவற்றிற்கு வேண்டிய இசையுடன் வாசித்துக்காட்டி, சொற்களைப் பொருள் இயைபுக்கேற்பக் கொண்டு கூட்டி

அருஞ்சொற்பொருளும், பொழிப்புரையும் கூறுவர். பின்னர்ப் பாட்டுக்களில் அமைந்துள்ள சொன்னயம், பொருணயம் முதலிய பன்னயங்களையும் எடுத்துக்காட்டி இலக்கணக் குறிப்புகளையும் விளக்குவர். இவர் பாடஞ் சொல்லும் முறை கல்லூரி மாணவர்களுக்கேற்பச் சொற்பொழிவின் கூறுகவே அமைந்திருக்கும். இவரது சொல்நடை, மாணவர்கள்மனத்தை வேறெதிலும் செல்லவொட்டாதபடி தடுக்கும் அடுக்குமொழிகளாக எதுகை மோனை செறிய மிக மிடுக்காகத் தட்டுத் தடங்கலின்றிச் செல்லும். இதனைக் கேட்கும் மாணவர் யாவரும் சித்திரப்பாவையின் அடங்கி அன்பும் கல்வி ஆர்வமும் கொண்டு அமர்ந்திருப்பர். இவர் ஆசிரியப் பணியேற்ற போது இவர்க்கு இச்செயலைக் கொண்டுசெலுத்த இயலுமோ என்னவோ என ஐயுற்ற இக்கல்லூரித் தலைவர் அடிக்கடி இவர் வகுப்பின் பக்கம் வந்து மறைந்து ஒன்றி நின்று இவர் வகுப்பை எங்ஙனம் நடத்துகின்ருர், மாணவர்கள் அமைதியாய் இவர் சொல்லுவதை விருப்புடன் கேட்கின்றனரா என்று அறிய முற்படுவர். இங்ஙனம் இவரது வகுப்பில் அமைதி நிலவுவதையும், மாணவர்கள் அடக்கமாய் இருந்து பாடங் கேட்பதனையும் அடிக்கடி ஆய்ந்து அறிந்த பின்னர் கல்லூரித் தலைவருக்கு இவரைப்பற்றி ஏற்பட்டிருந்த ஐயம் அறவே நீங்கிற்று. இதனுல் முதன் முதல் கல்லூரித் தலைவரிடம், இவ்வாசிரியரை அழைத்து வந்து அறிமுகம் செய்து வைத்த மதுரை நகரசபைத் துணைத் தலைவரும், யாதவகுலப் பெரியாருமான, திரு. பரமேஸ்வரம் பிள்ள் அவர்கட்கு ஐம்புரோ அவர்கள் ''தாங்கள் என்னிடம் அழைத்து வந்த தமிராசிரியர் தம்பணியைத் திறம்பட நடத்துவாரென அறிந்து கொண்டேன், இச்செய்தி தங்களுக்கு மகிழ்ச்சிதரும் என நம்புகின்றேன்'' என்று எழுதினர். கல்லூரித் துணைத் தலைவர் பீற்றர் ஐசக் அவர்கள் இவரிடத்துச் சிறந்த அன்பும், ஆதரவும் உடையவராக இருந்து வந்தார். இவ்வாசிரியரது நல் வாழ்க்கை விளைவுக்கு முதலில் வித்திட்ட இப்பெரியாரது பெருங்குணத்தை இவ்வாசிரியர் என்றும் பாராட்டி வருகின்ருர். ''கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்ருற்றுங் கொல்லோ வுலகு'' என்று அறம்பாடிற்றன்ருே !



கல்லூரி வைஸ்பிரின்ஸ்பால் - பீற்றர் ஐசக்.

இப்பெரியார் 62 வயது வரை கல்லூரியில் பணி ஆற்றி யிருந்து ஓய்வு பெற்று 72-வது வயதில் காலஞ்சென்றார்.

நம் பேராசிரியரிடத்துச் சிறப்பாகக் குறிக்கத் தக்க அருங் குணம் ஒன்று உண்டு, அது ''மாணவர்களுள் வேண்டியோர் வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி யாவரையும் ஒரே தன்மைத்தான அன்பினுற் பிணித்து நடுநிலைமை பிறழாது இருந்து வந்ததேயாம். வகுப்பில் பாடத்தின் தொடர்பான பேச்சேயன்றி, வீண் பேச்சும், ஒருவரைப் பற்றிய ஏச்சும், ஒரு சிறிதும் இரா. இடக்கர் மொழிகள் தமது பேச்சில் இடம் பெறுதும், எல்லையிறந்த இன்பச் சுவைகள் கலவாதும், ஓர்ந்து பேசுதல் இவரது இயல்பு. வகுப்பில் மாணவர்கள் செய்யுட் களில் வரும் காதற் சுவைகளை விரித்துக்கூற வேண்டுமென்ரு வது ஏதேனும் கதை சொல்ல வேண்டுமென்ருவது அக்காலத் துத் தமிழ் வகுப்புக்களில் மாணவர்கள் ஆசியரைக் கேட்கும் வழக்கம்போல் ஒரு சிறிதும் வினவாது உட்குடனே ஒழுகி வருவர். இவரது வகுப்பின் அமைதி ஆங்கில வகுப்பின் அமைதியினும் சிறந்ததாகவே இருக்கும். இவற்றிற்கெல்லாம் காரணம் இவரது கல்வியின் ஆழமும் மாணவர்களை நடத்தும் சீரிய முறையுமேயாம்: அக்காலத்தில் உயர்நிலைப் பள்ளிகளி லும் கல்லூரிகளிலும் தமிழ் வகுப்பு நடைபெற்ற இயல்பினை யும் தமிழாசிரியர்கன் பட்ட பாட்டினையும் தமிழ்ப் பாடங் களில் மாணவர்க்கு இருந்த அக்கரையினையும் அறியாதார் யார்? தமிழ் மக்கள் ஆங்கில மொழியில் கொண்டிருந்த அளவில்லா மோகக் கொடுமையால் தமிழ்த் தாயைத் தாளால் தள்ளியிருந்த காலம் அது; தமிழகத்தில் அரியணை யில் வீற்றிருந்து தனிச்செங்கோல் செலுத்திய தமிழரசியின் பெருமையை உணராதும் அது உயர்தனிச் செம்மொழி என்ப தனை அறியாதும் வெர்னுக்குலர் மொழி என்று அதனைப் பல்கலைக் கழகமும் அரசாங்கமும் அனுதைப் பிள்ளைபோல மதித்து ஒதுக்கி உதறித் தள்ளிய காலம் அது. இங்ஙனம் தமிழ்மொழி இழிநிலை எய்தியிருந்த காலத்தில் அமெரிக்கன் கல்லூரித் தமிழாசிரியராய் அமர்ந்த இவரது நல்லூழாலோ அல்லது இவரது திறமையாலோ அமெரிக்கன் கல்லூரி

இத்தகைய அவல நிலைக்கு விலக்காய்த் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இலக்காய்த் திகழத் தொடங்கிற்று. இவர் இக்கல்லூரியில் புகுந்த காலத்தில் இண்டர் பி. ஏ. இரண்டு வகுப்பிலும் சேர்ந்து 200 மாணவர்களே இருந்தனர். நாளடைவில் மாணவர் தொகை மிகுந்து ஆண்டுக்கு 1200 ஆகப் பெருகிற்று. மாணவிகள் 200 பேர் இருந்தனர். இவருடன் பணியாற்றிய உதவியாசிரியர்கள் திரு. பி. சோதிமுத்து எம். ஏ., திரு. மீனாட்சி சுந்தரம் எம். ஏ., திரு. வடிவேலாயுதம் எம். ஏ., திரு. பாலுசாமி எம். ஏ. இவரிடம் கற்ற மாணவர்கள் பலர் வழக்கறிஞர்களாகவும் மாவட்ட நீதிபதிகளாகவும், மாவட்ட கலெக்டர்களாகவும், மருத்துவர்களாகவும் பொறியியலாராகவும், கல்லூரித் தலைவர்களாகவும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களாகவும் தலைமை யாசிரியர்களாகவும் இருந்து வருகின்றனர். இவர்களெல்லாம் இத்தகைய உயர் நிலையில் இருப்பினும் நம்மாசிரியர் பால் இன்றும் பண்டுபோல் அன்பும் மதிப்பும் உடையவர்களாகவே இருந்து வருகின்றனர்.

## ஒரு தமிழாசிரியர் அழுக்காறு.

அமெரிக்கன் கல்லூரியில் இவர் தமிழாசிரியராக ஆனவுடன் இவர் அடைந்த இடத்தை அவாவி விண்ணப்பஞ் செய்திருந்த ஒரு மிஷன் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் தமக்கு இவ்விடம் கிடையாமற் போனபடியால் ஏமாற்றமுற்று, அமெரிக்கன் கல்லூரி கவணிங் கவுன்சில் உறுப்பினரான பசுமலையில் இருந்த திரு, மில்லர் துரையைக் கண்டு "அமெரிக்கன் கல்லூரித் தலைவர் ஜம்புரோ இப்போது நியமித்த தமிழாசிரியருக்கு எடுத்த எடுப்பிலேயே மாதச் சம்பளம் ரூ. 40 கொடுத்துவிட்டார். இருபது ஆண்டுகள் அநுபவம் பெற்ற தமிழாசிரியயர்க்குக்கூட இவ்வளவு சம்பளம் கொடுப்பதில்லை" என்று அழுக்காறுற்றுக் கூறினர். இதனைக் கேட்ட மில்லர் அவர்கள் கல்லூரிக் கவுன்சில் கூட்டத்தில் இப்பொருளைப் பற்றிப் பேசி இனிமேல் ஆண்டு உயர்வுச் சம்பளம் இத் தமிழாசிரியர்க்கு அளித்தல் கூடாது என வற்

புறுத்தினர். பின்னர்க் கல்லூரித் தலைவர் அவ்வாண்டு இறுதியில் நீண்ட விடுமுறையில் (Furlough) அமெரிக்காவிற்குப் புறப்பட்டபோது நம் பேராசியர்க்கு ஒரு கடிதம் எழுதி அதில் " தங்கட்கு முடிவான சம்பள அளவு (Maximum Salary) கொடுத்து விட்டபடியால், வரும் ஆண்டில் தங்கட்கு ஆண்டு உயர்வுச் சம்பளம் இராது'' என்று எழுதியிருந்தார். நன்றல்லது அன்றே மறப்பது நன்று என்றபடி இந்நிகழ்சியை மறவாது ஒரு தமிழாசிரியரைப்பற்றிய இச்செய்தியை இங்குக் குறிப்பிடுவது அவ்வளவு வேண்டற்பாலது அன்று என்றாலும், அக்காலத்துத் தமிழின் இழிவந்த நிலைக்கும் தமிழாசிரியர் மதிக்கப்படாமைக்கும் ஒருசில தமிழாசிரியரது இத்தகைய புன்மை மனப்பான்மையும் உலகமறியாமையும், எல்லை கடந்த தன்னல வேட்கையுமே காரணமாய் இருந்தன என்பதனைப் புலப்படுத்தி, இத்தகைய இழிந்த இயல்பு இனியும் தமிழாசிரியர் மாட்டுத் தலைக்காட்டலாகாது என்று மனத்திலெழுந்த ஒரு உணர்ச்சியின் எழுச்சியாலேயேதான் இதனை எழுத நேர்ந்தது.

660

ஜம்புரோ அவர்கள் இரண்டு ஆண்டின் பின்னர் அமெரிக்காவினின்றும் கல்லூரி வந்தடைந்தவர் கல்லூரியில் மாணவர் கட்கிடையில் இவர் அடைந்துவரும் நன்மதிப்பையும் வேலைத் திறமையையுங்கண்டு ஐந்தாண்டுகட்கிடையில் மாதச் சம்பளம் ரூ. 75 ஆக ஆக்கினர். அமெரிக்கன் கல்லூரியை நன்னிலைக்குக் கொணர்ந்து சுமார் முப்பத்துமூன்று (1890 1922) ஆண்டுகளாக அல்லும் பகலும் உழைத்து அந்த உழைப்பின் மிகுதியால் இதய நோயுற்று மிக வருந்தி கல்லூரிக்குள் காலேஜ் ஹவுஸ் என்னும் தமது இல்லத்தில் காலஞ்சென்றார். அதன் பின்னர் Rev வாலஸ் அவர்களும், அவர் ஓய்வு பெற்றுச் சென்ற பின்னர் கல்லூரித் துணைத் தலைவர் திரு, பீற்றர் ஐசக் பி. ஏ. எல். டி. அவர்கள் தற்காலிகத் தலைவராகவும், இருந்தார்கள். 1928-ல் Rev B. S. ஸ்டோபர் கல்லூரித் தலைவரானார். இவர் காலத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தினின்றும் ஒரு அறிக்கை கல்லூரிகளில் கீழைநாட்டு மொழி யாசிரியர்களாக இருப்பவர்கள் பல்கலைக் கழகப்பட்டம் (University

Degree) பெற்றிருந்தால் இப்போது குறைந்தது ரூ. 100 சம்பளம் அவர்கட்கு அளிக்கப்பட வேண்டும் என்று குறிப் பிடப்பட்டு வந்தது. இதைப்பற்றி ஆராய்தற்குக் கூடிய கல்லூரிச் செயற் குழுவில் நம் பேராசிரியர் அவர்கள் பல்கலைக் கழகப்பட்டம் பெருவிடினும் இவர்கள் தகுதிபற்றி யாதொரு தடையுமின்றி இவர்கட்கும் இவ்வுயர்வு அளிக்கப்பெற்றது.

ரெவரண்டு ஸ்டோபர் 1935-ஆம் ஆண்டு ஓய்வு பெற்று அமெரிக்கா சென்ற பின்னர், திரு, ஈ. எம் பிளிண்டும், அதன் பின்பு 1943-ல் திரு, ரஞ்சிதம் அவர்களும் கல்லூரித் தலைவ ராஞர்கள்.

**சென்னைப் பல்கலைக் கழகச் சிறப்புக் குழு :—**
(Madras University Commission)

இக்குழு 1928-ஆம் ஆண்டு இக்கல்லூரிக்கு வந்த போது கீழைநாட்டு மொழிக்குரிய உறுப்பினராக வந்தவர் திரு, சத்தியமூர்த்தி பி. ஏ., பி, எல். அவர்கள், இவர்கள் கல் லூரியில் மற்றைய மொழி யாசிரியர்களைச் சந்தித்துப் பேசிய பின்பு நம் பேராசிரியர் அவர்களைச் சந்தித்துத் தமிழ்ப் பாடங் களின் தகுதிபற்றியும் அவற்றை நடத்துகிற முறை பற்றியும் பல விஞக்களை விஞவ, அப்போது அவற்றைப்பற்றி சிலர் உரைத்த விளக்கங்களினுலும், பேசிய முறையினுலும் இவரது திறமையை நன்கறிந்து, தாம் முடிவாக வெளியிட்ட பல்கலைக் கழகச் சிறப்புக்குழு அறிக்கையில் (University Commission Report) நம் பேராசிரியரைப்பற்றி ''இக்கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர், ஆ. கார்மேகக் கோனூர் ஒரு சிறந்த தமிழ்ப் பேரறிஞராக இருக்கின்ருர்'' என்று குறிப்பிட்டிருந்தார். வேறு எவ்வாசிரியர் பெயரையும் அறிக்கையில் குறிப்பிட்டு எழுதாத நிலையில் இங்ஙனம் திரு, சத்தியமூர்த்தி அவர்கள் இவ்வாசிரியரைப்பற்றி விதந்தெழுதிஞர்.

**இந்தியமொழித்துறைத் தலைவரானது :—**

அமெரிக்கன் கல்லூரியில் இந்திய மொழித்துறைத் தலை வர் ஒருவரை நியமிக்க வேண்டியிருந்தது. இப்பதவி யடை

தற்குக் கீழைநாட்டு மொழியில் பல்கலைக் கழகப்பட்டம் (B. O. L., Tamil M. A. Degrees) பெற்றிருக்க வேண்டுமென் பது பல்கலைக்கழக விதியாதலால் கல்லூரி மலையாள ஆசிரியர் ஒருவர் M. A. பட்டம் பெற்றவர் தாம் இப்பதவியை அவாவிக் கல்லூரித் தலைவரிடம் பேசி வேண்டினர். அப்போது கல் லூரித் தலைவராக இருந்த திரு, ரஞ்சிதம் அவர்கள் ''தமிழ் நாட்டுத் தலைநகரான இம்மதுரையிலுள்ள ஒரு கல்லூரியில் மலையாள மொழி ஆசிரியரைத் தலைவராக (Head of the Department) நியமிப்பது நெறியும் அன்று முறையும் அன்று தங்களினும் கல்லூரியில் மிகுந்த அநுபவமும் நன்மதிப்பும் பெற்றுள்ள கோனூர் அவர்களையே நாங்கள் நியமிக்கப் போகின்றோம்'' என்றுஅவ்வாசிரியரதுவிருப்பம்தவறுனது என மறுத்துவிட்டார். பின்னர்க்கல்லூரித் தலைவர் திரு, ரஞ்சிதம் அவர்கள், பல்லாண்டுகளாகக் கல்லூரியில் ஆசிரியப்பணி புரிந்து தம் அலுவலைத் திறம்பட நடத்திவரும் ஆ. கார்மேகக் கோனூர் அவர்களையே இந்திய மொழித்துறைத் தலைவராக நியமிக்கக் கல்லூரிச் செயற்குழு விரும்புகிறது. இவர் பல் கலைக் கழகப் பட்டம் பெருதவராயினும் தகுதிமிக்க இவர் பொருட்டு விதிவிலக்களிக்க வேண்டுமென்று பல்கலைக் கழக சிண்டிக்கேட்டுக்குக் கடிதம் எழுதினூர். சிண்டிக்கேட் குழுக் இக்கடிதம் பற்றி நன்கு ஆராய்ந்து ''கோனூரவர்களது நீண்ட காலக் கல்லூரி அனுபவம் பற்றியும், அவரது தமிழறி வின் சிறப்புப்பற்றியும் கல்லூரியில் இந்திய மொழித் துறைத் தலைமை நிலைமை அளிப்பதைப் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள் கிறது'' என்று சிண்டிகேட் தம் உடன்பாட்டினைக் கல்லூரித் தலைவர்க்குத் தெரிவித்தது. அதுமுதல் நம் கோனூரவர்கள் கல்லூரியில் இப்பதவியை ஏற்றுத் திறம்பெற நடத்தலானூர். கல்லூரித் தலைவர் திரு. ரஞ்சிதம் அவர்கள் இவ்வாசிரியர் கல்லூரித் தமிழாசிரியராக வந்த 1914-ஆம் ஆண்டு கல்லூரி யில் B. A வகுப்பு மாணவராக இருந்தவர். நம் ஆசிரியரது திறமையை நன்கறிந்தவர். ஆதலால் அதற்கேற்ப இவரை அன் புடனும்நன்மதிப்புடனும் நடத்திவந்தார். ஆசிரியர் கல்லூரிச் செயற் குழுவின் உட்குழுவாகிய செனட்டஸ் என்பதினும் உறுப்பினரானூர். கல்லூரியில் இந்திய மொழியின் சார்பான

காரியங்களைத் தலைவர் இவருடன்கலந்து இவரது உடன்பாடு பெற்றே செய்வார். கல்லூரியின் பிற காரியங்களைப்பற்றிக் கூட இவர் நம் பேராசிரியருடன் கலந்து பேசுவதுண்டு. கல்லூரியில் பல்லாற்ருனும் தம்மைப் போற்றி மீப்பட மதித்து வந்த திரு, இரஞ்சிதம் அவர்களின் பேருதவியை நம் கார்மேகனுர் மறவாது நன்றியறிதலுடன் இருக்கின்ருர்.

திரு. ரஞ்சிதம் அவர்கள் 1948-ஆம் ஆண்டு கல்லூரி அலுவலினின்றும் விலகினுர். பின்னர்க் கல்லூரி ஆங்கில மொழிப் பேராசிரியர் திரு. நயினுன் M. A. தற்காலிகத் தலைவரானுர். இக்காலத்தில் நம் பேராசிரியர் இரண்டு திங்கள் நோய்வாய்ப்பட்டு நலிந்திருந்தார். அப்போது திரு. நயினுன் அவர்கள் இவரை வந்து பார்த்துத் தாங்கள் எப்போது கல்லூரிக்கு வர இயலுமோ அப்போது வந்தால் போதும். மாத நிவேதனத்தில் ஏதுங்குறைவிராது எக்கவலையும் வேண்டாமென்று அன்புரை வழங்கினுர். இது போற்றுதற்குரிய தகவுரையாகும்.

திரு. நயினுன் அவர்கள் ஓராண்டுத் தலைமைக்குப் பின்னர் திரு, S. J. சவரிராயன் M. A. 1949-ஆம் ஆண்டு கல்லூரித் தலைவரானுர். இவர் நம் பேராசிரியரது தகுதிபற்றி இங்கு வருதற்கு முன்னரே நன்கறிந்தவர். இவரும் திரு. ரஞ்சிதம் அவர்களைப் போலவே அன்பும் நன்மதிப்புங் கொண்டு நம் பேராசிரியரை நடத்தி வந்தார். கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதுச் சட்டப்படி, நம் ஆசிரியர் 1950-ஆம் ஆண்டு ஓய்வு பெறுதற்குரியராக இருந்தார். ஆதலால் கல்லூரி கவுன்ஸில் நம் பேராசியரை ஓய்வுபெறச் செய்யக் கருதிற்று. அப்போது தலைவர் திரு. சவுரிராயன் அவர்கள் அக்கவுன்ஸில் கூட்டத்தில் ''நான் இக்கல்லூரிக்குத் தலைவராக வந்து ஓராண்டேயாயிற்று. இக்கல்லூரியில் 36 ஆண்டுகள் ஆசிரியராக விருந்து கல்லூரி நிலைமையை எல்லாம் நன்கறிந்தவர் கோனுரவர்களே, இவர்கள் இன்னும் ஓராண்டு கல்லூரியிலிருப்பது எனக்குப் பேருதவியாக இருக்கும்'' என்று எடுத்துரைத்து 1951-ஆம் ஆண்டுவரை மீண்டும் இவரை ஆசிரியராக இருக்கும்படி செய்தார்கள். இவர்கள் இங்ஙனம் செய்த



கல்லூரித் திருவள்ளுவர் கழகம் - நடுவில் இருப்பவர்கள் பேராசிரியரும், திரு. ரஞ்சிதமும்.

நன்றியை என்றும் மறவாது நம் ஆசிரியர் உளங்கொண்டு பாராட்டி வருகின்றார்.

**கல்லூரியினின்றும் ஓய்வு பெற்றது :—**

*1951*-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் நம் பேராசிரியர் ஓய்வுபெற்றுக் கல்லூரிப் பணியினின்றும் விலகினார். இவ்வாசிரியர்க்குப் பிரிவு உபசாரம் செய்வதற்குரிய செயல்களை ஆற்ற ஒரு குழுவினை திரு. சவரிராயன் அவர்கள் அமைத்து அதன்மூலம் கல்லூரி மாணவர், ஆசிரியர் இவர்களிடத்தினின்றும் நிதி சேர்த்தார். மாணவர்கள் பலர் குறிப்பிட்ட அளவினும் அதிகமான பொருளை முந்துற வந்து வழங்கினார்கள். கல்லூரிப் பேரவை மன்றம் சிறப்புற அலங்கரிக்கப்பெற்று *1951*-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் *16*-ஆம் நாள் மாலை 5 மணி அளவில் நிகழ்ச்சி தொடங்கிற்று. மாணவர்களும், ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் மற்றும் நகரப் பெரியோர்களும் மன்றத்தில் பெருந்திரளாகக் குழுமியிருந்தார்கள். விழாவிற்குத் தலைமை தாங்கிய தமிழவேள் திரு. பி. டி. இராசன் தமது தலைமை உரையில் ''கோனாரவர்களது தமிழ்த் தொண்டினையும், திறமையினையும் பாராட்டிவிட்டு ''இங்ஙனம் பல்விதச் சிறப்புக்களுடன் உபசாரமும் பாராட்டும் தமிழாசிரியர்க்கு நடப்பதனை முதலில் சென்னையில் டாக்டர் உ. வே, சாமிநாதையர் அவர்கட்கு நடந்தபோது நான் கண்டேன். இப்போது இரண்டாவதாக நம் கோனாரவர்கட்கு இங்கு நடப்பதைக் காண்கிறேன். கண்டு மகிழ்வுறுகின்றேன், இந்நிகழ்ச்சி இக்கல்லூரி, இவ்வாசிரியர்பால் கொண்டிருந்த நன் மதிப்புக்கு ஒரு உரையாணியாகத்திகழ்கின்றது'' என்று குறிப்பிட்டார்கள். கல்லூரித் தலைவர் திரு. சவரிராயன், ''இவ்வாசிரியர் கல்லூரியில் பணி புரிந்த சிறப்பினையும் இவரது உலகியல் அறிவினையும்; குண நலங்களையும் பாராட்டிப் பேசினார்கள். மேலும் அவர்கள் ''இவ்வாசிரியர் இதுவரை அமர்ந்திருந்த இடத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தக்க ஒருவரைஇனிக்காண்பது அரிதாகவேயிருக்கும்'' எனவும் இவரது கல்லூரிப் பிரிவிற்கு வருந்தித் தழுதழுத்த குரலுடன் பேசினார்கள். ஆசிரியர்களுள் சிலரும் மாணவர்களுள் பலரும், நம்

பேராசிரியரைப் பலபடப் பாராட்டிப் புகழ்ந்தனர். இவரது உருவப்படத்தை செஷன் நீதிபதி திரு. ரெங்கசாமி நாயுடு அவர்கள் திறந்து வைத்து ஆசிரியரைப்பற்றி புகழுரையும் வாழ்த்துரையும் புகன்றூர்கள். பட்டில் அச்சிட்ட கல்லூரிப் பிரிவு முகமன் இதழை வெள்ளிப் பேழையுள் வைத்துத் தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்கள் ஆசிரியர்க்கு வழங்கினார்கள். பிரிவு முகமன் இதழில் பொறித்துள்ளவற்றில் ஒரு பகுதி:—

## தமிழன்னை பயந்த தனிப்பெருந் தோன்றலே

"தேனினும் இனிய தீந்தமிழ் மொழியின் திட்பத்தையும், இலக்கிய நுட்பத்தையும் தமது ஒட்பத்தால் தேர்ந்து தெளிந்து, அத்தெள்ளமுதை மாந்தி மகிழும்படி மாணவர் உலகுக்கு வாரி வழங்கிய வள்ளியோய்! தங்களின் கடமை உணர்ச்சியை இக்கல்லூரி என்றும் மறக்கவியலாது. அமெரிக்கன் கல்லூரி, அருந்தமிழ் அணங்கின் ஆடல் அரங்கு; தமிழ்த் தென்றலின் தாயகம் எனத் தமிழுலகமே உச்சிமேல் வைத்து மெச்சும்படியான அருமையும் பெருமையும் அளித்த தங்கட்கு யாம் செய்யும் கைம்மாறு யாதென அறியோம்! ஓய்வு பெறுகின்ற உரவோய்! தங்களது பேரூதியங் கருதா உழைப்பிற்கு எங்கள் உள்ளன்பே காணிக்கை.

தற்காலத் தமிழுலகின் தனிப்பெருந் தலைவராகிய தங்களின் நுண்மாண் நுழைபுலத்தையும், நாவன்மையையும் நன்குணர்ந்த சென்னைப் பல்கலைக் கழகம், பல்லாண்டுகட்கு முன்னரே தங்களைப் பாராட்டியது; கண்டு நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றோம். முத்தமிழ்த் துறையில் முறை போகிய வித்தகர் அவையில், பண்டைத் தமிழரின் பண்பாடு பற்றிப் பல்கலைக் கழகப் பேரவையில் எழுந்த தங்களின் முழக்கம் இன்றும் ஒலிக்கக் கேட்கின்றனர். எண்ணற்ற பெரியோர்கள், தங்களின் உள்ளத் தூய்மையும், உவப்பூட்டும் உரையாடலும் சொல்லின் இனிமையுமே பல்லாயிரக்கணக்கான மாணவர்களை இக்கல்லூரிக்கு ஈர்த்தன எனின் அது மிகையாகாது. முப்பத்தேழு ஆண்டுகள் தொடர்ந்து தொண்டாற்றி ஓய்வு பெறும் இந்நாளில் தங்களைப் பாராட்டி மகிழ்கின்றோமாயி



இப்போதுள்ள
அமெரிக்கன் கல்லூரித் தலைவர் - திரு. சவரிராயன் M. A.

னும் பிரிவுத் துன்பம் பெரிதும் அடைகின்றோம்.. இளமை மாறாத தங்கள் வாழ்க்கையில் இனிமை தவழட்டும்.'' என்பது.

இவ்விழாவிற்குப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. A. L. முதலியார், கோவை பெரியார் திரு. இரத்தினசபாபதி முதலியார், திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, திரு. ராஜா சர் முத்தையா செட்டியார் முதலிய பெரியார்கள் பலர் வாழ்த்தும் பாராட்டும் அனுப்பியிருந்தார்கள். உபசார நிதியில் எஞ்சிய தொகையைக்கொண்டு இக்கல்லூரியில் ஆண்டுதோறும் கலைப்பாடத்தில் நல்ல தேர்ச்சிபெறும் மாண வர் ஒருவர் பெறுமாறு ஒரு பரிசு ஆசிரியர் பெயரால் ஏற் படுத்தப்பட்டுள்ளது.

கழக நிகழ்ச்சிகள்

## கல்லூரித் தமிழ்க் கழகம்.

மாணவர்க்குச் சொற்பொழிவுத்திறன் உண்டாவதற்கு அமெரிக்கன் கல்லூரியில் 1916-ஆம் ஆண்டு பரிமேலழகர் தமிழ்க்கழகம் என்னும் இலக்கியக் கழகத்தை இவ்வாசிரியர் நிறுவி இதற்குத் தலைவராக இருந்துவந்தார். பல ஆண்டு கட்குப் பின்னர் 1948-ஆம் ஆண்டு இக்கழகத்தின் பெயர் மாணவர் விருப்பிற்கிணங்க திருவள்ளுவர் கழகம் என மாற்றி அமைக்கப்பட்டது.

நம் ஆசிரியர் இக்கழகத் தொடக்க விழாக்களுக்கும் ஆண்டு நிறைவு விழாக்களுக்கும் தமிழ் நாட்டிலுள்ள பேரறி ஞர்களை வரவழைத்துச் சொற்பொழிவுகள் ஆற்றச்செய்து மாணவர்க்குத் தம் தாய் மொழியில் சிறந்த பற்றினையும் அறி வினையும் உண்டுபண்ணினர்.

இக்கழகத்திற்கு வருகை புரிந்நோர்: திரு, உ, வே. சாமி நாதையர், திரு, R. P. சேதுப்பிள்ளை, திரு, அண்ணாத்துரை, திரு, சத்தியமூர்த்தி, திரு, சிவராம சேதுப்பிள்ளை, திரு, A. சிதம்பரநாதன் செட்டியார், திரு, L. P. K. R. இராமநா தன் செட்டியார், திரு, ஆறுமுக முதலியார் முதலியோராவர்.

திரு. ஆதிகேசவலு பிள்ளை முதலிய தமிழறிஞர்களும் நகரப் பெருமக்களும் வந்து செனட் மண்டபம் இடம் போதாத அளவு குழுமியிருந்து சொற்பொழிவினைக் கேட்டனர். நம் ஆசிரியர் "பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பும்" என்பது பற்றித் தொல்காப்பியம், சங்க நூல்கள், சாசனங்கள் முதலியவற்றின் சான்றுகளுடன் அவையினர் வேட்ப விளக்கிப் பேசினர். ஹிந்துப் பத்திரிகைத் தலைமை நிருபர் ஒவ்வொரு நாளும் நிகழ்ச்சிக்கு வந்திருந்து சொற்பொழிவாளர் பேசிய பொருளை அப்போதைக்கப்போது ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொடுக்க அப்பத்திரிகை ஒவ்வொரு நாளும் ஒரு பக்க முழுவதையும் இச்சொற்பொழிவுச் செய்திக்கு இடமாக அளித்து வெளியிட்டது. நான்காம் நாள் சொற்பொழிவு முடிவில் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள், கிருஷ்ணராவ் பான்சலே அவர்கள் பவானந்தம் பிள்ளையவர்கள் ஆகிய மூவரும் சொற்பொழி வாளரைப் பலபடப் பாராட்டிப் பேசினர்கள். பின்னர் இத்தகைய சொற்பொழிவுப் பிரிவைப் பல்கலைக் கழகத்தில் புதிதாக இணைத்து, தமிழ்மொழி முதலிய திராவிட மொழிகளின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்த பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சர். வேங்கடரத்தினம் அவர்களின் அரிய முயற்சியினையும் புகழ்ந்துரைத்தனர். பின்னர் துணைவேந்தர் சர். வேங்கடரத்னம் அவர்கள் சொற்பொழிவாளருக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டி ஆங்கிலத்தில் பேசினர்கள்.

அப்பேச்சு அப்போது ஹிந்து பத்திரிகையில் வெளிவந்தபடி கீழ்க்காணுவது:

**The Vice-Chancellor expressed his sincere appreciation and cordial thankfulness to the lecturer for his four learned discourses. The lecturer had given sufficient indications that the culture and civilisation of the Tamils compared very favourably with the culture and civilisation of the people of any other country. He, the speker, hoped that increasing atten-**

tion would be paid to that extremely interesting and instructive subject by a band of scholars, like the lecturer, for the illumination of those that sought knowledge.

இங்ஙனம் துணைவேந்தர் பேசி முடிந்ததும் சொற்பொழிவாளருக்கு திரு. கிருஷ்ணராவ் பான்சலே அவர்கள் பூமாலை அணிந்து வாழ்த்தினர். பேரவை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கலைந்தது. சொற்பொழிவுக்குப் பரிசாகப் பல்கலைக்கழகம் 300 வெண்பொற் காசுகள் அளித்தன.

## சென்னை நகர யாதவகுலப் பெரியார்கள் பாராட்டு

சொற்பொழிவான பின்னர் அன்று இரவு சென்னை நகர யாதவகுலப் பெருமக்கள் நம் ஆசிரியர்க்கு 28—11—27-ல் ஒரு பாராட்டு விருந்து உபசாரம் நடத்தித் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டனர். இச்செய்தி ஹிந்து பத்திரிகையில் அப்போது வெளிவந்தவாறு:

## MR. KARMEGA KONAR HONOURED

Mr. A. Karmega Konar, Tamil Lecturer, American College, Madura, who has finished delivering a course of four lectures on "Ancient Tamil Culture and Civilisation" under the auspices of the Madras University who entertained at Dinner on Sunday night by a few Yadhavas of the city at Swarna Vilas the residence of Rao Sahib T. C. Audikesavalu Pillai. The guests as they arrived were received by the Rao Sahib and Mr. M. K. Aravamudha Pillai. About fifty Yadhavas were present and much enthusiasm prevailed. The guests were served with Dinner. Mr. C. Audikesavalu Naidu presided. Several speeches congratulating the learned Pandit on the high honour conferred on him by the University and thanking the

Vice-Chancellor and the Syndicate of the Madras University for having institued the University lectures more especially for having honoured one of their community by giving a chance to such great research scholar to the public with the result of long and careful research. Prominent among those present were Rao Sahib T. C. Audikesavalu Pillai, Dr. T. Rajaram, Mr. M. Appadurai Pillai, G. Ramanujam Pillai, S. Venkatachelam Pillai, C. Audikesavalu Naidu, M. K. Aravamudha Pillai, M. C. Deenadayalu Pillai, T. Ponnurangam Pillai, P. Muthusami Pillai, T. A. Venugopal Pillai, V. Kannu Pillai, T. Govindaswami Pillai T. C Renganatha Pillai, C. Janakiram Pillai, P Ramakrishna Pillai and others.

## கரந்தைத் தமிழ்ச்சங்கம்

இச்சங்கத்தின் தலைவராயிருந்த திரு, உமாமகேசுரம் பிள்ளையவர்களும் சங்க அமைச்சர் கரந்தை கவியரசு R. வேங்கடாசல பிள்ளையவர்களும் நம் பேராசிரியர்பால் சிறந்த அன்பும் நண்பும் பூண்டவர்கள். இவர்களது அழைப்பின்படி சங்கத்தின் ஒரு ஆண்டு விழாவிற்கும் வெள்ளி விழாவிற்கும் சென்று நம் ஆசிரியர் சொற்பொழிவாற்றினார்கள். வெள்ளி விழாவில் ஆற்றிய சொற்பொழிவு மதுரைக் காஞ்சியைப் பற்றியது.

## திருவிடர் கழகம்
## வ. உ. சிதம்பரனார் பாராட்டு

நம் பேராசிரியர் 1928-ஆம் ஆண்டு கோயில்பட்டி திருவிடர் கழக ஆண்டு விழாவில் ''பண்டைத் தமிழர் நாகரிகம்'' பற்றி ஒரு சொற்பொழி வாற்ற, அக்கழகத் தலைவர் திரு, விருதை சிவஞான யோகிகளால் அழைக்கப்பெற்றார். அதற்கிணங்கி நம் பேராசிரியர் சென்று சொற் பொழிவாற்றிய



அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் புலவர் பேரவை. (1934)
படத்தில் வலப்பக்கமிருந்து 2-வதாக அமர்ந்திருப்பவர், பேராசிரியர்.

போது, பல்லாண்டுகள் சிறையில் கிடந்து நலிந்து வெளிவந்திருந்த வ. உ. சிதம்பரனாரும் அப்பேரவையில் வீற்றிருந்தார். நம் பேராசிரியர் தாம் பேசுதற்கெடுத்துக்கொண்ட பொருளைத் தொன்னூல் மேற்கோள்களுடன் தட்டுத் தடங்கலின்றிச் செழுமையான செந்தமிழ் நடையில் பேசினார்கள். நம் பேராசிரியது சொற்பொழிவு முடிந்ததும் சிதம்பரனார் அவர்கள் மேடைமீது சென்று, நம்மாசிரியரவர்களுக்கு மாலை அணிந்து முதுகு தைவந்து "கார்மேகமே உமது சொல் மாரியால் நாங்கள் உளங்குளிரப் பெற்றோம்" என உவப்புரை வழங்கிப் பாராட்டினார்கள். 1905-ஆம் ஆண்டு நம் வீர சிதம்பரனார் மதுரையில் பாண்டித்துரைத் தேவர் அவர்களின் விருந்தினராகத் தங்கியிருந்தபோது அவர்கட்குச் சிறு பணியாற்றும் சிறுவனாக இரண்டு நாட்கள் அவருடன் இருந்த நம் பேராசிரியரை நோக்கி, சிதம்பரனார் தாம் ஊருக்குப் புறப்படுங்கால் மகிழ்ந்துரைத்த வாழ்த்துரை "நீ வருங்காலத்தில் செஞ்சொற் செல்வனாய்த் திகழ்வாய் என்பதனை அறிந்தேன்; விளையும் பயிர் முளையிலே தெரியுமன்றோ" என்பதாம். (இது முன்னரும் குறிக்கப்பெற்றது). தமது தூய இவ்வுரை, பொய்யாது மெய்யாயதை நம் சிதம்பரனார் தம் வாழ்நாளிலேயே நேரே அறிந்து மகிழ்ந்தார் என்பது சால வியப்பினைப் பயப்பதன்றோ!

## அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை

1928-ஆம் ஆண்டு இப்பேரவையின் தலைவர் பேராசிரியர் திரு, விபுலானந்த அடிகளார் அவர்களால் நம் பேராசிரியர் இப்பேரவையில் "தமிழ் இலக்கியம்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்ற அழைக்கப்பெற்றார். அங்ஙனமே இவர்கள் சென்று, முத்தமிழ்ப் பாகுபாடு பற்றியும் தமிழ் இலக்கியச் சிறப்புப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்; பின்னர்த் தலைமை தாங்கிய அடிகளார் நம்மாசிரியர் சொற்பொழிவை நன்கு பாராட்டிப் பேசினார்கள். அடிகளாரது பாராட்டுக்கு நம் பேராசிரியர் இங்ஙனம் இலக்கானது நற்பேறுகுமன்றோ!

**மதுரை முத்தமிழ் மாநாடு :—**

*1944*-ஆம் ஆண்டு இம்மாநாடு விபுலானந்த அடிகளார் தலைமையில் நடந்தபோது நம்மாசிரியர் ''திருவள்ளுவர்'' என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சிக் கருத்தமைய அவையோர் வியப்ப ஒரு சொற்பொழிவாற்றினார்கள்.

**மதுரைத் திருவள்ளுவர் கழகம் :—**

இக்கழக ஆண்டு விழாக்களில் நம் ஆசிரியர் தலைவராகவும் சொற்பொழிவாளராகவும் இருந்து ஆற்றிய சொற்பொழிவுகள் பல. *1954*-ஆம் ஆண்டு பசுமலை நாவலர், டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்களுக்கும், *1956*-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு, சதாசிவப் பண்டாரத்தாருக்கும், முறையே திரு, பி. டி. இராஜன், ராஜா சர் முத்தையா செட்டியார் இவர்களால் பொன்னாடை போர்த்தும் விழா இக்கழகத்தில் நடைபெற்றபோது கழகச் சார்பில் இருவர்க்கும் அளித்த பட்டத்தை நம் கார்மேகனாரே அவர்கட்கு வழங்கி, அவையோர் பாராட்டப் பாராட்டுச் சொற்பொழிவும் ஆற்றினார்கள்; இந் நிகழ்ச்சிகளுள் பின்னைய நிகழ்ச்சியில் நம் கார்மேகனார், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஆற்றிய அறங்கள் பலவற்றில் தமிழ் வளர்த்த சீர்த்தியால் மூவேந்தரையும் விஞ்சிவிட்டார் என்று அவரது வண்மையைப் பலபட எடுத்துரைத்தார்கள். இந் நிகழ்ச்சியின் முடிவில் ராஜா சர் முத்தையா செட்டியாரவர்கள் மனமுவந்து திருவள்ளுவர் கழகத்திற்கு ரூ. *2000* நன்கொடையாக வழங்கினார்கள். இவர்கள் கொண்டிருந்த நற்கருத்துக்கு நம் பேராசிரியரின் புகழுரை ஒரு தூண்டுகோலாக இருந்ததெனில் அது தவறாகாது.

**ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவு மாநாடு :—**

*21–8–55*-ல் இம் மாநாடு மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் நெல்லை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சார்பில் நடைபெற்றது. இக் கழகத்தின் வேண்டுகோட்படி இம் மாநாட்டுக்கு நம் பேராசிரியர் தலைமை தாங்கினார். நம்

பேராசிரியர் தம் தலைமைப் பேருரையில் தமிழரது தொன்மை, ஐந்திணைப் பாகுபாடு வாழ்க்கை முறை, சங்க இலக்கியங்களின் சிறப்பியல்பு, ஐங்குறு நூற்றுச் செய்யுட்களின் அகப்பொருட்சுவை முதலியவை குறித்து எடுத்துரைத்த திட்ப நுட்பம் செறிந்த கருத்துக்கள் அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்தரான புலவர்கட்கெல்லாம் நல் விருந்தாய் அமைந்திருந்தன. இவர்களது தலைமை உரை ''தமிழ் நாடு'' நாளிதழில் தொடர்ச்சியாய் ஞாயிறு மலரில் வெளிவந்தது.

**மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா :—**

1956-ஆம் ஆண்டு மே திங்கள் 30-ஆம் நாள் முதல் ஜூன் 5-ஆம் நாள் வரை நடைபெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழாவில் முதல் நாள் முதல் நிகழ்ச்சியாக நம் பேராசிரியர் ஆற்றிய வீர முழக்கச் சொற்பொழிவு, தமிழ் மக்களது உள்ளங்களை இறும்பூதெய்தச் செய்து ஏக்கழுத்தம் உண்டு பண்ணியதை அறியாதார் யார்? இப் பேருரையை, நாள் செய்தித் தாள்கள் பல விரிவாக வெளியிட்டன.

**மதுரைத் தியாகராசர் கல்லூரி இளங்கோ மன்றம் புலவர்விழா:**

இம்மன்றத்தின் சார்பில் ஜெயங்கொண்டார் விழா 1956 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 28-ஆம் நாள், நம் பேராசிரியர் தலைமையில், கல்லூரிப் பேரவை மன்றத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் ஜெயங்கொண்டாரைப்பற்றியும், கலிங்கத்துப் பரணி பற்றியும் ஆராய்ச்சி அரங்கு ஒன்றும் நிகழ்ந்தது. இவ் விழாவிற்கு மாணவர்களும், ஆசிரியர்களும், பெருமக்களும் திரளாக வந்து குழுமியிருந்தார்கள்.

இவர் தமது தலைமை யுரையில் பண்டைத் தமிழ் இலக்கியச் சிறப்பினையும், இடைக்காலத்து தமிழ் இலக்கியம் சென்ற நெறியினையும் பிற்காலத்து ஐம்பது ஆண்டுகளில் தமிழ் அடைந்துள்ள நிலையினையும் குறித்து விளக்கினர். மேலும் தமதுரையில் ஜெயங்கொண்டாரது புலமைத் திறனையும், அவர் பாடிய பல்சுவைகெழுமிய பரணியின் சிறப்பினையும் பரணிப் பாடல்களைக் கொண்டு புலப்படுத்தினார்கள். பரணி,

தமிழ் மொழியில் திறன் நூல் இல்லை என்ற குறையை நீக்கிய மன்ற நூலென்றும் குறிப்பிட்டார்கள்.

இவ்வரங்கில் கல்லூரி நிறுவிய வண்மையாளர் திரு, கரு முத்து தியாகராச செட்டியார் அவர்கள் வந்திருந்து அரங்கினைச் சிறப்பித்தார்கள்.

நம் பேராசிரியரவர்கள், தியாகராசர் கல்லூரியில் நிறுவப் பெற்ற, தியாகராசர் தமிழ் மன்றத்தை 1955-ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்துத் திறப்புவிழா வுரையில் திரு, கரு. முத்து தியாகராசச் செட்டியாரது கல்வி வண்மையைப் பாராட்டிப் பேசினார்கள்.

**மதுரை நடேசையர் வாசகசாலைத் திறப்புவிழா :—**

இவ் வாசகசாலை .1953-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 14-ஆம் நாள் நிறுவப்பெற்றது. இவ்வாசக சாலையின் திறப்பு விழா இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் திரு, டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களால் நடைபெற்றது. திரு, இராதாகிருஷ்ணன் அவர்கள் தமது திறப்பு விழா வுரையில் வாசக சாலையின் பயனைப்பற்றியும் அதில் இருக்கவேண்டிய நூல்களைப்பற்றியும் குறிப்பிடும்போது, இப்போது உலகப் பெருநூல்களாக விளங்குவன கீதை, குர்ஆன், பைபிள், சேக்ஷ்பியர் என்பனவே என்று குறிப்பிட்டார்கள். இந்நிகழ்ச்சியில் சொற்பொழிவாளராக இருந்த நம் பேராசிரியர், தம் சொற்பொழிவில் ''உபராஷ்டிரபதி யவர்கள் உலகப் பெருநூல்களாகக் குறிப்பிட்டவற்றுள், நமது திருக்குறளைக் குறிப்பிடவில்லை; தமிழ் நாட்டுக்குத் தாயகமானதும், திருக்குறள் பிறந்ததுமான நம் மதுரைமாநகரில் நிகழும் ஒரு நிகழ்ச்சியுள், உலகப் பொது மறையாகக் கோடற்கு நிரம்பத் தகுதியுடைய நம் திருக்குறளையும் அவற்றுடன் சேர்த்து, உலகம் போற்றும் நம் தத்துவப் பேரறிஞர் தம் திருவாயால் குறிப்பிடாமற் போனது நமக்கு மிக்க ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் அளிக்கின்றது'' என்று எடுத்துரைத்தார். முடிவுரையில் உபராட்டிரபதி யவர்கள், திருக்குறளைக் குறிக்காமல் விட்டுப் போனதுபற்றித் தம் வருத்தத்தை அவையோர்க்குத்



மதுரை, தியாகராசர் கல்லூரி இளங்கோ மன்றம். (ஆண்டு விழா)

தெரிவித்துக்கொண்டார்கள். இவ்வமையத்து இங்ஙனம் ஆசிரியர் பேசுதற்கு எத்துணை மனத்திண்மை வேண்டும்.

நம் பேராசிரியரவர்கள் இம் மதுரைமாநகரிலும், தமிழ் நாட்டு மாவட்டத் தலைநகரங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள கழகங்களுக்குச் சென்று ஆற்றிய சொற்பொழிவுகள் பலப் பலவாகும். அவற்றை யெல்லாம் ஈண்டுரைப்பின் பெருகும்.

**ஒரு கல்வி அதிகாரியின் தருக்கான கருத்தை மாற்றியது:—**

*1928*-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டக் கல்வி அதிகாரியாக இருந்த திரு, கிருஷ்ணசாமி முதலியார், எம். ஏ. பி. எல்., ஓரளவு தமிழறிவும் வாய்ந்தவர். இவர் தம்மைப் போன்றவர்களைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவுக்கு அழைக்காது தமிழாசிரியராகிய நம் பேராசிரியரை அழைத்ததற்கு மனக்காழ்ப்புக் கொண்டிருந்தவர், நம் ஆசிரியர் அவர்களை ஒரு முறை சந்திக்க நேர்ந்தபோது பேச்சுக்கிடையில் இவரது ஆராய்ச்சி ஆழத்தைக் கண்டறியக் கருதி "தொல்காப்பியர் எத்தகைய தாவரத்தை மரமெனக் கூறவேண்டும் என்று சொல்கிறார்" என்று நம் ஆசிரியரை நோக்கித் திடீரென ஒரு வினாவை விடுத்தார். நம்மாசிரியரவர்கள் அதற்குத் தாழ்க்காது உடனே

"புறக்கா ழனவே புல்லென மொழிப
அகக்கா ழனவே மரமென மொழிப"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தை எடுத்துக்காட்டி உள் பொய்யாய், வெளி வயிரமுடையவற்றைப் புல்லினமாகக் கூற வேண்டும். நெல்லும், மூங்கிலும், பனையும், தென்னையும் எல்லாம் புல்லினமே. அகக்காழ்ப்பு (காழ்) உடையவற்றை மரமெனக் கூறவேண்டும். அகக்காழ் = உள் வயிரம். புளி, ஆச்சா, வாகை முதலியன மரமெனற் குரியன என்று நம் பேராசிரியர் விளக்கமாக விடையிறுத்தார். அதனைக்கேட்ட முதலியார் அவர்கள் அப்படியா எனக்கூறி மேல் ஒன்றுங் கூறுது வாளாவிருந்தார். தமிழாசிரியர்களைப்பற்றி எண்மை

யாக எண்ணியிருந்த எண்ணம் முதலியாரவர்கட்கு அன்றோடு மறைந்திருக்குமென்பதில் ஐயமில்லை. நம் பேராசிரியருக்குப் பின் பல்கலைக் கழகச் சொற்பொழிவாற்றிய அறிஞர்களுள் பெரும்பாலோர் ஆங்கில மொழிப் பட்டம் பெறாத தமிழ்ப் பேரறிஞர்களாகவே இருந்ததும் அம் முதலியார் அவர்கள் தம் கருத்துத் தவறானது என்று உணர்தற்கு ஏதுவாகவிருந் திருக்கும். நம் கார்மேகனார் உண்மை உரைப்பதில் யாருக் கும் அஞ்சாது நெஞ்சுரங்கொண்டு பேசித் தமிழாசிரியர்களது மானம் காத்த நிகழ்ச்சிகள் இன்னும் எத்தனையோ உள.

**பல்கலைக் கழகப் பதவிகள் :—**

நம் பேராசிரியர் உறுப்பினராக இருந்து தமிழ்த் தொண் டாற்றிய பல்கலைக் கழகங்களின் குழுவும் அவற்றில் இருந்த ஆண்டுகளின் அளவும் கீழ்வருவன.

1. சென்னைப் பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழுவில் (Board of Studies in Tamil.) தொடர்ச்சியாக 21 ஆண்டுகள். 1949-ஆம் ஆண்டு வரை.

2. சென்னைப் பல்கலைக்கழக இண்டர் பி. ஏ., எம். ஏ. தேர்வாளர் குழுவில் (Board of Examiners) 19 ஆண்டுகள். 1951 ஆம் ஆண்டுவரை. இவ்வாண்டுகளுள் பிற்பகுதி 9 ஆண்டு கள் இக்குழுவின் தலைவர்.

3. அண்ணாமலைப் பல்கலைக் கழக இன்டர் பி. ஏ. எம். ஏ. தேர்வாளர் குழுவில் (Board of Examiners) 10 ஆண்டுகள்.

4. திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத் தேர்வாளர் குழுவில் 1952 வரை இருமுறை 6 ஆண்டுகள். பின்னைய ஓராண்டு அதற்குத் தலைவர்.

5. S. S. L. C. தமிழ்த் தலைமைத் தேர்வாளராக 1947 முதல் 1949 வரை.

6. S. S. L. C. Board அட்வைசரி கமிட்டியில் 2 ஆண்டு கள். 1928 முதல்.

7. சென்னை சர்வீஸ் கமிஷன் தேர்வாளர் குழுவில் 3 ஆண்டுகள்.

8. சென்னைப் பல்கலைக்கழக அக்கடமிக் கவுன்ஸிலில் 1949 வரை 3 ஆண்டுகள்.

9. கோவை அரசாங்கக் கல்லூரிக்கு 1945-ல் சென்ற சென்னைப் பல்கலைக் கழகக் கமிஷனில் உறுப்பினர்.

10. சென்னை அரசாங்க கல்லூரிக்கு 1950-ல் பல்கலைக் கழக தனிக் கமிஷனர்.

11. மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வுக் குழுவில் பல ஆண்டுகள்.

12. மதுரைத் தமிழ்ச்சங்கக் கல்விக் குழுவில் 6 ஆண்டுகள்.

13. மதுரைத் தமிழ்ச்சங்க ஆலோசனை குழுவில் 1956 முதல் இப்போதும், இங்ஙனம் இத்தனை குழுக்களிலும் இத்தனை ஆண்டுகள் உறுப்பினராக இருந்த பெருமை, அக்காலத்தில் தமிழாசிரியர்களுள் எவர்க்குமின்றி நம் பேராசிரியர்க்கே சிறப்பாக உரியதாகும்.

## பேராசிரியர் எழுதிய நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும்

1. நல்லிசைப் புலவர்கள் - இது பெருந்தலைச் சாத்தனார் முதலிய ஆறு புலவர்களது வரலாற்றினையும், அவர்களது பாடற் சிறப்புக்களையும் ஆராய்ச்சியுடன் வெளியிடுவது.

இது சென்னைப் பல்கலைக்கழகத்தில் மூன்று முறை இண்டர் மீடியட் வகுப்பிற்குப் பாடமாக வைக்கப்பெற்றது. அன்றியும் திருவாங்கூர், மைசூர், அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களிலும் பாடப்புத்தகமாக வைக்கப்பெற்றது.

2. கண்ணகி தேவி - இது எஸ். எஸ். எல். சி. வகுப்பிற்கு இரு முறை பாடப் புத்தகமாக வைக்கப்பெற்றது.

3. ஆபுத்திரன் வரலாறு.

4. காப்பியக் கதைகள்

5. மலை படு கடாம் ஆராய்ச்சி.

6. மதுரைக்காஞ்சி ஆராய்ச்சி.

7. பாண்டியன் நெடுசெழியன்.

8. புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி.

9. ஒட்டக்கூத்தர் மூவருலாவைப்பற்றிய ஆராய்ச்சி.

10. கூலவாணிகன் சாத்தனார் - ஆராய்ச்சிக் கட்டுரை.

11. நளவெண்பாவுக்கு - முதற்பகுதி விருத்தியுரை.

12. களவழியிற் குறித்த கழுமலம் - ஆராய்ச்சி.

13. குறுந்தொகையில் ஒரு பாட்டின் உரை - ஆராய்ச்சி.

14. திருவள்ளுவரும் திருக்குறளும் - ஆராய்ச்சி.

15. தமிழ்மொழியின் மறுமலர்ச்சி.

இவற்றுள் நல்லிசைப் புலவர்களை டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், மைசூர் பல்கலைக் கழகத்தில் பி. ஏ., வகுப்புக்குப் பாடப் புத்தகமாக வைத்த செய்தியைக் கடிதமூலம் தெரிவித்து, புத்தகத்தையும் பாராட்டியிருந்தார்கள். பேராசிரியர், K. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தாம் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்றில், நம் ஆசிரியர் அவர்களைப்பற்றி எழுதுங்கால் இப் புத்தகத்தைப்பற்றிச் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள்.

## கார்மேகனார் ஒரு கவிஞர்

இவர்கட்குச் செய்யுள் இயற்றும் திறன் இயற்கையிலேயே அமைந்திருந்தது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கல்வி பயிலுங்கால் விளையாட்டாக மாணவர்கள் முறிப்படி கொடுத்துப் பாடச்சொல்லும் பாடல்களை உடனுக்குடன் இயற்றிக் கொடுப்பதுண்டு. இவ்வாசிரியர், தமது 22-வது வயதில் 1913-இல் இராமநாதபுரம் சென்றிருந்தவர், சேது சமஸ்தான வித்துவான் ரா. ராகவையங்கார் அவர்களைக் கண்டு உரையாடியபோது ஐயங்காரவர்கள் நம் பேராசியரை நோக்கி '' இப்போது சேதுபதிகள் அரண்மனையில் நடக்கும் நவராத்திரி விழாவிற்கு வந்து மற்றப் புலவர்களைப்போல சேதுபதி அவர்கள்மீது வாழ்த்துப் பாடல்கள் பாடலாமே யென இவர்கள்பாலுள்ள அன்பினால் குறிப்பிட்டார்கள். அங்ஙனமே நம் ஆசிரியர் அவ்விழாவில் இராஜராஜேஸ்வரி அம்பிகையின் சந்நிதி

*யிலும், சேதுபதிகள் முன்னிலையிலும் ஒன்பது நாட்களும் பதி னெட்டுப் பாடல்கள் பாடினார்கள். அவற்றுள் சில பாட்டுக் கள் கீழ்வருவன :—*

1. பூந்தண் மலர்க்காப் புடையுடுத்துப் பொலியு முகவா புரிபுரக்கும்
புகழ்சேர் சேது குலவேந்தன் புனித குணத்தா னருண்மனத்தான்
காந்தண் மலர்நேர் கரமாதர் காமுற் றடையுங் காமனருங்
கவிஞர் தமக்குக் கனகநிதி களிப் போடளிக்கு மெழிலியனான்
பாந்தண் முடிசேர் புவியரசர் பராவும் ராஜ ராஜவள்ளல்
பலவும் படைத்துப் படிபுரந்து பன்னா ளோங்க வருளுதியால்
தேந்தண் மலர்நேர் பதயுகளச் செல்வீ யரனார் மனமகிழுந்
தேவி தேவை யரையரரண் மனைசேர்ந் திலங்குந் திரிபுரையே

2. பஞ்சலட் சணவிலக் கியபார காவியம் பலவும் படித்துணர்ந்தோன்
பாரதிண் புயவேளி ராஜரா ஜேஸ்வரன் பலவுலகு தொழுசேதுமன்
பகருந் தயாளகுண சுமுகனர னடிதொழும் பத்தியா னுயர்புத்தியான்
கிஞ்சுக நிகர்த்தசொன் மடவார்கள் மயலுடன் கிழியெழுது கின்ற வெழிலான்
கீதவாத் தியவினோ தன்கோடி காவலன் கேடில்நற் றமிழ்நாவலன்
கிளருமரி யாதனத் தான்கந்த மாதனத் தான்கவிக் கேதனத்தான்
மஞ்சுசெறி சோலைசூழ் தேவைநக ராதிபதி மகிதல மளிக்கும்வள்ளல்
மாகம் பராவுதரு புகழினன் தளவநன் மாலையணி புயபூதரன்
மருவுமிர ணியகெர்ப்ப யாஜிரவி குலமுத்து விஜயரகு நாதமரபோன்
எஞ்சுத லிலாதநற் கல்விவய திருநிதியொ டிறைமையும் முறைமை யுறவே
ஏற்றமுறு பர்வத குமாரியைக் குமரனைமு னீன்றதற் பரையைஞான
மிலகுமடி யார்க்கிதந் தருமருந் தைப்பணிந் திதயமுற வாழ்த்து வோமே.

*கட்டளைக் கலித்துறை*

3. பிரசங்க மாரி பொழிபாற் கரன்றவப் பேற்றிலுற்றோன்
அரசங்கம் யாவு மமைந்த பிரான்றமி ழாரணங்கை
வரசங்க மேற்றி வளர்ப்பவன் றேவை வளநகரான்
கரசங்க மாறங்கை! நின்னடி யானவற் காத்தருளே.

### சந்த விருத்தம்

4. சீத மாம்தி போலநி லாவிய தேசு ராஜசி காமணி தேவையன்
சேது ராஜ குலாதிப னேருறும் - ஜெயமாது
சேர்பு யாசல வேள்மத வாரணஞ் சேர்ச மூகசே னுபதி மாபதி
சேணு லாவரு மாகவி கேதனன் - ஜெகவீரன்

போத வேதிய ராசியி னுயர் பூமி யோர்தவ மாகிய நீதிமன்
போது மேவிய மாதருண் மேயவன் - புலவோரின்
போக வேமிடி யார்நிதி யேதரு போக பூமியி னோர்தரு வானவன்
போது சேர்தள வார வரோதயன் - புவியோர்தம்

காது மாபெரு பாதகம் வேறுசெய் காசில் சேதுத ராபதி யேசறு
காவ லோர்பணி பாதச ரோருகன் - கவிராஜன்
காவி கேதன மாதி பதாகையன் காரு லாவரு மால்பொதி யாசலன்
காத லாருமை பாகனை யேதொழு - கனயோகன்

தீதி லாதபே ராயுள ளுகவெண் டோளி பாலவி லோசனி தேவிவன்
தீய மாமகி டாசுர காதகி - திரிசூலி
தேன ளாவிய தாதகி சேர்நறு சீர்சடாடவி தேவ சிகாமணி
சீல நாயகி தாயகி யேயருள் - புரிவாயே.

### சந்தக் கலித்துறை

5. அளிகோடி யிசைபாடு தளவார மணிமேரு நிகர்தோளினன்
களியீகை பொறைசீல நிறையாதி குணமேவு கலைநாவலோன்
தளிர்நேரு பதமாதர் மதன்நீதி நெறியோடு தரையாள்பவன்
ஒளிர்தேவை நகராதி பதியாயுள் பலவாக வுலகாளவே.

***சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் (Vice-chancellor) Dr. A. லட்சுமணசாமி முதலியார் மதுரை அமெரிக்கன் கல்லூரி 55-வது ஆண்டு விழாவில் 1936-ஆம் ஆண்டு தலைமை தாங்கியபோது நம் பேராசிரியர் பாடிய வரவேற்புப் பாடல்***

1. சீருந் திருவு மிகுந்து சென்னை திகழும் பல்க லைக்கழகச்
சிறப்பார் துணைவேந் தர்பதவி தேடியடைய வுவந்தேற்றங்
காரும் புகழ இந்நாளில் அரியாதனத்தி லமர்ந்திடுமெம்
அதிபா!வருக அரசர்புகழ் அறிவோய்! வருக அருந்தமிழும்

ஒரு மேன்மை யாங்கிலமும் உயரும் மருத்து வக்கலேயும்
உணர்ந்தோய் வருக! கற்றவர்கட் கொருதாய்வருக! உயர்
வனைத்தும்
சாரும் டாக்டர் லட்சுமண சாமி வருக! சபைக்கினிமை
தருவோய் வருக! தமிழ்நாட்டின் தவமே வருக வருகவே!

## எங்கள் நாடு

*இது குறித்து ஆசிரியர் பாடிய பாடல்களுள் இரண்டு பாடல்கள் :—*

1. சங்கம் வைத்துத் தமிழ்பயின்று தகைமைபெறு நாடு
தலைமைமிகு புலவர்தமைத் தந்ததிரு நாடு
வங்கமிசைக் கடல்கடந்து வளங்கொணர்ந்த நாடு
வகுத்தஅறம் பலபுரிந்து வயங்குகின்ற நாடு
துங்கமிகும் வீரர்தமைத் தோற்றுவித்த நாடு
துகளறுசீர்ப் போர்முறையால் தூய்மைபெறு நாடு
எங்குமெழிற் பொழில் சூழ்ந்து ஏர்திகழும் நாடு
எவ்வளமும் கொழித்தயலார் இசைக்குமிசை நாடு.

2. கைத்தொழிலும் வாணிகமும் கதித்துவளர் நாடு
கவின்கலேயும் உழுதொழிலும் கனிந்துமிளிர் நாடு
முத்தமிழின் இனிமையெலாம் முழுதுணர்ந்த நாடு
மூவேந்தர் குடைநிழலில் முன்பமர்ந்த நாடு
வைத்தநிதி வறியவர்க்கே வழங்குவண்மை நாடு
வானவரும் தானவரும் வந்திறைஞ்சும் நாடு
எத்திறத்தும் உவமையிலா திலங்குதமிழ் நாடு
எத்திசையும் இசைமணக்க இருந்தவெங்கள் நாடே.

## தமிழ்த்தாய் வாழ்த்து என்ற தலைப்பில் பாடிய தாழிசைகளுள் சில :—

1. தென்னருயிர் போல்வளர்த்த செந்தமிழ்த்தா யேயுனது
பொன்னடியை யாம்வணங்கிப் புகழ்ந்துநனி வாழ்த்துதுமே.

2. உலகிலுள்ள மொழிகளுள்ளே உயர்தனிச்செம் மொழியாக
இல்கிமிகச் சீர்படைத்த இருந்தமிழ்த்தாய் வாழ்த்துதுமே.

3. கற்றேன்றி மண்தோன்றாக் காலத்தே மொழிகளுள்ளே
முற்றேன்றியும் மூவா மொழியரசி! வாழ்த்துதுமே.

4. பல்மொழிகள் தமையீன்றும் பகரும்இளம் பருவநலம்
அல்காத தமிழ்க்கன்னி அன்னை! உன்னை வாழ்த்துதுமே.

## 1956-ம் ஆண்டு
## பொங்கல் திருநாளில் பாடியது

### தாழிசை.

1 உடற்குறுதி தருமிந்த உணவுநாள் விழாவில் அகம்
நடற்குரிய கருத்தொன்று நம்மொழியைப் பற்றியதே

2 நம்நாடு நலவுரிமை நயந்தடைந்த தேயெனினும்
நம்மொழிதான் இனுமுரிமை நன்குபெற வில்லையந்தோ!

3 அரசுமொழி யாவதற்கு ஆற்றல்தமிழ்க் கில்லையென்பார்
பரசுகலைத் தமிழ்மொழியைப் படித்தாய்ந்து பாராரே

4 மூவேந்தர் ஆட்சிசெய்த மொழிதமிழே யல்லாது
நாவேந்து பிறமொழிதான் யாதென்று நவில்வாரே

5 தாய்மொழியைக் கல்லாதார் தாங்கள்ஆங் கிலவடிமை
ஆய்முடிபு கூறுவதும் அறநெறியின் பாற்படுமோ

6 பள்ளிகளிற் கலைபயிற்றப் பயன்படுமோ தமிழென்ன
எள்ளியுரைப் பாரிவர்கள் இயற்றமிழின் இயல்புணரார்

7 இந்தியெனும் பெருவெள்ளம் இந்நாட்டில் நம்தமிழை
உந்தியிட வந்திடுமேல் அதைஉந்த முந்துவமே

8 மொழிக்குழுவின் முன்னின்று மூவாத் தமிழ்மொழியை
அழிக்கவரும் எம்முடிபும் ஒழிக்கவரும் எனஅறைவீர்

9 புத்தாண்டு பொலிந்திடவும் புலஞ்செழித்து மலிந்திடவும்
முத்துநிகர் தமிழ்த்தாயை முறையாக வணங்குதுமே

தமிழ்த்திருநாள் கொண்டாடும் தகைமைமிகு தமிழ்ப்பெரியீர் !
அமிழ்துதரும் தமிழ்த்தாயின் அடிபோற்றல் கடனுமே

தமிழ்த்தாய் போற்றுதும் தமிழ்த்தாய் போற்றுதும்
அமிழ்துறழ் அறிவாம் பால்சுரந் தளிக்கும்
தமிழ்த்தாய் போற்றுதும் இன்றே
இமிழ்கடல் வரைப்பின் தமிழகத் தீரே !

இவ்வாசிரியர் தமது மாணவர் நிலையில் வடமொழி தென்மொழி என்ற வேறுபாடறிய வியலாது ஊட்டிய கல்விப் பயிற்சியால் ஆசிரியர், இளமையில் பாடிய பாட்டுக்களில் பத்தொன்பதாம் நூற்றூண்டுத் தமிழ்ப் புலவர்கள் பாட்டுக்கள் போல வடமொழி மிகப் பயின்றும் ஆசிரியர் அலுவல் மேற்கொண்டு ஆராய்ச்சி ஆர்வம் அரும்பிய பின்னர், மொழி வரலாற்றுண்மை ஒருவாறறிந்த பின்னர், தனித்தமிழ் நடையின் தகைமையும், செவ்வியும் உணர்ந்த பின்னர் பாடிய பாட்டுக்களில் வடமொழிக் கலப்பு அருகியுமிருக்கும், தமிழ் மொழியில் இன்பங் கொழிக்கும் சங்கப் புலவர்கள் பல்லோர் பாடல்களும், சிலம்பு முதலிய சுவை அலம்பும் காப்பியக் கடல்களும் பலவிருக்க இனிப் பாட்டுகள் நம் மொழியில் பெருக வேண்டுவதின்று என்று கருதிய கருத்தானும் மாணவர்க்குத் தமிழறி வுறுத்தல், பாடற்கு உரைகாண்டல் பண்டைப் பனுவல்களை ஆராய்தல், செந்தமிழ் மொழியின் நந்தாப் பெருமையைச் சொற்பொழிவுகளால் தெளிய வுணர்த்தல் முதலியனவே இற்றைக்கு வேண்டற்பாலன என உளம் கொண்டமையானும் நம் ஆசிரியர் செய்யுள் யாக்கும் செயலை யாப்புறவாக மேற்கொள்ளாது நெகிழ்ந்தனர் ; எனினும் அமயம் வாய்க்கும் போதெல்லாம் சிறப்புப்பாயிரச் செய்யுள்களாகவும், மங்கல வாழ்த்துப் பாடல்களாகவும், கையறு நிலைச் செய்யுள்களாகவும் பாடிய பாட்டுக்கள் பலப்பலவாம். இன்றும் வேண்டும் போதெல்லாம் வருத்தமின்றி நாளொன்றுக்குப் பல பாட்டுக்கள் பாடும் திறனுடையவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் 22-வது வயதில் நவராத்திரியில் சேதுபதி புகழ் மாலையாகப் பாடிய பாட்டுக்களை ஊன்றி

நோக்கின் இவைகள் இவ்வயதில் பாடியவைகளா என வியக்கத்தக்கனவாக விருக்கின்றன.

## பேராசிரியரவர்களின் குடும்பம்

இவர்களது தந்தையார் 16 ஆண்டுகளுக்கு முன்னரும், தாயார் 8 ஆண்டுகளுக்கு முன்னரும் இவ்வுலக வாழ்வை நீத்தனர். நம்மாசிரியருக்கு நவநீதக்கிருஷ்ணக் கோனூர் என்ற தமையனுரும், வேணுகோபாலன் என்ற தம்பியும், மாணிக்கச்சிகப்பி, கோதைநாச்சியார், ராதா, பிருந்தா என்ற நான்கு தங்கைமார்களும் இருக்கின்றனர். நம் பேராசிரியர்க்கு கா. ஆ. கிருஷ்ணன், மணவாளன், இராசகோபாலன் என்ற மூன்று மகன்களும், சீதாலெட்சுமி, சௌந்தரியவல்லி, சாரதாமணி, இராசலட்சுமி என்ற நான்கு மகள்களும் இருக்கின்றனர். மகன்கள் இருவருக்கும், மகள்கள் மூவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. சீதாலெட்சுமியின் கணவர், திரு, எஸ். முத்துக்கோனூர் பி. ஏ., எல். டி., மதுரை மாவட்டக் கழக வத்தலக்குண்டு உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராகவும், இரண்டாவது மகள் சௌந்தரியவல்லியின் கணவர் திரு, A. T. N. நாகலிங்கம் அவர்கள் பள்ளிப் பாடப் புத்தக வெளியீட்டாளராகவும் (Educational Publisher) மூன்ருவது மகள் சாரதாமணியின் கணவர் திரு, V, கார்மேகம் மதுரை ''தமிழ் நாடு'' நாள் இதழ் அலுவலகத்தில் விளம்பரப் பிரிவில் உதவி மானேஜராகவும் இருக்கின்றனர்.

### குடும்பப் பிள்ளைகளின் கல்வி நிலை :—

ஆசிரியர் அவர்களின் மூத்த மகன் கே. ஏ. கிருஷ்ணன் சென்னைப் பல்கலைக்கழக M. A., பட்டம் பெற்று, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்து வருகிருர். இரண்டாவது மகன் மணவாளன், உயர்நிலைப் பள்ளிப் படிப்புடன் குடும்ப அலுவல் பார்த்து வருகிருர். மூன்ருவது மகன் இராசகோபாலன் B. A. (Junior) வகுப்பில் படித்து வருகிருர். சீதாலெட்சுமி, சௌந்தரியவல்லி என்ற இரண்டு மகள்களும் முறையே. மூன்ருவது, நான்காவது



பேராசிரியர் குடும்பமும், பேரன் பேத்திகளும், மருமக்களும்.

படிவப் படிப்பு படித்தவர்கள். மூன்ருவது மகள் சாரதா மணி சென்னைப் பல்கலைக்கழக இன்டர்மிடியேட் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். நான்காவது மகள் இராஜலட்சுமி சென்னைப் பல்கலைக்கழக பி. ஏ. பட்டம் பெற்றுள்ளார். பேரன்கள் K. கோபிநாதன் B. Com (Senior) வகுப்பிலும், K. சீனிவாசன் Pre-university Class லும் படிக்கிருர்கள். M. முருகன் S. S. L. C. வகுப்பு, உத்தமன் S. S. L. C. வகுப்பு, பேத்திகளில் M. சுலோசனு சென்னைப் பல்கலைக்கழக B.Sc தேர்வில் முதல் தரத்தில் (First class) தேறிப் பட்டம் பெற்றுள்ளார். M. ஜெயலெட்சுமி S. S. L. C. தேர்ச்சிபெற்று இன்டர்மீடியட் முதல் வகுப்பு வரை படித்துள்ளார். M. ஞானசுந்தரி Pre-University classல் படிக்கிருர். நம்மாசிரியருக்கு மகன் பிள்ளைகளும், மகள் பிள்ளைகளுமாக 13 பேத்திமார்களும், 16 பேரன்மார்களும் நலத்துடன் இப்போது இருக்கின்றனர்.

காரைக்குடி அழகப்பா கல்லூரிப் பௌதிகக் கலைத்துறைத் தலைவராக (Proffessor and Head of the department of physics) இருக்கும் திரு, K. G. கிருஷ்ணன் M. Sc. நம் பேராசிரியரது சிறிய தந்தையார் மகனுவர். மதுரை அமெரிக்கன் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருக்கும் வித்துவான், திரு, N. கோவிந்தன் நம் ஆசிரியரது தங்கை மகனுவார்.

## பேராசிரியரவர்கள் வாழ்க்கையில் உதவியாளராக இருந்த பெரியார்கள்:—

சென்னை யாதவகுல திலகர் M. அப்பாதுரை பிள்ளை அவர்கள், சென்னை T. M. சிவராம சேதுப்பிள்ளை M.A., B.L., அவர்கள், திருவநந்தை சட்டநாதக் கரையாளர் M. A., B. L., அவர்கள், சென்னை M. R. அப்பாதுரை பிள்ளை B. A., அவர்கள், L. S. கரையாளர் B. A., B. L., அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L, அவர்கள், தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள், S. இராமசாமி நாயுடு M. A, B. L., M. L. A. அவர்கள், திரு. இ. மா. கோபால கிருஷ்ணக்கோனுரவர்கள், திரு T.M. மீனுட்சிசுந்தரம் பிள்ளை

யவர்கள், முதலியோர்; இவர்கள் உளம் கூர்ந்து நெறியிற் புரிந்த உதவிகளை ஆசிரியர் என்றும் மறவாது உளத்திற் கொண்டு போற்றி வருகின்றார்கள்.

பேராசிரியரவர்களிடத்து அன்பும், நண்பும் உடையவர் களாய் இவர்கள் அகத்திற்கு வருகை புரிந்த புலவர் பெருமக் களும் பெரியார்களும் :—

பண்டிதமணி, திரு. கதிரேசன் செட்டியார்வர்கள் வெள்ளகால் திரு. சுப்பிரமணிய முதலியாரவர்கள், திரு. டாக்டர் R. P. சேதுப்பிள்ளையவர்கள், சேதுசமஸ்தான வித்வான் ரா. ராகவையங்காரவர்கள், பேராசிரியர் திரு. வையாபுரிப்பிள்ளை யவர்கள், கவியரசர் திரு. பாரதிதாசன் அவர்கள், பேராசிரியர் டாக்டர் திரு, மு. வரதராசனாரவர்கள், பேராசிரியர் M. கந்தசாமி முதலியாரவர்கள், நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், கரந்தைக் கவியரசு திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள், கரந்தைச் தமிழ்ச் சங்கக்காவலர் திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள், சென்னைப் பல்கலைக் கழக அராபிக் ரீடர் திரு, உசேன் நைனார் அவர்கள், திரு, நாவலர் டாக்டர் திரு, S. S. பாரதியாரவர்கள், புலவரேறு திரு. வரதநஞ்சைய பிள்ளையவர்கள், புலவர் திரு. கந்தசாமிப் பிள்ளையவர்கள், திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள், நாமக்கல் கவிஞர், திரு, இராமலிங்கம் பிள்ளையவர் கள், பேராசிரியர் திரு, S. ஆறுமுக முதலியாரவர்கள், பேரா சிரியர் திரு, A. சிதம்பரநாதச்செட்டியாரவர்கள். பேராசிரியர் திரு, லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்யவர்கள், பேரா சிரியர் திரு, G. சுப்பிரமணியபிள்ளை யவர்கள், திருவனந்தை திரு, பன்னிருகைப் பெருமாள் முதலியாரவர்கன், கவிமணி, தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள், பேராசிரியர் திரு. துரைக் கண்ணு முதலியாரவர்கள், பேராசியர் திரு. சுப்பு ரெட்டியா ரவர்கள், சிந்தாமணிச் செல்வர் வேணுகோபாலப் பிள்ளை யவர்கள், பேராசிரியர் திரு, கு அருணாசலக் கவுண்டரவர்கள், பேராசிரியர் திரு. A. அருளப்பன் அவர்கள், பேராசிரியர் திரு. குரூஸ் அந்தோணி அவர்கள், செயின்ட் ஜான் கல்லூரித் தலைவர் திரு. வேதசிரோன்மணி அவர்கள், திரு. உலக உழியனார், இந்துக் கல்லூரித் தலைவர் திரு. A. ஞானமுத்து

அவர்கள், கோவை அரசினர் கல்லூரித் தலைவர் திரு. இராம நாத பிள்ளையவர்கள், பேராசிரியர் திரு, இராசாக்கண்ணு அவர்கள், பேராசிரியர் விஸ்வநாதனவர்கள், முத்தமிழ்க் கலைஞர் ஔவை T. K. சண்முகம் அவர்கள், பேராசிரியர் நடேச சர்மாஅவர்கள், முள்ளிக்குளம் வழக்கறிஞர் திரு, இராமசாமிக் கோனாரவர்கள், திரு. L. S. கரையாளர் அவர்கள், திரு M. S. கரையாளரவர்கள், திரு. சக்கரபாணி நம்பியார் அவர்கள், திருச்சி பேராசிரியர் நடேச முதலியாரவர்கள், திருச்சி கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள், திருக்குறளார் முனிசாமி அவர்கள், பேராசிரியர் திரு ஐயன் பெருமாள் கோனாரவர்கள், பேராசிரியர் அன்பு கணபதி அவர்கள், திரு. பேராசிரியர் இராசாப்பிள்ளை யவர்கள், கும்பகோணம் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள்; பேராசிரியர் C. ஜெகநாதன் அவர்கள் முதலியோர்; இவர்களெல்லாம் இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழக அறிஞர்கள் யாவராலும் நன்கறியப் பெற்றவர்கள். இப்பெரியார்களது வருகையால் நம் பேராசிரியரிடத்து இவர்கள் வைத்திருந்த அன்பின் தொடர்பும், நன்மதிப்பும் எத்தகைமையன வென்பது நன்கு விளங்கும்.

பேராசிரியர் கார்மேகனார் 1951-ம் ஆண்டு கல்லூரி ஆசிரியர் பணியினின்றும் நீங்கி ஓய்வு பெற்ற பின்னர் மாணவர்கட்கு நல்ல தமிழ்ப் புத்தகங்கள் வெளியிட வேண்டுமென்று விரும்பிப் புத்தக வெளியீட்டாளராக இருந்து கொண்டு பல புத்தகங்கள் எழுதியும், எழுதுவித்தும் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். அன்றியும் அமயம் வாய்க்கும்போதெல்லாம் தம்மை வந்து அழைக்கும் தமிழ்க் கழகங்களுக்குச் சென்று தலைமை தாங்கியும், சொற்பொழிவு நிகழ்த்தியும், தமிழ்த் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்றார்கள்.

**குணவியல்பு:—** நம் ஆசிரியர் தம் வாழ்க்கையை இயன்ற அளவு புனிதமாகவே நடத்த வேண்டுமென்ற கடைப்பிடியுடையவர்கள். மானம் அழியாமற்போற்றி யொழுகவேண்டுமென்ற எண்ணம் பெரிது முடையவர்கள். பிறருக்கு இன்னா செய்தலைக் கனவிலும் கருதாதவர்கள். இன்னா செய்தவர்க்

கும் இனியவே செய்யும் மனப்பான்மை படைத்தவர்கள். வானகம் கையுறினும் பொய்யோடு இடைமிடைந்த சொல் சொல்லலாகாதென்ற குறிக்கோளுடையவர்கள். பிறர் பொருளைப் பெற்று வாழுதற்கு ஒரு சிறிதும் ஒருப்படாத உள்ளமுடையவர்கள். குறியெதிர்ப்பைக் கருதாது உதவி செய்யும் பெற்றியுடையவர்கள். நேர்மையினின்றும் பிறழு கின்றவர்களைச் சீறிக் கடியும் மனத்திண்மை பூண்டவர்கள். தமிழ் மொழியை எள்ளிப் பழிக்கும் எவரையும் தகைந்து நிறுத்தி இடி முழக்கம் புரியும் உரமுடையவர்கள். பிறர் துன்பம் துடைக்க முற்படும் இரக்கமும் குழைவும் உடைய அகமுடையவர்கள். தமிழ்ப் புலவர்கட்கு உலக அறிவு போதாது என்று கருதுகின்றவர்களைத் தம் கருத்துத் தவறு எனக் கருதுமாறு செய்யும் பேச்சுவன்மையும் முகவிலாசமு முடையவர்கள். செய்நன்றி மறவாத சீரிய குணமுடைய வர்கள்.

பேராசிரியரவர்கள் மதுரை மாநகரில் வையை யாற்றின் வடகரைப் பகுதியிலுள்ள கோகலே வீதியில் இருபது ஆண்டு கட்கு முன்னரே அகமொன்று அமைத்து அதனுள் தங்கி மனைவி மக்கள் புடைசூழ மகிழ்ச்சியுடன் மனை அறம் நடைபெற வாழ்ந்து வருகின்றார்கள். ஆசிரியரவர்கட்கு வயது 65 ஆகி யும் முதுமை முதிராது இளமை எழுச்சியுடனே இருந்து வருகின்றார்கள்.

வாழ்க கார்மேகனார்; வாழ்க நற்றமிழ்;
வாழ்க தமிழகம்.

இங்ஙனம்,
பேராசிரியரது உழுவலன்பன் ஒருவன்.

MADURA

MADRAS RIPON PRESS
MRP
• PUDUKKOTTAI •